உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 12 கார்த்திகை 22ஆம் நாள் வெள்ளிக்கிழமை 08 டிசெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

சம்பந்தனுடன் பேச விரைந்தது ரெலோ

யாழ்ப்பாணம், டிசெ.8

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும், ரெலோ அமைப்புக்கும் இடையே இன்று சந்திப்பு நடக்கவுள்ளது.

கொழும்பில் நடக்கும் இந்தச் சந்திப்புக்காக கட்சியின் முக்கியதலைவர்கள் கொழும்புக்குப் பயணமாகியுள்ளனர்.

தமிழரசுக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று ரெலோ முடிவெடுத்தது. இரா.சம்பந்தன் சார்பில் ரெலோக் கட்சியின் தலைவர் செல்

>> 25

ரெலோவின் முயற்சிகள் தோல்வியில்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 8

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்த ரெலோக் கட்சி வேறு கூட்டணி அமைப்பதற்கு எடுத்த முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

தனித்து தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் அல்லது தமிழரசுக் கட்சியுடன் இணைந்து களமிறங்க வேண்டும் என்ற நிலமை அந்தக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

ஆசனப் பங்கீட்டில் ஏற்பட்ட முரண்பாட்டால் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று அறிவித்தது ரெலோ அமைப்பு. அறிவிப்பின் பின்னர் நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றான கட்சிகளுடன் சந்திப்புகளை நடத்தியது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பை முதலில் சந்தித்துப் பேசியது. தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஈ.பி.ஆர்.எல்.எவ். மேற்கொள்ளவிருந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதைப் பிற்போடுமாறு கோரியது. அதற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். இணங்கவில்லை.

அடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணியின்

>> 25

முதலாவது சுயேச்சைக் குழு கட்டுப்பணம் செலுத்தியது

யாழ்ப்பாணம், டிசெ.8

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக சுயேச்சைக் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணத்தில் கட்டுப்பணம் செலுத்தியது.

இதுவரை கட்சிகள் கட்டுப்பணம் செலுத்தியிருந்த நிலையில் கட்டுப்பணம் செலுத்திய முதலாவது சுயேச்சைக் குழு இதுவாகும்.

>> 25

திருமலையில் கட்டுப்பணம் செலுத்தியது தமிழரசுக் கட்சி

யாழ்ப்பாணம், டிசெ.8

திருகோணமலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி நேற்றுச் செலுத்தியது.

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நேரில் சென்று கட்டுப்பணத்தைச் செலுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரி நகர சபைக்கான தேர்தலில் போட்டியிடு

>> 25

கூட்டமைப்பு எம்.பிக்களை கொழும்பு வர அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ.8

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நாளை நாடாளுமன்றில் ஒன்றுகூட வேண்டும் என்று கூட்டமைப்பின் தலைமை அறிவுறுத்தியுள்ளது. கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்பட்டுள்ள சூழலில் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

>> 25

நியாயமாக நடந்தால் களமிறங்கும் புளொட்

இல்லையெனில் தேர்தலிலிருந்து ஒதுங்குவதென முடிவு

யாழ்ப்பாணம், டிசெ.8

நியாயமான ஆசனப் பங்கீடு வழங்கினால் ஏற்றுக் கொள்வது. இல்லை என்றால் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதில்லை. எந்தக் காரணத்துக்காகவும் தமிழ்க் கூட்டமைப்பிலிருந்து வெளியேறுவதில்லை என்று தீர்மானித்துள்ளது புளொட்

>> 04

ஆசனப் பங்கீட்டுப் பிரச்சினைக்காக கூட்டமைப்பை உடையவிடோம்

சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 8

ஆசனப் பங்கீட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவு என்ற பேச்சுக்கே இடமில்லை. தேவையான விட்டுக்கொடுப்புக்களைச் செய்து நாம் ஒரே அணியில் பயணிப்போம் என்றார் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு கூறினார்.

>> 25

கிளிநொச்சியில் இளைஞனை குத்திக்கொன்ற நபருக்கு தூக்கு

யாழ்ப்பாணம் டிசெ 8

கிளிநொச்சியைச் சேர்ந்த 29 வயது இளைஞனைப் போத்தலால் குத்திக் கொலை செய்த 2 பிள்ளைகளின் தந்தைக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று நேற்றுத் தூக்குத் தண்டனை விதித்தது. வழக்கின் இரண்டாம் எதிரியின் குற்றம் நிரூபிக்கப்படாததால் அவர் விடுவிக்கப்பட்டார்.

2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி கிளிநொச்சி உதயநகரில் வேலுப்பிள்ளை சசிரூபன் (வயது 29) போத்தலால் குத்திக்கொலை செய்யப்பட்டார். அவரது சடலம் கல்லுடன் கட்டப்பட்டுக் கிணற்றில் போடப்பட்டிருந்தது.

>> 25

தமிழ்த் தேசிய விரோதிகளின் ஆசைப்படி நடந்துள்ளார் சுரேஸ்

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடும் சாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 8

மாற்றுத் தலைமை உருவாகக் கூடாது என்று இலங்கை அரசும், சில வெளிநாட்டுச் சக்திகளும் உள்ளடங்கலாக தமிழ்த் தேசிய அரசியல் விரோதிகள் விரும்பியதை சுரேஸ் பிரேமச்சந்திரன் இன்று நடத்தி முடித்திருக்கின்றார் என்று கடுமையாகச் சாடினார் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

"தமிழ்த் தேசிய விரோதிகளின் ஏமாற்று

>> 25

அரசியல் கைதிகளை சந்தித்தது ஐ.நா. குழு

யாழ்ப்பாணம், டிசெ.8

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை ஐ.நாவின் சிறப்புக் குழுவினர் சந்தித்தனர். அங்கு அவர்கள் அவதானித்ததை ஐ.நாவுக்கு

>> 25

தமிழரசுக் கட்சி ஆதரவுத் தளத்தை குறிவைக்கும் பங்காளிக் கட்சிகள்

ஒற்றுமைக்காக விட்டுக் கொடுக்கத் தயார் என்கிறார் மாவை

யாழ்ப்பாணம், டிசெ.8

தமிழரசுக் கட்சிக்கு வெற்றி வாய்ப்புள்ள சபைகளை குறிவைத்து அவற்றைத் தமக்கு ஒதுக்க வேண்டும் என்று பங்காளிக்கட்சிகள் நெருக்குகின்றன. அதுவே குழப்பத்துக்குக் காரணமாகியது என்று குறிப்பிட்டுள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிப்புடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிடையே பிளவு

>> 25

பண்டிகைக் காலத்திற்கென DFCC வங்கியிடமிருந்து

பரிசு வட்டி!

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

மேலும் சிறந்த வட்டியுட்பட இன்னும் பல நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு இன்றே நீங்களும் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

- மருத்துவ மற்றும் ஆயுட் காப்புறுதி
- சிரேஷ்ட பிரஜைகளுக்கு விசேட வவுச்சர்

DFCC வங்கி

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

நொத்தாரிசாக இருவர் நேற்று சத்தியப்பிரமாணம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இலட்சுமணன் இளங்கோவன், யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) சுப்பிரமணியம் முரளிதரன் ஆகியோர் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் நொத்தாரிசு அனுமதிப் பத்திரத்துக்காக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

சட்டத்தரணிகள் இலட்சுமணன் இளங்கோவன், சுப்பிரமணியம் முரளிதரன் ஆகியோருக்கு நொத்தாரிசு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு பதிவாளர் நாயகத்தால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றுக்குப் பரிந்துரைக்

கப்பட்டது.

அதனடிப்படையிலே அவர்கள் இருவரும் நேற்றையதினம் சத்தியப்பிரமாணம் செய்தனர். (ற.ரி4,8)

துர்நடத்தைக்குட்படுத்த முயன்ற இளைஞன் கைது

கொழும்பு, டிசெ.8

இளம் பெண்ணொருவரை துர்நடத்தைக்குட்படுத்த முயன்ற குற்றச்சாட்டில் இளைஞனொருவன் கைது செய்யப்பட்டார். இவரை நேற்று நீதிவான் நீதிமன்ற நீதிபதி நதீரா போகஸ்தெனிய முன்னிலையில் பொலிஸார் முற்படுத்தினர். இவருக்கு இருவருட கடூழிய சிறைத்தண்டனையும், ஆயிரத்து 500 ரூபா அபராதமும், பாதிக்கப்பட்ட இளம் பெண்ணுக்கு பத்தாயிரம் ரூபா இழப்பீடும் செலுத்தும்படியும் உத்தரவிட்டார். இழப்பீடும், அபராதமும் செலுத்தப்படாதபட்சத்தில் இவருக்குக் கடூழிய சிறைத்தண்டனை நீடிக்கப்படுமென்றும் நீதிபதி உத்தரவிட்டார். (ற-ரி5)

ஐ.ம.சுதந்திரக் கூட்டமைப்பு கட்டுப்பணம் செலுத்தியது

பதுளை,டிசெ.8

பதுளை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்கள் பலவற்றுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பதுளை மாவட்டத் தேர்தல் திணைக்கள உதவி ஆணையாளர் இந்திக்கஹத்துருசிங்கவிடம் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

பதுளை மாநகர சபை, ஹப்புத்தளை நகர சபை, பதுளை லுணுகலை, மகியங்கனை, ஹல்துமுல்லை ஆகிய பிரதேச சபைகளுக்குமாக ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கான கட்டுப் பணம் செலுத்தப்பட்டது.

(ற-ரி5)

துருவங்கள் இரண்டும் விவாகத்தில் சந்திப்பு

கொழும்பு,டிசெ.8

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச ஆகியோர் நேற்றுச் சந்தித்தனர்.

இராஜாங்க நிதியமைச்சர் லக்ஸ்மன் யாபா அபேவர்தனவின் புதல்வர் தென் மாகாண சபை உறுப்பினர் பசத யாப்பா அபேவர்தன வின் திருமண நிகழ்வு நேற்று நடைபெற்றது.

நிகழ்வில் மாப்பிள்ளை மற்றும் பெண் வீட்டார் தரப்பில் சாட்சியாளர்களாக மைத்திரி மகிந்த ஆகிய இருவரும் கையொப்பமிட்டனர்.

உள்ளூராட்சி தேர்தலில் மைத்திரி அணியும் மகிந்த அணியும் தனித்தனியாக களமிறங்கு வதற்கான முயற்சிகள் நடைபெறு கின்றன. இரு தரப்பினரையும் சமரசப்படுத்தும் முயற்சிகள் நடைபெற்று வரும் நிலையில் இவர்களின் சந்திப்புக்கள் நடைபெற்றன.

(ற.ரி4)

பாடசாலைக்கு அருகில் நீதிமன்றம் வேண்டாம்

மாத்தளையில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,டிசெ.8

மாத்தளையிலுள்ள பாடசாலையொன்றுக்கு அருகில் நீதிமன்றம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

மாத்தளை விஜய வித்தியாலயத்துக்கு முன்பாக புதிய நீதிமன்றம் அமைப்பதற்கான அடிக்கல் கடந்த வாரம் நடப்பட்டது.

பாடசாலைக்கு அருகில் நீதிமன்றம் அமைப்பதானது, மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை பாதிக்குமென சுட்டிக்காட்டியே ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற.ரி4)

கொலைக்குற்றத்துக்கு தூக்குத்தண்டனை விதிப்பு

கொழும்பு,டிசெ.8

ஒருவரைக் குத்திக் கொலை செய்தமைக்காக மொனராகலை நீதிமன்றம் ஒருவருக்கு சாவுத் தண்டனை வழங்கியது.

2007ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29ஆம் திகதி ஆறு பிள்ளைகளின் தந்தையான கே.ஜி. குணதாச என்பவரை கூரிய ஆயுதமொன்றால் தாக்கி கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நீதிமன்றத்தில் நேற்று இந்தக் கொலை வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது கடந்த பத்து வருடங்களுக்கு பின் குற்றவாளியான மிந்தெனியவைச் சேர்ந்த அபேயகோன் சேனவிரத்ன என்ற கொலைச் சந்தேகநபருக்கு நீதிபதி சாவுத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இருவருக்கிடையில் ஏற்பட்ட முறுகலே கொலைக்குக் காரணம். (ற-ரி5)

தகவலறியும் சட்டமூல விளக்கப் பயிற்சி நெறி

மட்டக்களப்பு,டிசெ.8

தகவல் அறியும் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான மூன்று நாள் பயிற்சி நெறி நேற்று மட்டக்களப்பு கல்லடியிலுள்ள பிரிட்ஜ் வியூ விடுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் அரச அலுவலகங்களில் கடமையாற்றும் தகவல் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறியில் முதன்மை விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சினி சிறிகாந்த் கலந்துகொண்டார். இந்தப் பயிற்சி நெறியில் தகவல் உரிமை, தகவலுக்குப் பிரவேசித்தல், தகவல் சுதந்திரம், அடிப்படை உரிமையாக தகவல் உரிமை, தகவல் உரிமைச் சட்டத்தின் முக்கியத்துவம், தகவல் உரிமை பற்றிய அடிப்படைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து விளக்கங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் இந்தப் பயிற்சி நெறியில் மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களிலுமுள்ள தகவல் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

(ற.ரி4)

சிறையில் கைதியை கரம் பிடித்த மணப்பெண்

கொழும்பு, டிசெ. 8

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் நேற்றையதினம் கைதியொருவருக்கு திருமணம் இடம் பெற்றுள்ளது.

வெலிக்கடை பிரதேசத்தில் 2002ஆம் ஆண்டு இடம் பெற்ற படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவராகக் கருதப்படும் சென்ரத் பந்துல லியனாராச்சிக்கு 37 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

10 ஆண்டுகள் தண்டனை காலத்தை அவர் பூர்த்தி செய்துள்ளார். இந்த நிலையிலேயே இ.பி.செலின் சமிலா என்பவர் இந்தக் கைதியை திருமணம் செய்துள்ளார். இதற்காக தான் மூன்று வருடம் போராடியதாக மணமகள் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் குறிப்பிட்டார்.

அரச தலைவரிடமும், சிறைச்சாலை அமைச்சிடமும் அனுமதி பெற்றே திருமணம் நடத்தப்பட்டுள்ளது. திருமணத்தின் போது மணமகள் திருமண ஆடையில் சிறைச்சாலைக்குள் வருகை தந்திருந்த நிலையில் மணமகனான சிறைக்கைதி சிறைச்சாலை ஆடையிலேயே திருமணத்தில் கலந்து கொண்டார். திருமணம் நிறைவடைந்த சிறிது நேரத்தில் மணமகள் வெளியேறிய நிலையில் மணமகன் மீண்டும் சிறைச்சாலைக்குள் சென்றிருந்தார். (5,31)

சுன்னாகத்தில் ஹெரோயினுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 8

சுன்னாகம் பகுதியில் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டதாக, சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லக்மால் தெரிவித்தார். பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து, சுன்னாகம் பிரதேசத்தில் சுற்றிவளைப்பு மேற்கொண்டதாகவும், அதன் போதே இருவரும் கைது செய்யப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

நல்லூர் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளையோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து, 3 ஆயிரம் மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது. (5)

பாடப் பயிற்சி நூல் வெளியீடு

தென்மராட்சி,டிசெ.8

யாழ்.மாவட்ட கணித பாட ஆசிரியர்களான வி.குகநாதன் எஸ்.வி.பாலமுரளி ஆகியோரால் ஆக்கப்பட்ட தரம் 8 வகுப்பு மாணவர்களுக்கான கணித பாட பயிற்சி நூல் வெளியீடு நேற்று தென்மராட்சி வலயக் கல்வி கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

நூலை முதன்மை விருந்தினர் வெளியிட பன்னாட்டு லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட கடந்த வருட ஆளுநரும் மருத்துவருமான லயன் வை.தியாகராஜா பெற்றுக் கொண்டார்.

இதன்போது, யாழ்.எயிட் நிறுவனத்தினரால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. நிகழ்வில், வலயக் கல்விப் பணிப்பாளர் ச.சுந்தரசிவம், ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளரும் கணித பாட ஆசானுமாகிய சு.கிருஷ்ணகுமார், வலிகாமம் கல்வி வலய ஓய்வுநிலை கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சுகுமார், யாழ்.எயிட் நிறுவன இணைப்பாளர் வ.பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்

(ரி2,9)

விபத்தில் இளைஞன் படுகாயம்

அச்சுவேலி,டிசெ.8

அச்சுவேலி, வல்லைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த தவகுலரட்னம் பிரசாந்த் (வயது-24) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

கன்ரர் ரக வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து இடம்பெற்றது என தெரிவிக்கப்பட்டது.

இளைஞர் நேற்றுக் காலை வீட்டில் இருந்து அலுவலகம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை கன்ரர் ரக வாகனத்துடன் மோதியுள்ளார்.

விபத்துக்குள்ளான இளைஞரை அப்பகுதியில் நின்றவர்கள் மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பித்தார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரி2,37)

பரு. நீதிமன்றக் கட்டட தொகுதி திறப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ.8

பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட அலுவலகக் கட்டடத் தொகுதி நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்தார்.

யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார், பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் நளினி கந்தசாமி மற்றும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளர் மீரா வடிவேற்கரசன் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ர)

கைகலப்பில் ஈடுபட்ட மூவர் கைது

அச்சுவேலி,டிசெ.8

குடும்பத் தகராறு காரணமாக கைகலப்பில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். சிறுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த 21,24,31 வயதுடைய மூவரே அச்சுவேலிப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். அச்சுவேலி சிறுப்பிட்டி, ஜனசக்திப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு குடும்பத்தகராறு கைகலப்பில் முடிந்துள்ளது. அதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். மருத்துவமனையிலும், ஒருவர் காயமடைந்த நிலையில் அச்சுவேலி மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பிலேயே குறித்த மூவரும் கைது செய்யப்பட்டனர். மல்லாகம் நீதிவான் மூவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(ரி2,26)

சுவாமி விபுலானந்தரின் வீடு சீரமைப்பு

காரைதீவு,டிசெ.8

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் பிறந்த 200 வருடகாலம் பழைமை வாய்ந்த காரைதீவு வீடு தற்போது சீரமைக்கப்பட்டு வருகிறது.

இந்து கலாசார அலுவல்கள் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு அமைச்சின் நிதியொதுக்கீட்டின் கீழ் காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்தப் பணிமன்றம் சீரமைப்புப் பணியை முன்னெடுத்து வருகின்றது.

பழைமை குன்றாத வகையில் அழகாக சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருவதாக அதற்குப் பொறுப்பான பணிமன்றத்தின் பொருளாளர் ச.ருத்திரன் நேற்றுத் தெரிவித்தார்.

200 வருடங்களுக்கும் முந்தைய பழைமை வாய்ந்த வீட்டின் ஓடுகள் நாட்டோடால் வேயப்பட்டிருந்தது. சுவர்கள் தூண்கள் அனைத்தும் நீற்றுக்கட்டாக இருந்த போதிலும் மிகவும் உறுதியாக அகலமாக காணப்படுகின்றன.

காரைதீவிலுள்ள இந்த இல்லமானது தொல்பொருட் திணைக்களத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(ரி2)

ஆர்வமும், துடிப்பும், தேடலும் இருந்தால்.....

பயிற்சிச் செய்தியாளராக வாய்ப்பு!

வயதெல்லை இல்லை.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
முழுநேர, பகுதிநேர பணி வாய்ப்பு.

உங்கள் சுயவிவரக் கோவையை
(அலைபேசி இலக்கத்துடன்)
தபாலிலோ, வைபர் மூலமோ,
உதயன் முகநூல் பக்க
தனித் தகவல் ஊடாகவோ,
மின்னஞ்சல் ஊடாகவோ
அனுப்பலாம்.

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

077 316 5555

UthayanPrint

uthayanprint
@gmail.com

விண்ணப்ப இறுதித் திகதி:

15.12.2017

தமிழ் மாணவர்கள் கடத்தல்:

தசநாயக்கவின் சட்டத்தரணி நீதிபதியுடன் நேற்று தர்க்கம்

கொழும்பு, டிசெ. 8

2008ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாணவர்கள் ஐவர் உள்பட 11பேர் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி.தசநாயக்கவின் மீளாய்வு மனு, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அவருடைய சட்டத்தரணி நீதிபதியுடன் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுகோட்டைநீதிவான்நீதிமன்றத்தால் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தசநாயக்க உள்ளிட்ட அறுவரால் தாக்கல்செய்யப்பட்ட பிணை மனு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆர்.ஹெய்யந்துடுவ முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கமான நீதிபதி மணிலால் வைத்தியதிலக்க இல்லாத காரணத்தால், ஜனவரி 9ஆம் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து எழுந்த தசநாயக்கவின் சட்டத்தரணி மைத்திரி குணவர்தன, இரண்டு தடவைகள் மனுமீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தனது சேவைபெறுநர் 20 வருடங்களுக்கு மேல் கடற்படையில் சேவையாற்றியுள்ளார் என்றும் குறிப்பிட்டு நீதிபதியுடன் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்படும் காலம் அதிகரிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

பயங்கரவாதிகள் அல்லாத 11 பேர் கடத்தப்பட்டுள்ள வழக்கு என்பதால் விசாரணையின் பின்னரே பிணை உத்தரவு வழங்கப்படும் என்று கூறிய மூத்த அரச சட்டத்தரணி ஜானக பண்டார, சட்டத்தரணியின் இந்த நடவடிக்கை அசாதாரணமானது என்றும் தெரிவித்தார்.

சுகவீனம் காரணமாக நீதிபதி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார் என்றும், நேற்றையதினம் தனிப்பட்ட காரணங்களுக்காக விடுமுறையில் சென்றுள்ளார் என்றும் சுட்டிக்காட்டிய சட்டத்தரணி, அடுத்தவாரம் தனக்கும் நாள்கள் இல்லை என்றும் சில வழக்குகள் பெப்ரவரி மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளமையையும் சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் அறிவித்த நீதிபதி, தன்னுடைய இரண்டாம் இலக்க நீதிமன்ற அறையில் எடுக்கப்பட்ட வழக்குகளை பாதியில் நிறுத்திவிட்டு, இந்த நீதிமன்ற அறைக்கு தான் வந்திருப்பதாகவும், இடம்பெறும் வழக்குகள் தொடர்பில் தனக்குத் தெரியாது என்றும் குறிப்பிட்டதுடன், நீதிமன்ற மொழிபெயர்ப்பாளருக்கு கைவசமுள்ள திகதி களின் அடிப்படையில் வழக்குகளை ஒத்திவைத்துக் கொண்டிருப்பதாகவும் இது சாதாரண நடைமுறை என்றும் அறிவித்தார்.

அடுத்த வாரத்தில் தினங்கள் உள்ளனவா என்று மொழிபெயர்ப்பாளரிடம் வினவியபோது, இல்லை என்று அவர் அறிவித்தார். அதற்கமைய மனுக்கள் ஜனவரி 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

(5)

அம்பாந்தோட்டை துறைமுகம் சீன நிறுவனத்திடம் ஒப்படைப்பு

உடன்படிக்கைக்கு அமைச்சரவை அனுமதி நாடாளுமன்றிலும் இன்று சமர்ப்பிப்பு

கொழும்பு, டிசெ. 8

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீன நிறுவனத்திடம் கையளிப்பது தொடர்பான உடன்படிக்கை நாடாளுமன்றத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு பெஜட் வீதியிலுள்ள அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுக் காலை சிறப்பு அமைச்சரவைக் கூட்டமொன்று நடைபெற்றது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துடன் இணைந்து கூட்டு முயற்சியாக நிர்வகிக்கும் உடன்பாட்டுக்கமைய துறைமுகம் சீன நிறுவனத்திடம் கையளிப்பதற்கு அமைச்சரவைஅனுமதிவழங்கியது.

இந்த நிலையில், நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெறுவதற்காகவே இன்று சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. சபையின் அனுமதிபெறப்பட்டபின்னர்நாளை முதல் சீன நிறுவனம் தமது பணிகளை ஆரம்பிக்கவுள்ளது.

(5)

குற்றத்தை ஒப்புக்கொண்ட சஜின் வாஸுக்கு தண்டம்

கொழும்பு, டிசெ. 8

தனக்கெதிராகச் சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டை ஒத்துக்கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தனவுக்கு ஆயிரம் ரூபா தண்டம் விதித்து, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் அருணி ஆட்டிகல நேற்றுக் கட்டளையிட்டார்.

அவர், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதியிலிருந்து 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான ஆவணங்களைக் கையளிக்கவில்லை என்று இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நேற்றைய தினம் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலப்பகுதியில் ஆவணங்களைக் கையளிக்கவில்லை என்ற குற்றத்தை சஜின் ஒத்துக்கொண்டதையடுத்தே, ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், செலுத்தத் தவறின் ஒருவருட சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

(5)

ஆண்டிறுதிக்குள் கேப்பாபிலவு விடுவிக்கப்படும்

அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

இந்த ஆண்டு இறுதிக்கு முன்னதாக கேப்பாபிலவு மக்களின் காணிகள் விடுவிக்கப்படும். அத்துடன் கிளிநொச்சி மக்களின் இரணைதீவுக்காணிவிவகாரம்தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினருடன்பேச்சுநடத்தவுள்ளோம். இவ்வாறு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றகுழுநிலைவிவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

2016ஆம் ஆண்டு மற்றும் 2017ஆம் ஆண்டு ஒதுக்கீட்டின் அடிப்படையில் 17 ஆயிரம் குடும்பங்களுக்கு மாத்திரம் வீடுகள் பயனாளிகளின் பங்களிப்புடன் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மீள்குடியேற்றத் திட்டத்தில் 65 ஆயிரம் பொருத்து வீட்டுத்திட்டம்100 சதவீத நிதிப்பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட இருந்தது.

இறுதியில் அரசியல் தலையீடு காரணமாக 6 ஆயிரம் பொருத்து வீட்டுத்திட்டத்துக்கே அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது. இந்தத் திட்டத்தை என்னால் எதிர்பார்க்கப்பட்ட முறையில் இந்த ஆண்டில் நடைமுறைப்படுத்த முடியாது போயுள்ளது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மறுவாழ்வு, மீள்குடியேற்ற மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் கொள்கைப் பிரமாண அடிப்படையில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை பாதிக்கப்பட்டபிரதேசங்களுக்குநடைமுறைப்படுத்துவதற்குரிய எல்லா நிதிகளையும் எனது அமைச்சுக்குஒதுக்கநாடாளுமன்றம்நடவடிக்கை எடுக்கவேண்டும்.

15 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்வதன் ஊடாக எனது அமைச்சின் ஊடாக திறம்பட நடவடிக்கைகளைமுன்னெடுக்கமுடியும். மேலும், முல்லைத்தீவு மாவட்டத்தின்கேப்பாபிலவில் மக்களின் காணிகள் இந்த ஆண்டுஇறுதிக்குள் விடுவிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

(5,31)

ரணிலின் தலை தப்பியது

பிணைமுறி ஆணைக்குழுவின் பதவிக்காலம் மேலும் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 8

சர்ச்சைக்குரிய பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்திவரும் அரச தலைவர் ஆணைக்குழுவின் பதவிக்காலம் எதிர்வரும் 31ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் பதவிக்காலம்நேற்றுடன்நிறைவடைந்த நிலையிலேயே அரசிதழ் அறிவித்தல் மூலம் அரச தலைவர் மைத்திரிபால இந்த அறிவித்தலை விடுத்துள்ளார் என்று ஆணைக்குழுவின் செயலர் தெரிவித்தார்.

இந்த ஆணைக்குழு, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவையும் அழைத்து சாட்சியத்தைப் பதிவு செய்திருந்தது. இது அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்வலையைத் தோற்றுவித்திருந்தது.

ஆணைக்குழு தன் மீது குற்றம் சுமத்தினால் பதவி விலகுவேன்என்றுதலைமை அமைச்சர்ரணில்அறிவித்திருந்தார். இந்த அறிக்கை அரச தலைவர் மைத்திரியிடம் இன்று கையளிக்கப்படும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே, கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(5)

நியாயமாக... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பு, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஆசனப் பங்கீடு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளுக்கிடையே குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. ரெலோ அமைப்பு தமிழரசுக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதில்லை என்று அறிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றொரு பங்காளிக் கட்சியின் முடிவு அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. மையக் குழுக் கூட்டத்தின் பின்னரே கட்சியின் நிலைப்பாடு அறிவிக்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது. நேற்று வவுனியாவில் அந்தக் கட்சியின் மையக் குழுக் கூட்டம் நடந்தது. ஆசனப் பங்கீடு தொடர்பில் பேச்சு நடத்தச் செல்வதில்லை. நியாயமான ஆசனப் பங்கீட்டை வழங்கினால் ஏற்றுக் கொள்வது. இல்லை என்றால் தேர்தலில் இருந்து ஒதுங்கிக் கொள்வது என்று மையக் குழுக் கூட்டத்தில் அந்தக் கட்சி தீர்மானம் எடுத்துள்ளது.

(ற-5,101)

புலிக்கொடியைத் தூக்கி வைத்து நல்லிணக்கம் பேச முடியாது

ஜே.வி.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 8

புலிக்கொடியை தூக்கிக் கொண்டு சிங்கள, முஸ்லிம் மக்களிடம் நல்லிணக்கத்தை வெற்றிக்கொள்ள முடியாது. இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல ஆயிரம் உயிர்களின் சாவுடன் போர் முடிந்திருந்தாலும்பிரச்சினைகள் அப்படியே இருக்கின்றன. இனவாதமும் அப்படியே காணப்படுகிறது. மீண்டும் இனவாதம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்கும் போரினால் பாதிக்கப்பட்ட அனைத்து இன மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் மூன்று அமைச்சுக்கள் இருக்கின்றன. மீள்குடியேற்ற அமைச்சு, தேசிய மொழிகள் அமைச்சு, தேசிய ஒருமைப்பாடு அமைச்சுக்கள்தான் அவை. ஆனால், அந்த அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் உரிய வகையில் செலவு செய்யப்படவில்லை. அந்த அமைச்சர்கள் பதவி விலகவேண்டும். பற்றி எரியும் வடக்குப் பிரச்சினைகளையே கண்டு கொள்ளாத இந்த அமைச்சர்கள் வேறு இடங்களிலும் ஒன்றும் செய்யமாட்டார்கள்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் உள்ள ஏதிலிகள் அவர்களது சொந்த இடங்களில் விரைவில் குடியமர்த்தப்படவேண்டும். அவர்களது காணிகள் இராணுவத்தினரின் பிடியிலிருந்து விடுவிக்கப்படவேண்டும்.

மேலும், இனங்களின் அடிப்படையில் தேசியப் பிரச்சினையை தீர்க்க முற்பட்டால் ஒருபோதும் தீர்வுகாண முடியாது. நிறைவேற்று அரச தலைவர் முறைமையை ஒழித்து அனைத்து இனங்களினதும் உரிமைகளை பாதுகாக்கும் அரசமைப்பைக் கொண்டுவராவிட்டால், வடக்கின் இனவாதிகள் அதனைச் துருப்புச்சீட்டாக பயன்படுத்துவார்கள்.

வடக்கின் நல்லிணக்க முயற்சிகளை விடுதலைப் புலிகளை போன்று எடுத்துக்கொள்ள முற்பட்டால் அது தமிழ் அரசியல்வாதிகள் செய்யும் மிகப் பெரிய தவறாக அமையும். புலிக்கொடியை தூக்கிக் கொண்டு சிங்கள, முஸ்லிம் மக்களிடம் நல்லிணக்கத்தை வெற்றிக்கொள்ள முடியாது. தமிழ் மக்களுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சித்தாலும் கேக் வெட்டச் செல்லும் விக்னேஸ்வரன், சிவாஜிலிங்கம் போன்றோர் புலிக்கொடியை தூக்கிக்கொண்டுவந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. போரின் பின்னர் தான் அவர்களும் வடக்குக்குச் சென்றனர். சிங்களவர்களாக இருந்தாலும், தமிழர்களாக இருந்தாலும் இனவாதம் என்பது தவறான விடயமாகும் - என்றார்.

(5,31)

தென்மராட்சியில்
உரமானியக் கொடுப்பனவு வழங்கப்படாததால் விவசாயிகள் சிரமம்

தென்மராட்சி டிசெம். 8

தென்மராட்சிப் பிரதேச விவசாயிகளுக்கான உர மானியக் கொடுப்பனவு இதுவரை வழங்காததால் நெற்செய்கையாளர்கள் பலர் இன்னமும் தமது வயல்களில் உரம் பயன்படுத்தவில்லையெனத் தெரிவித்தனர்.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டது:

ஏனைய பிரதேசங்களில் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்ற நிலையில் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த நெற்செய்கையாளர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

உர மானியக் கொடுப்பனவுக்கான பதிவுகள் அனைத்தும் அந்தந்த கமநல சேவைகள் நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிலையில்; கொடுப்பனவில் தாமதம் காரணமாக உரிய காலத்தில் உர வகைகள் பயன்படுத்த முடியவில்லையெனவும் இதனால் நெற்செய்கையாளர்கள் எதிர்பார்க்கும் விளைச்சல் குறைவடையவாய்ப்புகள் உள்ளதெனவும் தெரிவித்தனர்.

தென்மராட்சி பிரதேச விவசாயிகளுக்கென கைதடி மற்றும் மீசாலை ஆகிய இடங்களில் கமநல சேவைகள் நிலையங்கள் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (எ-9)

மீசாலை விபத்தில் பெண் சாவு:
கைது செய்யப்பட்ட சாரதிகள் இருவருக்கும் நேற்றுப் பிணை

சாவகச்சேரி டிசெ. 8

மீசாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற சாலை விபத்தில் கைது செய்யப்பட்ட சாரதிகள் இருவரும் தலா இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தலா இரு ஆள்பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று உத்தரவிடப்பட்டது.

நேற்றுமுன்தினம் மீசாலை தொடருந்து நிலையத்துக்கு முன்பாக முதன்மைச்சாலையில் மோட்டார் சைக்கிளில் கணவன் மனைவி இருவரும் சென்றனர். சென்ற வேளையில் நிறுத்தப்பட்டிருந்த காரின் கதவில் மோட்டார் சைக்கிள் கைப்பிடிப் பகுதி தட்டுப்பட்டதில் தூக்கி வீசப்பட்டார் குடும்பப் பெண். அதே திசையில் வந்த டிப்பர் வாகனம் அந்தப் பெண்ணில் ஏறியதில் 62 வயதுடைய அந்தப்பெண் பரிதாபமாக சம்பவ இடத்திலேயே சாவடைந்தார். கணவன் காயங்களுக்கு உள்ளானார்.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். அறிக்கையினைப் பார்வையிட்ட நீதிவான். நீதிமன்ற பதில் நீதிவானை சாவு விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கமாறு உத்தரவிட்டிருந்தார்.

சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்ட பதில் நீதிவான் கார் மற்றும் டிப்பர் சாரதிகளைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு உத்தரவிட்டார். அத்துடன் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனை செய்து அறிக்கையினை நீதி மன்றில் சமர்ப்பிக்குமாறும் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறும் பொலிஸாரைப் பணித்திருந்தார்.

நேற்று உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன் குறித்த இடத்தில் நின்ற பொலிஸார் இருவரிடமும் விசாரணை மேற்கொண்டு நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தார்.

இதனையடுத்து டிப்பர் மற்றும் கார் சாரதிகளை தலா இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் இருவரும் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறும் உத்தரவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

காரில் வந்தவர் பொலிஸ் திணைக்கள நெடுஞ்சாலைகள் பிரிவு பொறுப்பதிகாரி யெனவும் இடைவழியில் கார் பழுதடைந்ததால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்ததையடுத்து அங்கிருந்து வந்த பொலிஸார் காரினைப் பார்வையிட்டனர் எனவும் அப்போதே திடீரென சம்பவம் நடைபெற்றது எனவும் அந்தப் பகுதியில் நின்ற பொலிஸார் தெரிவித்தனர் எனவும் கூறப்பட்டது. (எ-9)

கசிப்பு வைத்திருந்த நபருக்கு தண்டனை

சாவகச்சேரி. டிசெ.8

யாழ்ப்பாணத்தில் 750 மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்த நபருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஆறு மாதச் சிறைத் தண்டனை சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விதிக்கப்பட்டது.

கெற்பேலி மேற்குப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை கொடிகாமம் பொலிஸார் நடாத்திய தேடுதலில் 750 மில்லி லிற்றர் கசிப்பு உடைமையில் வைத்திருந்த நபர் கைது செய்யப்பட்டார். அவரை நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் நபருக்கு மேற்படி தண்டனை விதித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

பால்நிலை வன்முறைக்கு எதிரான பேரணி

யாழ்ப்பாணம், டிசெ.8

யாழ்ப்பாணத்தில் பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாட்டின் கீழ் பேரணி இடம்பெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் சங்கிலியன் பூங்காவிலிருந்து ஆரம்பித்து நாவலர் கலாசார மண்டபத்தை வந்தடையும். 'பெண்களுக்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவோம்' என்ற செயற்பாட்டின் கீழ் கடந்த மாதம் 25ஆம் திகதி ஆரம்பமான இந்த மாதம் 10ஆம் திகதி வரை நடைபெறும் செயற்பாடு யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் நிகழ்கின்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக பெண்கள் முகாமைத்துவ நிறுவுனர் மற்றும் தலைவர் சுலோச்சனா சிகேரா, சிறப்பு விருந்தினர்களாக கனடா உயர்ஸ்தானிகராலயம் அரசியல் அதிகாரி இந்திராணி ஜயவர்தன மற்றும் லயன்ஸ் கழகம்306 பி1, யாழ்ப்பாண மாவட்ட வலயத் தலைவி, மகளிர் விவகாரக் குழு தலைவி இராகினி இராமலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ)

பரிசில் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.8

நீர்வேலி சி.சி.த.க பாடசாலையில் பரிசில் தின நிகழ்வு பாடசாலை முதன்மை மண்டபத்தில் பாடசாலை முதல்வர் தி.ரவீந்திரநாதன் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண வலய ஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் மைதிலி தேவராஜா, யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை மருத்துவர் அருணகிரிநாதன் ஹரீந்திரன் ஆகியோருடன் பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். அனைவரையும் வருகை தருமாறு பாடசாலை சமூகம் தெரிவித்துள்ளது. (எ)

துவிச்சக்கரவண்டி வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.8

சந்நிதியான் ஆச்சிரமத்தால் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி வழங்கிவைக்கப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டு வரும் சமூகப்பணிகள் வரிசையில், சந்நிதியான் ஆச்சிரமத்தில் கடந்த 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சமய நிகழ்ச்சியொன்றில் வைத்து கிளிநொச்சி மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, கைவேலி கிராமத்தின் முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் இ.தவலிங்கத்தால் துவிச்சக்கர வண்டியொன்று கையளிக்கப்பட்டது. (எ)

நெற்செய்கை அழிவால் விவசாயிகளுக்கு பேரிடர்

யாழ்ப்பாணம் டிசெ 8

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச கமநல சேவைப்பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடும்மழை மற்றும் வெள்ளப்பெருக்குக் காரணமாக நெற்செய்கையில் 67 வீதம் அழிவடைந்துள்ளது. இவ்வாறு அழிவடைந்த நெற்செய்கைக்கு மீள்நடுகை செய்வதற்கும் போதிய நெற்பயிர்இன்மை காரணமாக விவசாயிகளுக்கு பேரிடர் ஏற்பட்டுள்ளது. இதனால் நவாலி, ஆனைக்கோட்டை, கட்டுடை, பண்டத்தரிப்பு மற்றும் இந்த பிரதேச விவசாயிகள் பெருநஷ்டம் அடைந்துள்ளனர்.

பெரும்போக நெற்செய்கைக்கு நிலம் உழுது, பண்படுத்தி, விதை நெல் கொள்வனவு தொடக்கம் களைநாசினிக்கு மருந்துகள் தெளித்த நிலையில் விவசாயிகள் பெருநஷ்டம் அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-50)

அதிகமாக ஆள்களை ஏற்றிச் சாரதி கைது

மோட்டார்சைக்கிளில் அளவுக்கு அதிகமாக ஆள்களை ஏற்றிச் சென்றவர் பொலிஸாரால் துரத்திப் பிடிக்கப்பட்டார். அவரைச்சோதனையிட்டபோது அவர்மது போதையில் இருந்தது தெரியவந்தது.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை(5) வரணி மத்திய கல்லூரிக்கு அருகில் இடம்பெற்றுள்ளது. நபரை நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் கொடிகாமம் பொலிஸார் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் நபரை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ.9)

நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

பொதுவுடமை இயக்கத்தின் புரட்சிகர முன்னோடியும் மாக்சிச வாதியுமான தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் 28ஆவது ஆண்டு நினைவுக் கூட்டம் இடம்பெறவுள்ளது. இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் மூத்த தொழிற்சங்கவாதியான தோழர் இ.தவராஜா தலைமையில் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. ஆர்வமுள்ள அனைவரையும்கலந்துகொள்ளுமாறுநினைவுக்குழுகேட்டுக்கொள்கின்றது. (எ)

நவாலி ஹேமலதா ஆயுள்வேத மருத்துவமனை மீண்டும் இயங்கும்

யாழப்பாணம்.டிசெ.7

நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சித்த ஆயுள்வேத மருத்துவமனை எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இயங்கும் என்று வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் சியாமா துரைரட்ணம் அறிவித்துள்ளார்.

நவாலி ஹேமலதா ஞாபகார்த்த மருத்துவப் பணிமனை மீள்சீரமைப்புக்காக கடந்த ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. தற்போது மருந்துகளின் பாதுகாப்புக்காக புதிய அலுமாரிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் சீரமைக்கப்பட்ட கட்டடங்களும் பிரத்தியேகமாக வழங்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் அராலி சித்தவைத்தியப் பொறுப்பதிகாரி மருத்துவர் எம்.சிவகீதா தலைமையில் ஆயுள்வேத சிகிச்சை நிலையம் மீண்டும் செயற்படும் என்றும் வழமை போல் சிகிச்சை இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-50)

நூல் வெளியீட்டு நிகழ்வு

தொண்டைமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய கற்றல் வள வெளியீடான நூல் 'விழி நூல்' வெளியீட்டு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் இரா.ஸ்ரீ நடராசா தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் சி. அகிலதாஸ் கலந்து கொள்வார். நூலின் வாழ்த்துரையை ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் டொறின் மன்மதநாயகமும் வெளியீட்டுரையை வடமராட்சி வலய நூலக இணைப்பாளரும் தமிழ் பாட ஆசிரிய ஆலோசகருமான வளர்மதி அம்பிகைபாகனும் நயப்புரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகர் கல்பனா சந்திரசேகரும் ஏற்புரையை நூலக ஆசிரியர் செல்வரஞ்சிறி செல்லத்துரை ஆகியோரும் நிகழ்த்துவர். (எ-108)

மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

மரக்கறிகள்	சாவகச்சேரி	சுன்னாகம்	மந்துவில்	தெல்லிப்பழை	திருநெல்வேலி
முள்ளங்கி	100	140	80	80	60
கத்தரி	140	120	120	120	100
மரவள்ளி	60	50	60	40	40
பயிற்றை	140	320	300	160	160
பாகல்	200	320	350	250	380
க.கிழங்கு	80	80	60	80	60
பெ.வெங்காயம்	140	200	120	240	120
சி.வெங்காயம்	400	400	300	380	160
பூசணி	70	80	60	60	60
தக்காளி	100	120	200	100	100
வாழைக்காய்	80	60	70	80	60
கீரை	100	60	40	40	70
பொன்னாங்காணி	40	60	40	35	40
ப.மிளகாய்	350	700	300	400	600
புடோல்	100	120	120	120	100
கோவா	140	160	120	160	140
வெண்டி	120	160	160	120	100
போஞ்சி	160	200	200	220	180
லீக்ஸ்	250	240	200	240	240
தேங்காய்	90	90	100	80	70
உ.கிழங்கு	80	100	80	80	70
தேசிக்காய்	80	100	70	50	80
வல்லாரை	20	20	40	15	20
கறிமிளகாய்	300	300	300	300	380
கரட்	200	200	160	240	220
முருங்கைக்காய்	400	320	400	150	300

கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

இறால்	600	900	1000	1200
நண்டு	400	400	600	500
கணவாய்	700	500	900	1000
பாரை	500	500	600	–
சுறா	300	700	1000	600
சீலா	400	400	500	–
விளை	500	400	500	800
முரல்	300	350	400	–
கும்பிளா	300	300	400	400
கிளாக்கன்	800	–	500	–
ஒரா	300	300	500	400
திரளி	200	200	200	250
நகரை	200	200	400	300
சூடை	100	120	200	250
ஒட்டி	100	200	160	250
திருக்கை	300	200	400	–
மதனம்	150	180	250	–
கொய்	100	100	80	100
பாலை	150	200	400	430
வாளை	100	200	300	–

பாதீட்டுப் பட்டியல் பொதுமக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், டிசெ.7

2018ஆம் ஆண்டுக்கான வலி.கிழக்கு பிரதேச சபையின் பாதீட்டுப் பட்டியல் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

வலி. கிழக்கு பிரதேசசபையின் 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 2ஆவது அத்தியாயத்தின் பிரிவு 14(3)ஆம் பிரிவுக்கமைவாக, 2018ஆம் ஆண்டுக்கான பாதீட்டு பட்டியலை மக்கள் பார்வையிட்டு பரீட்சித்துப் பார்ப்பதற்காக தலைமை அலுவலகத்திலும், அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய் ஆகிய உப அலு வலங்களிலும் நேற்றுமுன்தினத்தில் இருந்து எதிர்வரும் 15ஆம் திகதி வரை வைக்கப்படும் என பிரதேச சபை செயலாளர் யு.ஜெலீபன் தெரிவித்தார். (எ)

வாள்வெட்டுச் சந்தேகநபர்கள் 6 பேர் கைது

சாவகச்சேரி அல்லாரைப் பகுதியில் கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் அறுவர் நேற்று வட்டு கோட்டைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டதாக கொடிகாமம் பொலி ஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவித்த தாவது:

சாவகச்சேரி அல்லாரைப்பகுதியில்கடந்த 4ஆம் திகதி இரவு 8.30 மணியள வில் கடையொன்றில் வைத்து ஒரு கும்பல் 2 பேர்மீது வாள்வெட்டைமேற்கொண்டிருந் தது. இந்தச் சம்பவத்துடன் தொடர்பு டைய சந்தேகநபர்களைத் தேடும் பணி களைப்பொலிஸார்மேற்கொண்டிருந்தனர். இதன்போது நேற்றுக் காலை குறித்த சந் தேகநபர்கள் அறுவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் வட்டுக்கோட்டைப் பகுதி வீடொன்றில் வைத்துக் கைது செய்யப் பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட வேளை இவர்கள் சாவகச்சேரிப்பொலிஸ் எல்லைக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந் தவர்கள் எனத் தெரிய வந்தது. அத்துடன் இரண்டுவாள்களும்கைப்பற்றப்பட்டன. சாவகச்சேரி வாள் வெட்டுச் சம்பவத்து டன் தொடர்பு பட்டிருக்கலாம் என்ற சந் தேகத்தில் கொடிகாமம் பொலிஸாரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டனர். சந்தேக நபர்கள் அறுவரும் நேற்று மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இவர் களை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதி வான் உத்தரவிட்டார் - என்று தெரிவிக் கப்பட்டது. (ரி)

வரவு செலவு திட்ட வரைவு அறிக்கை பார்வைக்கு

யாழ்ப்பாணம் டிசெ 8

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் 2018ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டவரைவுஅறிக்கைநேற்று முன்தினம் முதல் 16ஆம் திகதி வரை பொதுமக்கள் பார் வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

வரைபு அறிக்கையை அலுவல க நேரத்தில் பிரதேசசபைத் தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகத்திலும் பிர தியை பொதுநூலகத்திலும் பார்வையிடலாம் என வலி காமம் தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர் தெரிவித் தார். (எ)

மாதாந்த திரையிடல் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.8

யாழ்ப்பாண பொதுசன நூலக வாசகர் வட்டத் தின் மாதாந்த திரையிடல் நிகழ்வு இடம்பெற வுள்ளது.

நாளை சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. 1964ஆம் ஆண்டு லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸால் உருவாக்கப்பட்ட கிராமப் பிறழ்வு பற்றிய 'கம் பெரலிய' எனும் சிங்களப்படம் திரையிடப்பட வுள்ளது.

இந்தத் திரைப்படம் 1965இல் புதுடெல்லியில் நடைபெற்ற உலகத்திரைப்பட விழாவில் 'தங்க மயில்' விருது பெற்றமை குறிப்பிடத்தக்கது. லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸின் உலகம் எனும் ஆவ ணப்படமும் காண்பிக்கப்படவுள்ளது. அனுமதி இலவசம். அனைவரையும் வருகை தருமாறு நூலக வாசகர் வட்டம் தெரிவித்துள்ளது. (எ)

வழிகாட்டல் கருத்தரங்கு

தென்மராட்சி கல்வி வலயப் பாட சாலைகளின் மாணவர் நாடா ளுமன்ற அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான வழி காட்டல் கருத்தரங்கு இடம்பெற வுள்ளது.

கருத்தரங்குமத்தியகல்விஅமைச் சின் இணைப்பாடச் செயற்பாடு கள் ஆலோசனை வழிகாட்டல் அலகின் ஏற்பாட்டில் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மண்டபத்தில் இன்று முற்பகல் 8.30 மணிக்கு நடைபெறும்;.

கருத்தரங்கில் வலயத்தைச் சேர்ந்த மாணவர் நாடாளுமன் றப் பிரதிநிதிகள் கலந்து கொள்ள வுள்ளனர். கருத்தரங்கில் பிரத மர்கள்;, சபாநாயகர்கள், பிரதிச் சபாநாயகர்கள், சபை முதல்வர் கள், செயற்குழுத் தலைவர்கள் என ஐந்து குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன.

வளவாளர்களாக துறைசார் வல் லுநர்கள் கலந்து கொண்டு கருத் துரைகளை வழங்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ.9)

முதியோர் ஒன்றுகூடலும் கருத்தரங்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் முதியோர் மாதாந்த ஒன்றுகூடலும் கருத்தரங்கும் இடம்பெற வுள்ளது. தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை. துர்க்கை அம்மன் தேவஸ்தான முன்புறம் காங்கே சன்துறை வீதி எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை முதியோர் சுகவாழ்வுக்கழகத்தின் வடமா காண தலைமையகத்தில் இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழகம், வடபிராந்திய மூத்தோர் அவை, வடமாகாண ஓய்வூதியர் சங்கங்கள் ஒன்றிணைந்து முதியோர் மாதாந்த ஒன்றுகூடலும் கருத்தரங்கும் நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறும். நிகழ்வில் விழிப்புணர்வு விரிவுரைகளும் கலந்துரையாடல்களும் இடம்பெ றும். யாழ்ப்பாண மாவட்ட ஓய்வூதியர்களையும் முதியோர்களையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட் டாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (எ)

கலந்துரையாடல்

சாவகச்சேரி, டிசெ. 8 கொடிகாமம் பொலி ஸாரால் போதைப் பொருள்கள் தடுப்பது தொடர் பான கலந்துரையா டல் நடத்தப்பட வுள்ளது.

தாவளை, இயற் றாலை பொது மண்ட பத்தில் இன்று வெள் ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலந்துரையாடல் நடைபெறும் என பொலிஸார் தெரிவித் தனர்.

(எ-9)

பன்னாட்டு சிறப்புத் தேவையுடையோர் தினவிழா

உடுவில் பிரதேச செயலக மும் லீட்ஸ் நிறுவனமும் இ ணை ந் து நடத் தும் பன்னாட்டு சிறப்புத்தேவை யுடையோர் தினவிழா நடை பெறவுள்ளது.

சுன்னாகம் கதிரைமலை சிவன்கோவில்மண்டபத்தில் உடுவில் பிரதேச செயலர் மதுமதி வசந்தகுமார் தலை மையில் இன்று வெள்ளிக்கி ழமை மதியம் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தி னராக லீட்ஸ் நிறுவனத்தின் முகாமையாளர் ஞா.வே ட்க் கின்சன், சிறப்புவிருத்தினராக யாழ்ப்பாண மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் வி. செல்வம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பன்னாட்டு சிறப்புத்தேவை யுடையோர் தினத்தை முன் னிட்டு நடத்தப்பட்ட போட்டிக ளில் வெற்றி பெற்ற மாணவர் கள் பரிசில் வழங்கி மதிப்ப ளிக்கப்படவுள்ளனர். (எ-23)

இது புதுசு

ஆண்களுக்கான மணிக்கூட்டு வகைகள் சில சந்தைக்கு அறி முகமாகியுள்ளன. இவை 950 ரூபாவுக்கு விற் பனை செய்யப்படு கின்றன.

வடக்கு மாகாணத்தில்

யானைகள் ஏற்படுத்திய அழிவின் விவரங்கள் பதிவில் இல்லை

கை விரித்தனர் அதிகாரிகள்

முல்லைத்தீவு, டிசெ.7

யானைகளால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகள் தொடர்பான எந்தவொரு புள்ளிவிவரமும் வடக்கில் உள்ள மாவட்டச் செயலகங்களில் பதிவு செய்யப்படவில்லை, அவை தொடர்பில் மாவட்டச் செயலகங்களில் உள்ள சம்மந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அக்கறையில்லை என சுட்டிக்காட்டப்படுகிறது.

வடக்கு மாகாணத்தின், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் போருக்குப் பின்னர் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது. நாளாந்தம் அவை மக்களுடைய குடியிருப்புகளுக்குள் வந்து தோட்டங்கள், வீடுகள், வயல்களில் பெரும் சேதங்களை ஏற்படுத்திச் செல்கின்றன. சில வேளைகளில் யானைகளிடம் மனிதர்கள் கூட அகப்பட்ட சம்பவங்களும் உண்டு. யானைகளைக் கட்டுப்படுத்துமாறு கோரி காட்டுப் பகுதிகளை அண்டியுள்ள மக்கள் அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கும், மாவட்டச் செயலகங்களுக்கும் செல்கின்றனர். எனினும் 'யானை உட்புகாதவாறு வேலி அமைத்துக் கொடுக்கப்படும்' என்பதே அதிகாரிகளுடைய பதிலாக இருந்து வருகிறது. ஆனால் அவை எந்தளவு தூரம் நடைமுறைப்படுத்தப்படுகிறது, நடைமுறைப்படுத்தப்பட்டது என்பது இன்று பெரும் கேள்வியாகவே உள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்ததாவது:

கிராமங்களுக்குள் உட்புகும் யானைகளால் மாவட்டங்களில் சராசரி ஆண்டொன்றுக்கு 3 தொடக்கம் 4 இலட்சம் ரூபா பெறுமதியான பயிர்கள் அழிக்கப்படுகின்றன.

குறிப்பாக வன்னிப் பெரு நிலப் பரப்பில் நாளாந்தம் அவை அழிவை ஏற்படுத்துகின்றன. வாழை, மரவள்ளி, நிலக்கடலை போன்றவற்றை அழித்துவருகின்றன. வயல்களுக்குள் இறங்கி நெற் பயிர்களை நாசம் செய்கின்றன. குடிமைகளுக்குள் புகுந்து வீடுகளை உடைக்கின்றன. முதன்மை வீதிகளைக் கடந்து கிராமங்களுக்குள் செல்லும் யானைகள் மக்களை விரட்டுகின்றன. சில வேளை தாக்குதல்களையும் மேற்கொள்கின்றன. அதிகாரிகள் இந்த விடயத்தில் அசண்டையீனமாக இருப்பது கவலை தருகிறது-என்றனர். பயிரழிவு ஏற்பட்ட ஒரு சில விவசாயிகளுக்கு திணைக்களங்களால் காப்புறுதிகளும் வழங்கப்படுகின்றன. எனினும் குறித்த மாவட்டங்களில் யானைகளால் ஏற்பட்ட அழிவுகள் தொர்பான எந்த ஒரு ஆவணங்களும், புள்ளி விபரங்களும் இல்லை என அறியமுடிகின்றது. இது தொடர்பில் உதயன் அந்த மாவட்டச் செயலகங்களில் உள்ள இடர் முகாமைத்துவப் பிரிவினரிடம் வினவினான். இதன் போதே அவர்கள் தங்களிடம் விவரங்கள் இல்லை என கை விரித்தனர். ஒருவேளை வனஜீவராசிகள் திணைக்களத்திடம் இருக்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (21)

ஒலிபெருக்கி பாவனையால் மாணவர்களின் கல்வி பாதிப்பு

நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றது தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், டிசெ.8

வடக்கில் ஒலிபெருக்கிகளின் மிகையான சத்தத்தால் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளது. எனவே உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அண்மித்த ஆண்டுகளில் எமது பிரதேசங்கள் கல்வியில் வீழ்ச்சிநிலையில் உள்ளன. அதற்கு அதிபர்களையும், ஆசிரியர்களையும் பலரும் குற்றம் சுமத்துகின்றனர். மாறாக பாடசாலை மாணவர்களின் பரீட்சைக்காலங்களில் ஆலயங்களில் மிகையான சத்தத்துடன் ஒலிபெருக்கிகள் அலறும் சத்தம் பலநூறு வீடுகளைத் தாண்டி அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றன. இவை தொடர்பில் எவரும் கவனம் செலுத்துவதாக இல்லை.

ஆலயங்களில் பக்தர்கள் எவரும் இல்லாத வேளைகளிலும் ஒலிபெருக்கிகள் தொடர்ந்தும் ஒலித்துக்கொண்டிருப்பதோடு, எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இல்லாமல் இரவு பகல் என்று தொடர்ந்தும் ஒலிக்கின்றன. இதனால் கல்விகற்கும் மாணவர்களும், பரீட்சை எழுதும் மாணவர்களும், நோய்வாய்ப்பட்டுள்ள நோயாளர்களும் பெரிதும் அசௌகரியங்களுக்கு உட்பட்டுள்ளனர். இவை தொடர்பில் எம்மிடம் பலரும் முறைபாடுகளை முன்வைத்துள்ளனர். இதற்கு விரைந்து நடவடிக்கை எடுத்துக் கட்டுப்படுத்துமாறு மாவட்ட அரச அதிபர் உட்பட்ட அனைவரிடமும் வேண்டுகோள் விடுக்கின்றோம். என்றுள்ளது. (எ)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 4ஆவது பன்னாட்டு ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம், டிச. 8

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 4ஆவது பன்னாட்டு ஆய்வு மாநாடு எதிர்வரும் புரட்டாதி மாதம் 27,28 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இது தொடர்பான ஊடகவியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

போருக்கு பின்னர் வடமாகாணத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் பலவழிகளிலும் இடம்பெற்று வருகின்றன. எனினும் அபிவிருத்தி நடவடிக்கைகள் முறையாக நெறிப்படுத்தப்படவில்லை. அதே வேளை உயிருள்ள மற்றும் உயிரற்றவைக்குரிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் மிகவும் குறைந்த கவனமே செலுத்தப்பட்டுள்ளன.

ஆகவே இந்த மாநாடு 'எதிர்காலப் பாதுகாப்பு' தொடர்பான சிந்தனையை தூண்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எமது பிராந்தியத்துக்கான பாதுகாப்பான எதிர்காலத்தைக் கட்டியமைப்பதற்கு முன்னணிக் கல்வியாளர்கள் மற்றும் ஆய்வாளர்களை ஒன்றுதிரட்டுகின்றது.

மாநாடு வெவ்வேறு தளங்களில் இடம்பெறவுள்ளது. குறிப்பாக விவசாயமும் உணவு விஞ்ஞானமும், மனிதநேயம், சமூக விஞ்ஞானங்கள் மற்றும் சட்டம், பொறியியலும் தொழில்நுட்பமும், முகாமைத்துவக்கற்கை, வணிகம் மற்றும் முயற்சியாண்மை, சுகாதாரம் மற்றும் மருத்துவ விஞ்ஞானம், தூயமற்றும் பிரயோக விஞ்ஞானம் போன்ற தளங்களை உள்ளடக்கியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர். இரட்ணம் விக்னேஸ்வரன் தலைமையில் இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாநாட்டுக்கான ஆய்வுச் சுருக்கம் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி என்றும் பதிவு செய்வதற்கான இறுதித் திகதி எதிர்வரும் ஜூன் மாதம் 3ஆம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)

போர் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் மன்னார் மடு வலயத்துக்குட்பட்ட பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலயத்தில் போர்ப் பாதிப்புக்குள்ளான இரண்டு கட்டடங்கள் தற்போதும் போரை நினைவு படுத்துகின்றன. இந்தக் கட்டடங்கள் மாணவர்களுக்கு உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற ரீதியில் அவற்றை அகற்றுமாறு அல்லது சீரமைக்குமாறு கோரி பாடசாலை முன்னாள் அதிபர் சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். (21)

சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட

பெண் சட்டத்தரணி மீதான வழக்கு ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், டிச. 8

யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் பெண் சட்டத்தரணி சர்மினி என்பவர் மீது மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் மல்லாகம் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கினை எதிர்வரும் 3ஆம் திகதிக்கு நீதிமன்று ஒத்திவைத்தது.

வாள்வெட்டுக் குழுக்களின் தலைவன் எனக் குற்றஞ் சாட்டப்பட்ட நிஷா விக்டர் என்றழைக்கப்படும் சக்திவேல்நாதன் நிசாந்தன் (வயது 22) அண்மையில் வழக்கு விசாரணைகளுக்கு மல்லாகம் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்ட போது தப்பி ஓடினார்.

சிறிது நேரத்தின் பின்னர் தீவிர தேடுதல் வேட்டையில் அவர் கைதுசெய்யப்பட்டார். தப்பித்த குற்றத்துக்காக அவருக்கு மல்லாகம் நீதிமன்று ஒன்றரை வருடம் கடூழிய சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இந்த நிலையில் சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சர்மினி, தனது கட்சிக்காரரை சிறைச்சாலை உத்தியோகத்தர்களே வேண்டுமென்றே தப்பிக்க விட்டார்கள் என்று கடுமையான வார்த்தைகளால் திட்டினார் எனக்கூறி அவருக்கு எதிராக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் சிறை அதிகாரிகள் முறைப்பாடு மேற்கொண்டிருந்தனர்.

குறித்த வழக்கு விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிர்வரும் 3திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதேவேளை மல்லாகம் நீதிமன்றப் பதிவாளரை அலைபேசியின் ஊடாக அச்சுறுத்திய குற்றச்சாட்டு விசாரணைகளும் இதே சட்டத்தரணி மீது இடம்பெற்றுவருகின்றன. இது தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 24ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

முன்னாள் ஆயுதக் குழுக்கள் தனியாக மக்கள் முன் வந்தால் தூக்கி வீசப்படுவார்கள்

கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் கருத்து

யாழ்ப்பாணம், டிச.8
கூட்டமைப்பின் பெயரால் முன்னாள் ஆயுதக் குழுக்கள் அதிலிருந்து வெளியேறி தனியாக மக்கள் முன்னால் வருவார்களாயின் அவர்கள் தூக்கி வீசப்படுவார்கள் என மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் யஸ்ரின் சொய்சா தெரிவித்தார்.
இது தொடர்பில் சமாசத் தலைவர் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் நாம் எத்தனையோ பிரிவுகள் துரோகங்கள் இழப்புக்கள் அனைத்தையும் கண்டுள்ளோம்.
இந்த நிலையில் எதிரியிடமிருந்து மட்டும் நாம் இழப்புக்களைச் சந்திக்க வில்லை. இந்த ஆயுதக் குழுக்களின் மூலமும் இழப்புக்களைச் சந்தித்திருந்தோம். விடுதலைப் புலிகள் அமைப்புமன்னிப்புவழங்கியதனால் மக்களும் வாய்மூடி ஏற்றுக்கொண்டனரே அன்றி இவர்கள் செய்த அநியாயங்கள், அட்டூழியங்கள், கொலைகள், கொள்ளைகளையும் மறக்க வில்லை.
இருப்பினும் தமிழ் மக்கள் இன்று அநாதைகளாக நிற்கும் நிலையில் அரசியலிலும் அநாதைகளாக நிற்கக் கூடாது என்பதற்காகவே இவர்களையும் இணைத்து வாக்களிக்கப்படுகின்றது.
தமது கட்சிகளை பிரதான கட்சிகளில் சவாரி செய்து வளர்க்க நினைக்கும் இந்த ஆயுதக் குழுக்களின் உண்மை முகம் தற்போது தெரிந்து விட்டது. இதனால் இவர்கள் இனி கூட்டமைப்பிலோ அல்லது தனியாகவோ தேர்தலுக்காக மக்கள் முன் களம் இறங்கும் போது வாக்களிக்கும் மன நிலையில் நாம் இல்லை. இதனால் இவர்கள் உண்மையான தற்துணிவு இருந்தால் தனியாக களமிறங்கித் தமது பலத்தை காண்பிக்கட்டும்.
அல்லது கூட்டமைப்பில் இணைந்த ரீதியில் கட்சி ரீதியான பாகுபாடு இன்றி வருவார்களானால் ஒற்றுமையின் பெயரால் வாக்களிக்க முடியும். அல்லது மாவட்டத்தில் ஆயுதக் கலாசாரமே அற்ற அரசியல் கட்சி வாக்கு கேட்குமானால் அவர்களுக்கு நாம் முழுமையாக ஆதரவளிப்பதோடு இந்த ஆயுதக் குழுக்கள் போட்டியிடும் அத்தனை சபைகளில் மட்டும் தனியாக, சுயேட்சையாக வேட்பாளர்களைக் களமிறக்க நேரிடும்.
இதனை எதிர்கொள்ள தற்துணிவு கொண்ட எந்த ஆயுதக் கட்சியாவது தமது கட்சியின் பெயரை முதன்மைப் படுத்தி தேர்தலில் களமிறங்கினால் அந்த முயற்சியை நாம் தடுத்தே தீருவோம். அத்தோடு பகிரங்கமாக தேர்தலில் ஈடுபடாது விடினும் மாவட்ட ரீதியாக, சபை ரீதியாக மேடை அமைத்து இந்த ஆயுதக் குழுக்களை ஓரம் கட்டவேண்டிய தேவையை முன்னெடுக்கும் வேலைத் திட்டம் ஒன்றினை ஆரம்பிக்கும் வகையில் தற்போது ஆலோசிக்கின்றோம்.
கூட்டமைப்பின் பெயரால் வெற்றியீட்டிய இந்த ஆயுதக் குழுக்கள் இன்று யாழ்ப்பாணத்தில் 5 சபை, மன்னாரில் 2, மட்டக்களப்பில் 3 சபை என பேரம்பேசி மீண்டும் தமது தனியான ஆயுதக் குழுக்களை வளர்க்கவே துடிக்கின்றனர். கூட்டமைப்பின் தலைமைகள் இதற்கு இடமளிக்கவே கூடாது. அவ்வாறு இந்த ஆயுதக் குழுக்களின் தலையில் எமது சபைகளை ஈடுவைக்க வேண்டாம் என கூட்டமைப்பின்தலைவரிடமும்அதன் முதன்மைக் கட்சியிடமும் நாம் விரயமாக வேண்டுகின்றோம்.
மாறாக எமது சபைகள் இவர்களிடம் ஈடு வைக்கப்படுமானால் நாம் என்றுமே கூட்டமைப்புக்கோ அல்லது ஆயுத வன்முறையில் ஈடுபடாத கட்சிகளுக்கோ எதிராகச் செயல்பட மாட்டோம்-என்றார். (எ-101)

சிறுமி கர்ப்பம் ஆசிரியர் மறியலில்

வவுனியா, டிசெ.8
சிறுமி ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆசிரியர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பாதிக்கப்பட்ட சிறுமி 8 மாதக் கர்ப்பவதியாக உள்ளார் என தெரிவிக்கப்பட்டது.
வவுனியாவைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் எனத் தெரிவித்து அவரது உறவினர்கள் வவுனியா பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்தனர். முறைப்பாட்டை அடுத்து சந்தேகத்தின் பேரில் நேற்றுமுன்தினம் மாலை பொலிஸார் ஒருரைக் கைது செய்தனர். 50 வயதுடைய அவர் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார் என விசாரணைகளில் தெரியவந்தது. அந்த ஆசிரியர் சிறுமியி னுடைய வீட்டுக்கு அடிக்கடி சென்று வந்த நிலையிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவப் பரிசோதனைக்காக வவுனியா மருத்துவனையில் சேர்க்கப்பட்டார். அவர் 8 மாதக் கர்ப்பமாக உள்ளார் என வைத்திய சாலையில் தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட ஆசிரியர் நேற்றுமாலையே வவுனியா நீதிவானிடம் முற்படுத்தப்பட்டார். இதன் போது அவரை எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-21)

சம்மேளனத்தின் செயற்பாட்டை குழப்ப திணைக்களம் முயற்சி

யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சங்க சமாசங்களின் சம்மேளனச் செயலர் அ.அன்னராசா குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் டிச 8
மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளை அதிகரிக்கும் நோக்குடன் சமூக ஆர்வலர்கள் மற்றும் கூட்டுறவு ஆதரவாளர்களை இணைத்து நடவடிக்கை மேற் கொண்டுவரும் சம்மேளனத்தின் செயற்பாட்டை குழப்பும் முயற்சியில் மாவட்ட நீரியல்வளத் திணைக்களம் செயற்படுகின்றது என யாழ்ப்பாண மாவட்ட கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் செயலர் அ.அன்னராசா குற்றம்சாட்டியுள்ளார். அவர் இது தொடர்பாக அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 118க்கு மேற்பட்ட கடற்றொழில் கூட்டறவுச் சங்கங்களுக்கும் இடையில் கூட்டுறவைக் கட்டியெழுப்புவதற்கு 11 கடற்றொழில் கூட்டு றவுச் சமாசங்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து செயலாற்றி வருகின்றன. யாழ்ப்பாண மாவட்ட கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சம்மேளனமும் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் கூட்டுறவினை வழப்படுத்துவதற்கும் மீனவ மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதும் செயலாற்றி வருகின்றது.
இந்த நிலையில் இதனை குழப்பும் நோக்குடன் மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்களை இல்லாதொழிக்கும் முயற்சியில் நீரியல் வளத்துறை உதவிப்பணிப்பாளர் ஈடுபட்டு வருகின்றார்.
கடந்த 28ஆம் திகதிய யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் ஐந்தாண்டு திட்டம் தயாரிப்புத் தொடர்பான கருத்தமர்வில் 118 மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்களும் 11சமாசங்களும் புறக்கணிக்கப்பட்ட திட்டத்தை நீரியல் வளத்துறை திணைக்களம் முன்வைத்தது.
சம்மேளனத்தின் செயற்பாட்டை தடை செய்து குழப்பும் முயற்சியில் உதவிப்பணிப்பாளர் செயற்படுவது எமக்கு மிகவும் வேதனையையும் கவலையும் தருவதாக அமைகின்றது.
இப்படியான செயற்பாட்டை நிறுத்தப்பட வேண்டும்.; மீனவ கூட்டுறவு சங்கங்களால் மேற்கொள்ளப்படும் வாழ்வாதார முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது.
இது தொடர்பில் யாழ்ப்பாண நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளரை தொடர்புகொண்டு கேட்டபோது,
மாவட்ட மட்டத்தில் நடைபெறுகின்ற கூட்டங்களுக்கு மீனவ கூட்டுறவுச் சம்மேளனங்களினதும் சமாசங்களினதும் கருத்துக்களை எடுத்தே நடவடிக்கை மேற்கொள்கின்றோம். மாவட்டக் கடற்தொழில் திணைக்களத்தால் 109 கிராமிய கடற்தொழில் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கென மாவட்ட சம்மேளனமும் உருவாக்கப்பட்டது. என்மீது உள்ள விருப்பு வெறுப்பு காரணமாக இவ்வாறு குற்றச்சாட்டைக் கூறுகின்றனர். கடந்த மாதம் நடைபெற்ற கூட்டத்துக்கு ஏற்பாட்டை மாவட்ட செயலகமே மேற்கொண்டது. அதில் செயலாளரும் உறுப்பினர்களுமே கலந்து கொண்டனர். பெரும்பாலான கூட்டங்களில் பொது முகாமையாளரே கலந்து கொண்டுள்ளார். சுற்றறிக்கை ஊடாக பயனாளிகளை தெரிவு செய்கின்றோம். அவர்களைப் புறந்தள்ளவில்லை. எனத் தெரிவித்தார். (எ-8)

அஞ்சல் வாக்காளருக்கான

விண்ணப்ப படிவங்கள் விநியோகிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 8
யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்கள் பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்களில் அஞ்சல் வாக்காளர்களுக்கான விண்ணப்ப படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.
எதிர்வரும் பெப்ரவரி மாதம் இடம்பெறவுள்ள எதிர்வரும் பெப்ரவரி மாதம் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் அரச அலுவலர்கள் அஞ்சல் வாக்காளராக கணிக்கப்படுவதனை முன்னிட்டே அஞ்சல் வாக்காளர்களுக்கான படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன.
மேற்படி படிவத்தை, பூரணப்படுத்தும் அலுவலர் தனது கையொப்பத்துடன் தெரிவத்தாட்சி அலுவலகத்துக்கு உடன் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.
(எ-50)

45 ஆயிரத்துக்கும் அதிகமான புத்தகங்களுடன் வவுனியா நூலகம்

வடக்கில் இரண்டாவது பெரிய நூலகமும் இதுவே என்றார் வவு. நகரசபைச் செயலர்

வவுனியா, டிசெ.8
45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்களுடன் வடக்கு மாகாணத்தில் இரண்டாவது பெரிய நூலகமாக வவுனியா பொது நூலகம் காணப்படுகின்றது என வவுனியா நகரசபைச் செயலர் ஆர். தயாபரன் தெரிவித்தார்.
வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற வாசிப்பு மாத பரிசளிப்புநிகழ்வில்தலைமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
2017ஆம் ஆண்டுக்கான சிறந்த நூலகத்துக்கான பரிசு ஒன்று எமது நூலகத்துக்குக் கிடைத்து ள்ளது. 1959ஆம் ஆண்டு பட்டின சபைத் தலைவராக இருந்த வேலு சபாபதி சுப்பிரமணியத்தால் விஜயதசமி நன்நாளிலே இந்த நூலகம் 500 புத்தகங்களுடன் ஆரம்பிக்கப்பட்டது.
2017ஆம் ஆண்டு எமது நகரசபையின் சொந்த நிதியிலிருந்து 100மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் நாங்கள் ஈடுபட்டு வருகின்றோம். இது எமது நகரசபையின் சொந்த நிதி என்பது மிகப் பெரிய விடயம். வீதிகள் திருத்த வேலைகளே இந்தநிதியில் அதிகம் செய்யப்படுகின்றன. சனசமூக நிலையங்கள், மயானங்கள், வீதி விளக்குகள் போன்ற வேலைத்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
எமது உடல் வலுவூட்டல் நிலை யத்துக்கு, நிலையம் ஆரம்பிக்கும்போது கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களை விட கடந்த 20வருடங்களுக்குப் பிறகு முதன்முறையாக இந்தவருடம் ஒரு மில்லியன் ரூபாவுக்கு உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டது.
கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் நான் நகரசபையைப் பொறுப்பேற்கும் போது 45மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதி சோலைவரி நிலுவையாகக் காணப்பட்டது. சிறப்புத்திட்டம் ஒன்றை முன்னெடுத்து அந்த நிலுவையில் தற்போது 17மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட அறவீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த நிலுவைகள் திரும்பவும் அபிவிருத்தியாக உங்களுக்கு வந்து சேரும்.
வவுனியா நகருக்குட்பட்ட பகுதிகளில் இந்த வருடம் 450 மின்குழிழ்களும், 350 வீதி விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன-என்றார்.
(எ-21)

தென்பகுதிக்கு வந்துள்ள முதலாவது தமிழ் எதிர்கட்சித் தலைவர் சம்பந்தன்

நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண புகழாரம்

கொழும்பு, டிசெ. 8

இலங்கை வரலாற்றில் இரண்டாவது தடவையாக தமிழர் எதிர்க்கட்சி தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். முதலாவது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர் தலிங்கம் தெற்கிற்கு வரவில்லை. தெற்கிற்கு வந்த ஒரே தமிழ்த் தலைவர் இரா.சம்பந்தனேயாவார். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு, தேசிய கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழி, நல்லிணக்க மற்றும் ஒருமைப்பாடு அமைச்சுகளுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரோஹண விஜேவீர தெற்கைச் தேர்ந்தவர். பிரபாகரன் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவராகும். அப்போது காணப்பட்ட பல்வேறு பிரச்சினைகளின் விளைவாகவே புரட்சிகள் வெடித்தன. அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருந்தால் இந்தளவுக்கு பாரதூரமான நிலமை ஏற்பட்டிருக்காது.

நான் சிங்களவன். எனினும் அதற்காக வேறு இனத்தவர்களைப் புறந்தள்ளி செயற்பட மாட்டேன். தற்போது நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முன்னைய ஆட்சியின் போது இவ்வாறான வேலைத்திட்டம் இருக்கவில்லை. முன்னைய ஆட்சியின் போது சமர்ப்பிக்கப்பட்ட இன நல்லிணக்க அறிக்கைகள் முற்றுமுழு தாக பொய்யாகும். தெற்கில் தமிழ் மொழியை பயிற்று விக்க வேண்டும். என்னுடைய தலைமையில் தனியார் வகுப்பின் ஊடாக தமிழ் மொழியைக் கற்பித்து வருகின்றேன்.

தெற்கின் மாத்தறை, காலி மாவட்டங்களில் மலையக தோட்டத் தமிழ் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். மாத்தறை தோட்டபுறங்கள் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்க்கொண்டு வருகின்றனர். சுத்தமான குடிநீர் அவர்களுக்கு கிடைப்பதில்லை. வீடு வழங்கப்பட்டாலும் தோட்டப் புற தமிழ் பாடசாலைகளுக்கு பயிற்றுவிக்க தமிழ் ஆசிரியர்கள் வருவதில்லை. வந்தவர்களும் அவசரமாக செல்லவே முயற்சிக்கின்றனர். இவர்கள் தொடர்பில் கவனிப்பார் எவரும் இல்லை.

மேலும் தென் மாகாணத்தில் உள்ள இந்து கோவில்கள் மிகவும் மோசமாக உள்ளன. வடக்கு -கிழக்கு போன்று தெற்கிலுள்ள இந்து கோவில்களையும் சீரமைக்க வேண்டும் -என்றார்.

மனித உரிமைகள் தினத்தில் மட்டக்களப்பில் பெரும் பேரணி

மட்டக்களப்பு, டிசெ. 8

நாளை மறுதினம் பன்னாட்டு மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவினர்களால் மாபெரும் கவன வீர்ப்புப் பேரணி நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி திருமதி அமல நாயகி இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் பல தடவைகள் கலந்துரையாடல் நடத்தியுள்ளோம். அது எந்தளவு தூரத்துக்கு வெற்றி பெறும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் அமைக்கப்பட்டால் எமது மாவட்டத்திலும் அமைக்கப்பட வேண்டும். நாம் நடத்தவுள்ள பேரணிக்கு, காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் நிறுவுவதற்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை.

பன்னாட்டு மனித உரிமைகள் தினத்தில் நாம் எமது கவனவீர்ப்பைப் பதிவு செய்வதற்காகவே பேரணி நடத்துகின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்தான் போராட்டங்களை நடத்துகின்றன. நாங்கள் தொடர் போராட்டங்கள் என்கின்ற அடிப்படையில் கூடாரம் அமைத்து இருந்து போராட்டம் நடத்தினால், எமது குடும்ப நிலைமைகள் இன்னமும் பாதிக்கப்படும். எமக்குப் பாதுகாப்பு இல்லாத நிலைமை காணப்படுகின்றது. இருப்பினும் இது எங்களால் இயலாது என்று கூறமுடியாது. நாங்கள் அவ்வாறு இருப்பதற்கு விரும்பவில்லை. இவ்வாறான வழிகளில் எமது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

வடக்கில் இடம்பெறும் போராட்டங்களுக்கு நாங்கள் எங்களுடைய ஆதரவை வழங்கி வருகின்றோம். அது போன்று தொடர் போராட்டங்கள் மேற்கொள்ளாவிடினும், அந்த இடத்தில் நாங்கள் இல்லாவிடினும் எட்டு மாவட்டத்தினரும் சேர்ந்து எமது ஆதரவைக் கொடுத்து வருகின்றோம். நாளை மறுதினம் நடக்கும் பேரணியில் சகலரும் ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (5,46)

கோண்டாவிலில் மதிப்புறுத்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 8

கோண்டாவில் பொது நோக்கு மண்டபத்தில் முதியோர் மதிப்பளிப்பும், க.பொ.சாதரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மதிப்பளிக்கும் நிகழ்வும் நேற்று நடைபெற்றது.

கோண்டாவில் வடக்கு கலைவாணி சிக்கனக் கடன்வழங்கும்கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கத்தில் தலைவி திருமதி சி.சாரதாதேவியின் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். தயாகரன், சிக்கனகடன்வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் வெளிக்கள உத்தியோகத்தர் கு.தவச்செல்வம் மற்றும் சங்கத்தின் நல்லூர் பிராந்திய சபையின் தலைவர் பொ.ஜேசுராசா ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற.ரி4)

பேச்சுத் தோல்வி போராட்டம் தொடரும்

தொடருந்து சாரதிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 8

போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளுடன் இடம் பெற்ற பேச்சு தோல்வியடைந்துள்ளது. எமது வேலை நிறுத்தப் போராட்டம் தொடரும். இவ்வாறு தொடருந்து சாரதிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளார்கள்.

இந்த விடயம் தொடர்பில் போக்குவரத்து அமைச்சின் செயலர் விதானகேவால் சிறப்பு ஊடக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது, தொடருந்துச் சாரதிகளுக்கான உதவியாளர்களை சேவையில் இணைத்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சை தொடர்பில், சாரதி உதவியாளர்கள் சங்கத்தினால் உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது. அதன் தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பை அரச ஊழியர்கள் மாற்ற முடியாது.

போக்குவரத்து அமைச்சின் செயலர் என்ற ரீதியில், இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றேன். இதற்கான பணிப்புரை அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவினால் வழங்கப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை கருத்திற் கொண்டு, வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறும், கலந்துரையாடல் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு தலையிடுமாறும் தொழிற்சங்கங்களிடம் கோருகின்றேன்.

தொழிற்சங்க ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளமையால், குறித்த காலப் பகுதியில், பருவ காலப் பயணச் சீட்டுக்களைப் பயன்படுத்தும் தொடருந்துப் பயணிகள், இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளில் பயணிக்க முடியும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (5,31)

குற்றவாளிகள் வீரர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்கள்

முதலமைச்சர் விக்கி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 8

குற்றவாளிகள் வீரர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயேஇவ்வாறு கூறியுள்ளார்.

'குற்றவாளிகள் வீரர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இதுதான் எமது தலைவர்களின் இன்றைய துயரநிலை' என்றும் அவர் கூறியுள்ளார். (5)

ஆசிரிய உதவியாளர்களாக இணைக்கப்பட்ட தினத்திலிருந்து நியமனம் வழங்கப்படவேண்டும்

சபையில் சிறிதரன் எம்.பி. கோரிக்கை

ஆசிரிய உதவியாளர்கள் ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்பட வேண்டும். எந்தத் திகதியில் ஆசிரிய உதவியாளர்களாக இணைக்கப்பட்டார்களோ அப்போதிருந்து அவர்களுக்கான ஆசிரிய நியமனத்தை வழங்க வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் ஆசிரிய உதவியாளர் பிரச்சினை பாரதூரமாக மாறியுள்ளது. 2015 ஆம் ஆண்டு பகுதிகளில் 3ஆயிரம் பேர் ஆசிரியர் உதவியாளர்களாக உள்வாங்கப்பட்டனர். இவர்களுக்கு உயர்தர பரீட்சை சித்தி பெற்ற தகைமை உள்ளது. இலங்கையில் தற்போது சாதாரண ஊழியர் ஒருவர் கூட 30 ஆயிரம் ரூபா சம்பளத்தைப் பெறுகின்றனர். ஆசிரிய உதவியாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படும் எனில் அவர்களுக்கு எந்த வகையிலும் போதாது. தற்போது வழங்க தீர்மானிக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபா கூட உரிய முறையில் வழங்கப்படுவதில்லை. இந்த நிலமை மாற்றப்பட வேண்டும் -என்றார். (5,31)

இலங்கையில் ஊழலுக்கு எதிரான நடவடிக்கை; சட்ட ஆலோசகரை நியமிக்கிறது அமெரிக்கா

கொழும்பு, டிசெ. 8

ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும், சொத்துக்களை மீட்பதற்கான பயிற்சிகளை அளிப்பதற்கும், இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவுக்கு உதவவும், இலங்கைக்கு வதிவிட சட்ட ஆலோசகர் ஒருவரை அமெரிக்கா வழங்கவுள்ளது.

கொழும்பில் தங்கியிருந்து, இந்தச் சட்ட ஆலோசகர் ஆலோசனைகளை வழங்குவார் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயர்மட்டக் குழுவினர், வொசிங்டனில் நடந்த பூகோள சொத்து மீட்புக் குழுவின் கூட்டத்தில் பங்கேற்றதை அடுத்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

ஒபாமா அரசு பதவியில் இருந்த போது, இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த அப்போதைய அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, திருடப்பட்ட நிதியை மீட்பதற்கு கொழும்புக்கு உதவத் தயாராக இருப்பதாக அறிவித்திருந்தார்.

முன்னைய அரசு பதவியில் இருந்த காலத்தில் 18.5 பில்லியன் டொலரை, மகிந்த ராஜபக்ச வெளிநாட்டு வங்கிகளில் முதலீடு செய்திருப்பதாக தற்போதைய அரசு குற்றம்சாட்டி வருகிறது குறிப்பிடத்தக்கது. (5)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் 33 ஆவது பொது பட்டமளிப்பு விழாவில் B.sc பட்டத்தினைப் பெறுகின்ற எமது சக உத்தியோகத்தர்

செல்வி

நர்மதா முருகானந்தம்

(B.sc) அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உதவிப் பணிப்பாளரும்
சக உத்தியோகத்தர்களும், காணிசீர்திருத்த ஆணைக்குழு
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

மணிவிழா வாழ்த்துக்கள்

இன்று மணிவிழாக் காணும்

திரு.வேலுப்பிள்ளை முருகமூர்த்தி

(B.Sc, Dip.in.Edu, Dip.in.Sch.Mgt.Maths Trained, S.L.P.S- 1)

யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்.

நாற்பதாண்டுகளில் நாற்பதாயிரம் மாணவ மனங்களில் கணித விதை
வீசி கற்றலில் தடைநிலை மாணவனிடமும் காத்திரமான
அறுவடை பெற்றிட்ட கணித கலைஞனே
வாழிய பல்லாண்டு வாழிய பல்லாயிரமாண்டு

வாழ்த்துவோர்:-
பணிவான மாணவர்கள்,
பொ.யோகேஸ்வரன்(ஆசிரியர்)
யா/ சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்

யோ.தனுஷன்,
யோ.தனேஷன்
யா/யாழ்ரன் கல்லூரி,
காரைநகர்.

வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளின் செயற்பாடுகளுக்காக பின்வரும் வசதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் கட்டடமும் காணியும் வாடகைக்கு / குத்தகைக்கு வழங்க விரும்புபவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

வைத்தியசாலையின் பெயர்	நிபந்தனைகள்
மாவட்ட சித்த வைத்தியசாலை– யாழ்ப்பாணம்	1.குறைந்தது 5000 சதுர அடிகளைக் கொண்ட மாடிக் கட்டடமும், வாகனத் தரிப்பிடத்திற்கான நிலப்பகுதியையும் கொண்டிருத்தல் வேண்டும். 2.யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் / அண்மைய பகுதியில் அமைந்திருத்தல் வேண்டும்.
சித்த மத்திய மருந்தகம் - வேலணை	1. வேலணை பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் அமைந்திருத்தல் வேண்டும். 2. குறைந்தது 1200 சதுர அடி அளவுடைய 03 அறைகளை உள்ளடக்கியதான கட்டடமாக இருத்தல் வேண்டும்.
	பொதுவான நிபந்தனைகள்

1. பேரூந்துப் போக்குவரத்து மார்க்கங்களை உடைய பிரதான வீதியைஅண்மித்த கட்டடங்கள் விரும்பப்படும்.
2. மின்சார வசதி, நீர் வசதிகள் மற்றும் கழிப்பறை வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
3. குறைந்தது 2 வருடங்களிற்கு வாடகைக்கு வழங்கக் கூடியதாக இருத்தல்
4. முற்பணம் வழங்கப்படமாட்டாது
5. மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை வழங்கப்படும்

மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டதான விண்ணப்பத்தில் வீட்டுஉரிமையாளரின் முழுப் பெயர், தொடர்பு முகவரி, தொலைபேசி இலக்கம், எதிர்பார்க்கும் மாதாந்த வாடகைத் தொகை ஆகிய விவரங்களுடன் ஏனைய தகவல்களையும் உள்ளடக்கி தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்படிவத்தினை, கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் **"கட்டடம் வாடகைக்கு / குத்தகைக்கு"** எனகுறிப்பிட்டு **"மாகாண ஆணையாளர், சுதேச மருத்துவத்திணைக்களம், வடமாகாணம், இல.611, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்"** என்னும் முகவரிக்கு 28.12.2017ஆம் திகதிக்குமுன்னர் கிடைக்கக்கூடிய வகையில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

டாக்டர்.(திருமதி).சி.துரைரட்ணம்.
மாகாணஆணையாளர்,
சுதேசமருத்துவத் திணைக்களம்,
வடமாகாணம்.
தொலைபேசி இல. 021 222 0824

04.12.2017 - 31.12.2017 வரை போத்தீஸ் இன்
நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
10% - 20% விசேட விலைக் கழிவுகள் வழங்கப்படுகின்றன

New போத்தீஸ்

திருமணப் பட்டுப்புடைவைகளின் ஆலயம்
Alayam of Silks

பெண்களுக்கான திருமண பட்டுப் புடைவைகள்
மற்றும் மங்கலகரமான நிகழ்வுகளுக்கான
அனைத்து புடைவைகளும்

ஆடவர், சிறுவர்களுக்கான
அனைத்து ஆடைகளுக்கும்

New Collection
New Style

இல.27,28, கஸ்தூரியார் வீதி,
(புதிய மாநகரசபைக் கட்டடம்)
யாழ்ப்பாணம்.

021 222 5464

FOOD City

பண்டிகை காலத்தை முன்னிட்டு
01.12.2017 - 15.01.2018 வரை

அன்னை நாகா பூட் சிற்றி

நூற்றுக்கணக்கான அத்தியாவசியப் பொருள்களின் அதிரடி விலைக்குறைப்பு!

SALE 10% - 45 % வரை விலைக் கழிவுடன்

எம்மிடம் கொள்வனவு செய்யும்
வாடிக்கையாளர்களில்
03 அதிஷ்டசாலிகளுக்கு
தங்க நாணயங்களும்,

மற்றும் 100 இற்கும் மேற்பட்ட அதிஷ்டசாலிகளுக்கு
Gas Cooker, Table Fan, Kettle, Cooking set
போன்ற பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படும்.

இன்றே விரையுங்கள்!!!

வாடிக்கையாளர்களின் நலன்கருதி
விசேட வாகனதரிப்பிட வசதி செய்யப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 492 7081

FOOD City

கிளை: நல்லூர்
தொ.பே: 021 492 7082

ஏறாவூரில் நேற்று சமூக விழிப்புணர்வுப் பேரணி

மட்டக்களப்பு,டிசெ.8

ஏறாவூர் நகர் பிரதேச செயலகத்துடன் இணைந்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஏற்பாடு செய்த சமூக விழிப்புணர்வுப் பேரணி நேற்று ஏறாவூரில் நடைபெற்றது.

இளவயது திருமணம் மற்றும் போதைப் பொருள் பாவனையைத் தவிர்த்து கல்வியில் மேம்பட்ட சிறுவர் சமுதாயத்தை உருவாக்குவோம் என்ற தொனிப்பொருளில் பேரணி மேற்கொள்ளப்பட்டது.

சுலோகங்கள் மற்றும் பதாகைகளை ஏந்திய சிறுவர்கள் முஹாஜிரீன் கிராமத்தின் பிரதான பாதைகளில் பேரணியாக வந்தனர்.

பேரணியைத் தொடர்ந்து அறிவூட்டல் செயலமர்வு பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

மீள்குடியேற்றப் பிரதேசமான முஹாஜிரீன் கிராமத்தில் சமூக சீர்திருத்தத்தை ஏற்படுத்தும் நோக்குடன் இவ்வாறான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பேரணியில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கிராம அலுவலர், நிர்வாக உத்தியோகத்தர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற.ரி4)

மீனவரைக் காணவில்லை

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை ஒலுவில் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் படகு கவிழ்ந்ததில் காணாமற் போயுள்ளார். என்று தெரிவிக்கப்பட்டது.

ஒலுவில் பகுதியைச் சேர்ந்த அபுசாலி முகம்மது இப்றாகிம் (வயது33) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே காணாமற் போயுள்ளார்.

ஒலுவில் வெளிச்ச வீட்டுப் பிரதேசத்தில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர், நேற்று அதிகாலை காணாமற்போயுள்ளாரென, அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமற் போன மீனவரைத் தேடும் பணியில் பொலிஸாரும் பொதுமக்களும் ஈடுபட்டுள்ளனர். (ரி2)

பொது நிகழ்வுகளில் தமிழர் பாரம்பரியம் அவசியம்

ப.சத்தியலிங்கம் தெரிவிப்பு

வவுனியா, டிசெ.8

பொது நிகழ்வுகள் நடைபெறும் போது தமிழர்களின் பாரம்பரியம் பேணப்படுதல் வேண்டும் என வடமாகாண சபை உறுப்பினரும் முன்னாள் சுகாதார அமைச்சருமாகிய மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு தமிழர் பாரம்பரிய வாத்தியக் கருவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்த தாவது:

வரவேற்பு நிகழ்வுகளில் மேலைத்தேய வாத்தியங்கள் இசைக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும்.

மாகாணசபை உறுப்பினர்களுக்கான குறித்தொதுக்கப்பட்ட கொடை நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு இலட்சத்து 52 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன.

பாடசாலையின் அதிபர் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற,ரி5,101)

தேவை

உணவகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. (ஆண் , பெண்)

தொடர்பு :- 077 480 3413

மரண அறிவித்தல்கள்

திருமதி தனலட்சுமி குணரத்தினம்

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி குணரத்தினம் நேற்று (07.12.2017) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முத்தையா - மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகளும் குணரெத்தினத்தின் அன்பு மனைவியும் பத்மலோஜினி, திருஞானசம்பந்தர், குகதாஸ், நற்குணசீலன், ஜெயசீலன், நவசீலன், சத்தியசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் லோகநாதன், நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் கொழும்புத்துறை, 5 ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள அவரது பெறாமகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.00 மணிக்கு கொழும்புத்துறை, துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

பிறப்பு
25 . 04 . 1932

இறப்பு
06 . 12 . 2017

தம்பிப்பிள்ளை அருணாசலம்

மாகியப்புலம் வீதி, ஏழாலை வடக்கினைப் பிறப்பிடமாகவும், மாணிக்கர் வீதி, இணுவில் கிழக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை அருணாசலம் 06.12.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சிதம்பரம் தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா - செல்லாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், சோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பார்வதியின் அன்புத் தம்பியும், நாகேஸ்வரி, திருஞானசெல்வம் (இந்தியா), ஞானகாந்தன் (ஜேர்மனி), ஞானதாஸ் (சுவிஸ்), யோகேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தசிவம், தவமலர், காலஞ்சென்ற வாசுகி மற்றும் ஜெகந்தினி, மதிவதனி, கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், தம்பிராசாவின் மைத்துனரும், சர்வானந்தா, செந்தூரன், துஷா, சோபனராஜ், நிரோசன், நிதுஷா, சுகிர்தா, நிருஷன், கிருஷன், அனுஷன், ஞானுயா, பிரவீன், தர்சிகா, ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஹரிதா, ஹருணி ஆகியோரின் அன்புபூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாணிக்கர் வீதி,
இணுவில் கிழக்கு

தகவல்
குடும்பத்தினர்

021 224 3179, 077 359 8977

தசாக கிருஹயக்ஞ அழைப்பு

நிகழும் மங்களகரமான
ஏ விளம்பி வருஷம் கார்த்திகை மாதம் (13 ஆம் நாள்)
29.11.2017 புதன்கிழமை இரவு இறைபதம் அடைந்த எமது அன்புத் தாயார்

அமரர்

சிவஸ்ரீ.சதாசிவக் குருக்கள் - மீனாக்ஷி அம்மா

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

08.12.2017 வெள்ளிக்கிழமை 10.00 மணியளவில் தசாகம்
09.12.2017 சனிக்கிழமை - ஏகோதிஷ்டம், மாசிகம்
10.12.2017 ஞாயிற்றுக்கிழமை சபிண்டீகரணம்
11.12.2017 திங்கட்கிழமை கிருஹயக்ஞம், சமாராதனை

மேற்படி கிரியைகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா ஈ.டேற்றத்திற்கான பிரார்த்தனையிலும் சமாராதனையிலும் (மதிய போசனம்) கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இலங்கை நாயகி அம்மன் கோயிலடி,
பருத்தித்துறை வீதி, 1 ம் ஒழுங்கை,
கல்வியங்காடு.
076 696 3219

குடும்பத்தினர்.
சிவஸ்ரீ.ச.சிவநேசக்குருக்கள் (சேகர்ஜயா)

6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 . 12 . 1956

தோற்றம் 08 . 02 . 1966

மார்க்கண்டு உதயகுமார்

(புத்தூர் உதபால் ஊழியர்)

உதயகுமார் வசந்திமாலா

இறைவன் அடியில் - 08.12.2011

கடவுளாய் கிடைத்த பொக்கிஷமான – எம்
இதயத் தெய்வங்களே – எம்
உயிரும் உலகும் நீராக வாழ்ந்தீர்களே – நாம்
கதறி அழுகின்றோம் கனவிலும் தேடுகின்றோம்

வளம் கண்டு வாழும் மிருகம் கூட
இனம் தனை கொல்வதில்லை
ஆறாம் அறிவு கொண்ட மனிதம் – எமக்கு
உயர்குருதி கொடுத்த உம்மை – எம்
குருதி கொதிக்க கொன்றது ஏனோ?

ஆண்டுகள் ஆறு வன்முறையும் அமைதியும்
அரங்கேறிய நாள் இது
வெளிச்சம் இருண்டது வன்முறையால் வீழ்ந்தது
வீழ்ந்தது அனைத்தும் வீணாவதில்லை விதையாகும்

குருதி குடித்த அரக்கர்களின் வாழ்வு
அதிக காலம் இல்லை – வெறிபிடித்து

ஆடிய ஆட்டத்தை அடக்க
ஆண்டவன் இருக்கிறான்

உம் பிரிவுகளினால் துவண்டு வாடி
நினைவுகளில் மட்டுமே வாழ்கின்றோம்
இரத்தம் சிந்தி இறைவன் பாதம் சேர்ந்த
உங்களை எண்ணி நிலம் கண்ணீர் சிந்தி
உயிர் வாழ்கின்ற உங்கள் சொத்துக்கள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிள்ளைகள்

செந்தூரன் (பிரான்ஸ்), குகதீபன் (கனடா),
சங்கீதன் (கனடா), கோபிகா (கனடா)

நீர்வேலி மேற்கு,
இராஜவீதி, 4ஆம் மைல்,
நீர்வேலி.

Jaffna District Beautician Association

யாழ். மாவட்ட அழகுக்கலை நிபுணர்கள் ஒன்றியத்தின்
"வருடாந்த ஒன்றுகூடல் மற்றும்
விருது வழங்கும்"

நிகழ்ச்சி!

10.12.2017 (ஞாயிற்றுக்கிழமை)
பிற்பகல் 1.30 மணிமுதல்
(இரவு போசனம் உட்பட) செல்வமஹால் மண்டபம்
(இல.1229 கே.கே.எஸ். வீதி,)

அனைத்து அழகுக்கலை நிபுணர்களையும்
குடும்பத்துடன் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதான அனுசரணையாளர்
JEEVAN STUDIO

நுழைவுக் கட்டணம்
Rs.250/- மட்டுமே

பாராட்டி வாழ்த்துகின்றோம்

மறவன்புலோ மத்தி
சாவகச்சேரியை சேர்ந்த
திருமதி
சயிதா நிரோசன்
அவர்கள் பொல்கொல்ல கட்டுகஸ்தோட்ட
மகிந்த ராஜபக்ஷ அரங்கில் 23.11.2017
அன்று இடம் பெற்ற பேராதனை
பல்கலைக்கழகத்தின் (வெளிவாரி)
பட்டமளிப்பு விழாவில் "கலைமாணி"
பட்டம் பெற்றமைக்காக பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

எமது ஊருக்கு பெருமை சேர்த்து தந்த இவர் மேன்மேலும் பல பட்டங்கள்
பெற்று பெருவாழ்வு வாழவும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
திருமதி செ.சுபாசினி மறவன்புலோ மத்தி,
இணைந்த கரங்கள் அமைப்பு.

சுரக்ஷா மாணவர் காப்புறுதித் திட்டம் அறிமுகம்

தேசிய சுரக்ஷா மாணவர் காப்புறுதித் திட்டம் நேற்று நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப் பட்டது. பாடசாலை மாணவர்களின் நலன் சார்ந்த மாணவர் காப்பீடு (சுரக்ஷா) நாடு முழுவதும் நேற்று ஆரம்பமா கியது.

வடபகுதியில், யாழ்ப்பாண ம் வைத்தீஸ்வராக் கல்லூரி, சாவகச் சேரி கச்சாய் அ.த.க. பாடசாலை, வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல் லூரி, தொண்டம னாறு வீரகத்திப் பிள்ளை மகா வித் தியாலயம், நெல்லி யடி மத்திய கல் லூரி போன்ற பாட சாலைகளில் சுரக்ஷா மாணவர் காப்புறு தித் திட்டம் அறிமு கப்படுத்தப்பட்டது.

இந்த அறிமுக நிகழ் வுகளின்போது, அர சினால் ஆரம்பிக் கப்பட்டுள்ள காப்பு றுதித் திட்டத்தின் நன் மையை மாணவர் களுக்கு நேரடியாக கொண்டு செல்வ தற்கான வழிமுறை கள், கருத்துரைகள் வழங்கப்பட்டன.

(ரி2,26,101)

கேள்வி அறிவித்தல்
சபை நிதி வேலைத்திட்டம் - 2017
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை வட மாகாணம்

2018ஆம் ஆண்டில் சபைக்கு பின்வரும் பொருள்கள் மற்றும் சேவை களினை வழங்கும் பொருட்டு பதிவு செய்து கொள்ள விரும்பும் தகைமை வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொகுதி A	பொருள்கள் விவரம்
A-01	காகிதாதிகள், எழுதுபொருள்கள் மற்றும் உபகரணங்கள்
A-02	தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும்
A-03	நூலகங்களுக்கான நூல்கள்
A-04	மின்சாரப் பொருள்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் இணைப்புப் பொருள்கள்
A-05	கணனி, இலத்திரனியல் பொருள்கள், நிழற்பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள்
A-06	திரைச்சீலைகள் மற்றும் துணிவகைகள்
A-07	தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மற்றும் அதுசார்பான பொருள்கள்
A-08	சுத்திகரிப்பு உபகரணங்கள், சுத்திகரிப்புப் பொருள்கள் மற்றும் தொற்று நீக்கிகள்
A-09	வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருள்கள்
A-10	எரிபொருள்கள், உராய்வு நீக்கிகள்
A-11	கட்டிட இரும்புப் பொருள்கள், வாணிஸ், பெயின்ட் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள்
A-12	கற்கள், மண் வகைகள்
A-13	தீராந்திகள், பலகைகள்
A-14	நீர் விநியோகப் பொருள்கள் மற்றும் இணைப்புப் பொருள்கள்

தொகுதி B	சேவைகள் விவரம்
B-01	கணனி, நிழற்பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் திருத்தமும், பராமரிப்பு செய்தலும்
B-02	மின்மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தமும் மீளமுறுக்குதலும்
B-03	இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
B-04	அலுவலக தளபாடங்கள், உபகரணங்கள் திருத்தமும் பராமரிப்பும்
B-05	அச்சிடுதலும் புத்தகங்கள் கட்டுதலும்
B-06	பாதுகாப்பு சேவையும், சுத்திகரிப்பு சேவையும்
B-07	வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள்
B-08	வாகன திருத்தம்
B-09	வாகன சுத்திகரிப்பு
B-10	இறப்பர் முத்திரை தயாரித்தல்
B-11	ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
B-12	கோலவுடை, சீருடை தைத்தல்

தொகுதி C	ஒப்பந்த வேலைகள் (CIDA) பதிவு உள்ளவர்கள் மட்டும்
C-01	கட்டிட நிர்மாணமும் திருத்தமும்
C-02	வீதி நிர்மாணமும் திருத்தமும்
C-03	கினறு அமைத்தல்

நிபந்தனைகள்

1. பதிவுகள் 2018ஆம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியாகும்
2. ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பப் படிவங் கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்துடன் பொருள்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்துகொள்வோர் ஒவ்வொரு விடயத்திற்கும் தனித்தனியாக ரூபா 500/= பதிவுக்கட்டண மாகவும், ஒப்பந்த வேலைகளுக்கு பதிவுசெய்துகொள்வோர் ரூபா1000/= பதிவுக் கட்டணமாகவும் செலுத்தி தலைமையலுவலகத்தில் 26.12.2017ஆம் திகதிவரை விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. பதிவுசெய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் தேவையேற்படும் சந்தர்ப்ப' ஙளில் இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக் களைக் கோருதல் மற்றும் ஃகாள்வனவு செய்யும் உரிமையும் வேறு பெறுகைச் செயற்பாடுகளைக் கையாளும் உரிமையும் பிரதேச சபைக்கு உண்டு.
4. மனுக்கள் கோரும் போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட்ட பொருள் களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காத பதிவு செய்த வழங்குனர்க ளின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்படும்.
5. வியாபார பதிவுச் சான்றிதழில் குறிப்பிட்ட பொருள்கள், சேவைகளுக்கு மட்டுமே வழங்குநர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.
6. பழுது பார்த்தலுக்கோ, வாகன பராமரிப்புக்கோ பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள், சேவிஸ் நிலை யங்கள் என்பன அடிப்படைத் தேவையான வசதிகளைக் கொண்டிருத்தல் அவசியம். தேவையேற் படும் போது இயந்திரப் பொறியியலாளர் மூலம் தரத்தினை பரிசீலனை செய்வதற்கான முழு அதிகாரம் உண்டு.
7. விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்கல் சேவைகளுக்கான விண்ணப்பம் -2018 எனக் குறிப்பிட்டு "செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்" என்னும் முகவரிக்கு 27.12.2017ஆம் திகதிக்கு முன்பதாக பதிவஞ்சல் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
8. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

திரு.ச.சந்திரமவுலி, செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.
07.12.2017.

வாழ்த்துகின்றோம்

திரு.சதாசிவம் அமிர்தலிங்கம்

(B.Sc (Hons), PGDE, PGDEM (Merit) M.Sc in Applied Statistics, M.Sc in information management, M.Phil in Education

பீடாதிபதி - யாழ்ப்பாண கல்வியியல் கல்லூரி)

இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி **முதுதத்துவமாணி** பட்டத்தைப் பெறும் மதிப்புக்கும் அன்புக்குமுரிய **திரு.ச.அமிர்தலிங்கம்** அவர்களை மனமார வாழ்த்தும்

பா.பாலசிறிந்திரன் -கலாதேவி
குடும்பத்தினர்.
வவுனியா.

STUDY IN CANADA

அழகுக்கலை மாணவர்களுக்கு எவரும் வழங்காத ஓர் அரிய வாய்ப்பு!

கனடாவில் அழகுக்கலை கல்வியினைத் தொடர இன்றே பதிவு செய்யுங்கள்.

- **அடிப்படைத் தகைமை :-** அழகுக்கலையில் 3 - 6 மாதகால Diploma
- கல்வி கற்கும் காலப்பகுதியில் உயர் வருமானத்தில் பகுதி நேர வேலை வாய்ப்புக்கள்
- எங்குமில்லாத மிகக் குறைந்த கட்டணங்கள்
- கல்வியின் பின்னர் உயர் வருமானத்துடன் கூடிய வேலைவாய்ப்புக்கான ஒழுங்குகள்.

2018 April / May செல்ல விரும்புபவர்கள் இன்றே நேரில் வாருங்கள் 5 பேருக்கு மட்டுமே இவ்வரிய வாய்ப்பு

- Advanced Bridal
- Makeup Advanced Air Brush
- Advanced Nailcare
- Advanced Skin Care and Facial Body Treatments
- மேலும் 30 இற்கும் மேற்பட்ட பாட நெறிகள்

தமிழ் மாணவர்களின் நான்கு வருடகால நம்பிக்கை

WIN STAR VISA CONSULTANTS
106, Post Box Junction, Palaly Road, Thirunelvely
www.winstarjaffna.com

போதைக்கு எதிரான விழிப்புணர்வு பரப்புரை

மட்டக்களப்பு,டிசெ.8

ஏறாவூர் பொலிஸார் "போதையற்ற நாளும் போதையற்ற நாடும்' எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வுபரப்புரையில் நேற்று ஈடுபட்டனர்.

ஏறாவூர் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் பணிப்புரைக்கமைய ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் மூத்த பொலிஸ் பரிசோதகருமான சிந்தக பீரிஸ் தலைமையில் இந்த விழிப்புணர்வு பரப்புரை மேற்கொள்ளப்பட்டது.

பேருந்துகள், மற்றும் முச்சக்கர வண்டிகளில் போதைப் பொருள் தொடர்பான விழிப்புணர்வு பரப்புரை ஸ்டிக்கர்கள் பொலிஸாரால் ஒட்டப்பட்டன.

இலங்கையை போதையற்ற தூய்மையான நாடாக மாற்றுவதில் பொலிஸாருடன் இணைந்து பொதுமக்களும் பணியாற்றினால் எதிர்கால சந்ததியை போதைக்கு எதிரான சமூகமாக உருவாக்க முடியும் என ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் மூத்த பொலிஸ் பரிசோதகருமான சிந்தக பீரிஸ் தெரிவித்தார்.

(ற.ரி4)

போசாக்கு தொடர்பான செயலமர்வு வடமராட்சியில்

கரணவாய், டிசெ. 8

பாடசாலைகளின் சுகாதாரத்துடன் தொடர்புடைய ஆசிரியர்களுக்கான போசாக்கு தொடர்பான செயலமர்வு நேற்று வடமராட்சி வலயக் கல்விப்பணி மனையின் மாநாட்டுமண்டபத்தில் இடம்பெற்றது.

வடமராட்சி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர் இ.தமிழ்மாறன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வலயக் கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் கரவெட்டிக்கோட்ட கல்விப்பணிப் பாளர்எஸ்.யோகநாதன் உட்படப் பலரும் கலந்து கொண்டுகருத்துரைகளை வழங்கினர். இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

(ற.ரி5,108)

அழுகிய நிலையில் மரக்கறிகள் மீட்பு

மட்டக்களப்பு,டிசெ.8

மட்டக்களப்பு சித்தாண்டி வாராந்த சந்தையில் அழுகிய நிலையில் விற்பனைக்காக வைக்கப்பட்ட ஒரு தொகை மரக்கறிகள் நேற்று மீட்கப்பட்டன.

பாவனையாளர்களிடமிருந்து கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த மரக்கறிகள் மீட்கப்பட்டதென சித்தாண்டி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சி.சிவகாந்தன் தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட மரக்கறிகளை இன்று ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கையெடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

(ற.ரி4)

கங்கொடவில நீதிமன்றம் முன் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிசெ.8

கங்கொடவில நீதிவான் நீதிமன்றத்தின் முன்பாக கொஹுவளையில் உள்ள 'தாருன் நுஸ்ரா' ஆதரவற்றோர் இல்லத்தினரால் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்டுக்கப்பட்டது.

'தாருன் நுஸ்ரா' என்ற ஆதரவற்றோர் இல்லத்தில் 18 சிறுமிகள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டனர். பாதிக்கப்பட்ட சிறுமிகளுக்கு நீதி வழங்க வேண்டும் என்று இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

(ற-ரி5)

உங்களது மூலதன கொடுக்கல் வாங்கலுக்குப் பொருத்தமான விசேட சேவைகளைப் பெற்றுக்கொள்ள

எசட்லைன்

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள பல நிதிச்சேவைகள்

• லீசிங் வசதி • வாடகைக் கொள்வனவு • கடன்வசதிகள் • பக்டரின் (Factoring)

Member of David Pieris Group of Companies

0114 700 100

எசட்லைன்
දේශයට ජවයක්

அமெ. இஸ்ரேலுக்கு எதிராக

பலஸ்தீனம் கொதித்தது

ஜெருசலேம், டிசெ. 8

இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேம் அறிவிக்கப்பட்டதை அடுத்து, யூதர்களுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையில் ஜெருசலேம் உள்ளிட்ட சில நகர்களில் கலவரம் வெடித்துள்ளது.

பலஸ்தீனத்தின் பல இடங்களை ஆக்கிரமித்து வைத்துள்ளது இஸ்ரேல். ஜெருசலேமும் அவ்வாறு இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்டது. அங்கு தனது குடியிருப்புத் தொகுதிகளை விரைவாக நிறுவி வந்த இஸ்ரேல், ஜெருசலேமை தனது தலைநகரமாக தற்போது மாற்றியுள்ளது.

இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அறிவித்துள்ளது அமெரிக்கா. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இது தொடர்பான அறிவிப்பில் கைச்சாத்திட்டுள்ளார். அவரின் இந்த அறிவிப்புக்கு எதிராக பரவலாகக் கலவரங்கள் வெடித்துள்ளன.

பலஸ்தீனத்தின் பெத்தலகேம் நகரில் (இயேசு பிறந்ததாகக் கருதப்படும் இடம்) உள்ள மிகவும் பழமையான தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த கிறிஸ்மஸ் விளக்கை அணைத்துப் பலஸ்தீனர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"ஜெருசலேம் பலஸ்தீனத்தின் இதயம்' என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் முழக்கமிட்டனர்'' என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது.

இஸ்ரேல், அமெரிக்கா ஆகிய நாடுகளின் கொடிகளும், ட்ரம்ப், இஸ்ரேல் அதிபர் நெத்தன்யாகு ஆகியோரின் உருவப்படங்களும் ஆர்ப்பாட்டக்காரர்களால் எரியூட்டப்பட்டன. (ம)

> **இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அறிவித்துள்ளது அமெரிக்கா. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இது தொடர்பான அறிவிப்பில் கைச்சாத்திட்டுள்ளார். அவரின் இந்த அறிவிப்புக்கு எதிராக பரவலாகக் கலவரங்கள் வெடித்துள்ளன.**

இன்று கூடுகிறது ஐ.நா. சபை

வொஷிங்டன், டிசெ. 8

இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேம் அறிவிக்கப்பட்ட விடயம் தொடர்பில் விவாதிப்பதற்காக இன்று கூடுகிறது ஐ.நா. சபை.

பிரான்ஸ், சீனா, துருக்கி, ஈரான், மத்திய கிழக்கு நாடுகள் எனப் பலவும் இந்த முடிவுக்குக் கண்டம் தெரிவித்தன.

ஐ.நா. சபை அவசரமாகக் கூட்டப்பட்டு இது விடயத்தில் விவாதிக்க வேண்டும் என்றும் அவை வலியுறுத்தின. இதையடுத்து இன்று ஐ.நா. பாதுகாப்புச் சபை கூடுகிறது.

இஸ்ரேல், அமெரிக்கா ஆகியவற்றுக்கு எதிராக எந்தவொரு கண்டனத் தீர்மானத்தையும் நிறைவேற்ற முடியாத நிலையிலேயே ஐ.நா. சபை இன்று கூடுகிறது. ஏனெனில் அமெரிக்காவிடம் ஐ.நா. சபையில் கொண்டு வரப்படும் எந்தத் தீர்மானத்தையும் இல்லாமல் செய்யும் வீட்டோ அதிகாரம் உள்ளது. (ம)

அதிபர் ட்ரம்புக்கு சீனா கண்டனம்

இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அறிவித்த அமெரிக்க அதிபர் ட்ரம்பின் முடிவுக்குச் சீனா கடும் கண்டனம் தெரிவித்தது.

இந்த விவகாரம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள சீன அயலுறவுத்துறை செய்தி தொடர்பாளர் கெங் வாங், "ட்ரம்பின் இந்த முடிவால் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் பதற்றம் அதிகரிக்க வாய்ப்புக்கள் இருப்பதாகக் கவலை கொள்ள வேண்டியுள்ளது. மத்தியகிழக்குப்பிராந்தியத்தின் அமைதி மற்றும் தேவைகளை அனைத்துத் தரப்பினரும் கருத்தில் கொள்ளவேண்டும். பலஸ்தீனப் பிரச்சினைக்கான அடிப்படைத் தீர்வுகளைப் பாதிக்காதவாறும் அந்தப் பகுதியில் புதிய மோதல்களை உருவாக்காத வகையிலும் எமது சொற்களும் செயற்பாடுகளும் அமைய வேண்டும்" என்று அவர் அறிவுறுத்தியுள்ளார். (ம)

மியன்மாருக்கு எதிராக பன்னாட்டு விசாரணை

ஐ.நா. மனித உரிமைகள் சபை ஐ.நா. சபைக்கு பரிந்துரைத்தது

"ரொஹிங்ய இஸ்லாமியர்களின் விவகாரத்தில், மியன்மார் மீது பன்னாட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும்" என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பொதுச் செயலாளர் ஹுசைன் தெரிவித்தார்.

மியன்மாரில் சிறுபான்மை இனத்தவர்களான ரொஹிங்யர்கள் மீது மியன்மார் இராணுவம் நடத்திய தாக்குதல்கள் இன அழிப்புச் செய்வதற்கான பாடப்புத்தகம் போன்று உள்ளது என்று ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் குத்தேரஸ் ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில், மியன்மாருக்கு எதிராகப் பன்னாட்டு விசாரணையை வலியுறுத்தியுள்ளார் ஹுசைன்.

"ரொஹிங்யர்கள் விடயத்தில் இடம்பெற்ற உண்மையைக் கண்டறியவும், பாரபட்சமற்ற வகையில் இதற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில் சுதந்திரமான விசாரணை நடத்தும் ஒரு அமைப்பை ஏற்படுத்தவும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கு ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பு பரிந்துரை செய்கிறது" என்று ஹுசைன் மேலும் தெரிவித்தார். (ம)

இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவிப்பதை கிழக்கு ஜெருசலேமில் இருந்தவாறு நேரலையாகப் பார்த்துக்கொண்டுள்ளனர் பலஸ்தீனர்கள். (ம)

ஈரானில் நிலநடுக்கம்

தெஹ்ரோன், டிசெ. 8

ஈரானின் தென்கிழக்குப் பகுதியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6:1 அலகுகளாகப் பதிவானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடல் மட்டத்தில் இருந்து சுமார் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழப்புத் தொடர்பில் எந்தத் தகவலும் பதிவாகவில்லை. எனினும் 43 பேர் காயமடைந்தனர். அவர்களில் சிலரின் நிலமை கவலைக்கிடம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் 2003ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கத்தை அடுத்து சுமார் 26ஆயிரம் பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

போட்டியிடுகிறார் புடின்

ரஷ்ய அதிபருக்கான தேர்தல் அடுத்த வருடம் நடைபெறவுள்ள நிலையில், இந்தத் தேர்தலில் தான் போட்டியிடுவதை உறுதிப்படுத்தியுள்ளார் தற்போதைய அதிபரான புடின்.

கடந்த 2012ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார் புடின். அவரது ஆறாண்டு பதவிக்காலம் எதிர்வரும் மே மாதத்துடன் நிறைவடையவுள்ளது. இந்த நிலையில் அடுத்த ஆண்டு நடைபெறும் தேர்தலில் மீண்டும் போட்டியிடப் போவதாக நேற்று அறிவித்தார் புடின். (ம)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 33 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் தொழில் நிர்வாகமாணி (BBA) மற்றும் வணிகமாணி (B.Com) சிறப்பு பட்டத்தினைப் பெறுகின்ற எமது சிரேஸ்ட சகோதர சகோதரிகளைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட மாணவர்கள், யாழ் பல்கலைக்கழக

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

தமிழ் அரசியலின் தலைகீழ் மாற்றம்

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில்உள்ளகட்சிகள்உடைந்துசிதறிப்போட்டியிடும்போல ஒரு தோற்றப்பாடு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அப்படியெல்லாம் உடைந்துபோய்விடாமல்ஒற்றுமையாகஇருக்கவேண்டும்என்று வெளிநாட்டுத்தூதுவர்கள், குறிப்பாக மேற்கு நாட்டுத் தூதுவர்கள்தமிழ்த்தலைவர்களிடம்எடுத்துக்கூறியிருக்கிறார்கள்என்று செய்திகள்வந்துள்ளன. அதற்கு மேலாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்த விடயத்தில் அக்கறைகாட்டி, கூட்டமைப்பின் ஒற்றுமையைக் கட்டிக்காக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார் என்றும் செய்திகள் வந்துள்ளன.

ஒருநாட்டின்மூன்றாவது அதிகாரமட்டத்துக்கானதேர்தலில் ஒருசில கட்சிகள் சேர்ந்து போட்டியிடுவதிலும் பிரிந்து போட்டியிடுவதிலும் மேற்கு நாடுகளும் நாட்டின் தலைமை அமைச்சரும் ஏன் இவ்வளவு அக்கறை காட்டுகிறார்கள்?

இந்தக்கேள்விக்கானபதில்மிகச்சுவாரசியமானது.தமிழர்களின் அரசியல் பயணத்தின் தலைகீழ் மாற்றத்தை உணர்த்துவது.

கொழும்புஅரசுகளுக்குஎதிராகத்தமிழர்கள்ஒற்றுமைப்படவேண்டும்என்பதே வரலாறு முழுவதும் எழுப்பப்பட்டுவந்தகோரிக்கையாகும்.தமிழ்இனம்ஒற்றுமைப்பட்டு நிற்பதன் மூலமே கொழும்பை வெற்றிகொள்ளமுடியும் என்றே அரசியல் தலைவர்களும் விடுதலை இயக்கங்களின்தலைவர்களும்மீண்டும்மீண்டும்வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஏகத் தலைமையாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் அனைத்தும் ஏற்றுக்கொண்டதுகூடஅத்தகையகொழும்புக்குஎதிரானஅணிதிரளுதலுக்கானதுதான்.

ஆனால், இந்தத்தடவைகூட்டமைப்பில்உள்ளதமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்பட்டு நிற்கவேண்டும் என்று மேற்கு நாடுகளும் ரணில் விக்கிரமசிங்கவும் விரும்புவதற்கான காரணம் கொழும்பு அரசைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

கொழும்பைஎதிர்த்துஒற்றுமைப்படவேண்டியதமிழ்க் கட்சிகளை கொழும்பைப் பாதுகாப்பதற்காக ஒன்றுபடுமாறு கேட்கின்றன இந்தத் தரப்புகள். இது தமிழர்களின் அரசியல் தலைகீழாகி இருப்பதற்கான அறிகுறியன்றி வேறென்ன?

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புதனித்தனிக்கட்சிகளாகச் சிதறுவது நாடாளுமன்றத்தில் அதற்கிருக்கும் ஒருங்கிணைந்த 16 உறுப்பினர்கள் பலத்தைப் பாதிக்கும். இப்போது சரியோ தவறோ, எதிர்ப்பு இருக்கிறதோ இல்லையோ கூட்டமைப்பு என்ற வட்டத்துக்குள் வைத்து இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கட்டுப்படுத்த சம்பந்தனால் முடிகிறது. அதனால் தனக்குத் தேவைப்படும்போது அந்தப்பலத்தைப்பயன்படுத்திக்கொள்ளலாம்என்கிறநம்பிக்கைஅரசுக்குஇருக்கிறது.குறிப்பாக மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதற்குஅரசுக்குகூட்டமைப்பின்முழுப்பலம்தேவை.

கூட்டமைப்பு உடைந்து அனைத்துக்கட்சிகளும்தனித்தனியேமுடிவெடுக்கும்நிலைமைஒன்றுதோன்றுமானால் அப்போது ஒன்றிணைந்த அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலத்தை ரணிலால் பயன்படுத்த முடியாமல் போய்விடும். அப்போது, முஸ்லிம் தரப்புகளைப் போலவேபலதமிழ்த்தரப்புகளுடன்பேரம்பேசவேண்டிய நிலமை அரசுக்கு ஏற்படும்.

அத்தகைய இக்கட்டை, சிக்கலைத் தவிர்ப்பதற்காகத் தான் கூட்டமைப்பு உடைந்துவிடாமல் இருக்கவேண்டும் என்று ரணிலும் மேற்குநாட்டுத்தூதர்களும் விரும்புகின்றனர்பாடுபடுகின்றனர்.ஆக,கொழும்புஅரசைப் பாதுகாக்க இப்போதுதமிழர்கள்ஒற்றுமைப்படவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

எதிரணியினர் பிளவுபட்டு நிற்பதால் உறுதியாகின்றது கூட்டமைப்பின் வெற்றி

சேரலாதன்

உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்புக்கு எதிரான அணியொன்றை அமைப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. கூட்டமைப்பிலிருந்துகழன்றுசென்ற சுரேஸ்பிரேமச்சந்திரன்உடனடியாகவே கஜேந்திரகுமாருடன் கூட்டுச் சேர்ந்து கொண்டார். ஆனால் பொதுச்சின்னம் தொடர்பான சர்ச்சையால் இந்தக் கூட்டு அற்ப ஆயுளில் முடிவடைந்துவிட்டது. ஒத்தகொள்கை இல்லாதவர்கள் கூட்டுச்சேரும் போது, இத்தகையதொரு நிலைதான் ஏற்படும். தற்போது முதிர்ந்த அரசியல்வாதியான ஆனந்தசங்கரியுடன் தமது தரப்புசங்கமமாகிவிட்டதாகஈ.பி.ஆர்.எல்.எவ் தெரிவித்துள்ளது. உதயசூரியன் சின்னத்தையும் அந்தக்கட்சிஏற்றுக்கொண்டுள்ளது. இதே வேளை கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசியமக்கள்முன்னணிவடக்குகிழக்கில் தனித்துப்போட்டியிடுமென அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் தெரிவித்துள்ளார். இதையெல்லாம் பார்க்கும்போது கூட்டமைப்புக்கு எதிரானதொரு பலமிக்க பொது எதிரணிகளத்தில் இறங்கிச்செயற்படுவதென்பது சாத்தியமற்றது என்பது தெரியவருகின்றது.

இதேவேளை, வீட்டுச்சின்னத்தில் போட்டியிடப்போகும் தமிழ் அரசுக்கட்சி தலைமையிலான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, உள்ளூராட்சித் தேர்தலில் கணிசமான வெற்றிபெற்று விட்டால், புதிய அரசமைப்பின் இடைக்கால அறிக்கையைத் தமிழ்மக்கள் ஏற்றுக்கொண்டுவிட்டார்களெனப்பரப்புரைசெய்வதற்கு வாய்ப்புக் கிடைத்து விடுமென நம்புகின்றது. தமிழ் அரசுக்கட்சி அவ்வாறு நம்புவதில் தவறொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதில் கூட்டமைப்பு கடும் அக்கறை

புதியஅரசமைப்பின்நிறைவேற்றம் தொடர்பாகக் கூட்டமைப்பு அதிக அக்கறை காட்டி வருகின்றது. இதன் மூலமாகத் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமென அந்த அமைப்பு நம்புகின்றது. இது தொடர்பாக கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சருடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளார். இதற்கு மேலதிகமாகத் தலைமை அமைச்சருடன் சென்று பௌத்த பீடாதிபதிகளுடனும் பேசியுள்ளார். எப்பாடுபட்டேனும் தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் புதிய அரசமைப்பு அமைய வேண்டும் என்பதேஅவரதுஎதிர்பார்ப்பு. ஆனால் சம்பந்தனது அந்த எதிர்பார்ப்பு பொய்த்துவிட வேண்டுமென எதிரணியினர் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முயலும் முன்னாள் போராளிகள் தரப்பு

இதேவேளை முன்னாள் தமிழ்ப் போராளிகள் சிலரும் மகிந்தவுக்கு ஆதரவு தெரிவிக்க முன்வந்துள்ளனர் எனச் சில ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

மகிந்தவின் கட்சி உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கிலும் போட்டியிடவுள்ளது. சாவகச்சேரி நகரசபைக்கான தேர்தலில் அந்தக் கட்சி போட்டியிடுவது ஏற்கனவே உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து ஏனைய சபைகளுக்கு இடம்பெறப்போகும் தேர்தலிலும் அந்தக்கட்சி போட்டியிடப் போவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் போதேபல முன்னாள் போராளிகளும், சமூகத்தில் முக்கிய பொறுப்பை வகிப்பவர்களும் மகிந்தவுக்கு ஆதரவு தெரிவிக்க முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மகிந்தவின் ஆட்சிக்காலத்திலேயே ஆயிரக்கணக்கான புலிப்போராளிகள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் தற்போது சமூகத்தில் இணைந்து வாழ்கின்றனர்.

இனவாதிகளில் சிலர் இவர்களால் நாட்டுக்கு ஆபத்து ஏற்படுமெனவும், இவர்களைக் கைது செய்து தடுத்து வைக்கவேண்டுமெனவும் கூறி வருகின்றனர். மேலும் வடக்கில் இடம்பெற்ற சில சம்பவங்களுடன் இவர்களைத் தொடர்புபடுத்தியும் வருகின்றனர். இதனால் முன்னாள் போராளிகள் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். தமக்கு நிரந்தரமான பாதுகாப்புத் தேவை என்பதையும் இவர்கள் உணர்ந்துள்ளனர். நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் மகிந்த மீண்டும் பதவிக்கு வருவதற்கான வாய்ப்புக்களும் அதிகரித்துள்ளன. இதனால் முன்னாள் போராளிகள் மகிந்தவுக்கு ஆதரவு வழங்குவதற்கு முன்வந்திருக்கலாமென நம்பப்படுகின்றது.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மத்தியில் கருத்து வேறுபாடுகள்

தற்போதைய நிலையில் மாவை. சேனாதிராசா தலைமையிலான இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியும், செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோவும், சித்தார்த்தன் தலைமையிலான புளொட்டும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன. ரெலோ அமைப்பு கூட்டமைப்பிலிருந்து விலகிக் கொண்டுள்ளதாகவும் பேசப்படுகின்றன. இதே வேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இளைஞர்யுவதிகள்மற்றும்முன்னாள் போராளிகளை இணைத்துக் கொண்டு உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்குமென அதன் செயலாளர் நாயகமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். தற்போதைய அரசியல் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அவர் இதைக் தெரிவித்ததாக ஊகிக்க முடிகின்றது. புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்கான தேர்தலில் இளைஞர்கள் சிலர் சுயேச்சைக்குழுவாகக்களமிறங்கவுள்ளதாக ஏற்கனவே தகவல் வெளியாகியிருந்தது. இவர்களைச் சமாதானப்படுத்துவதில் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் ஈடுபட்டதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அடுத்த ஆண்டு இடம்பெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தலுக்கு உள்ளூராட்சித் தேர்தல்களை ஒரு முன்னோட்டமாகவே பார்க்கவேண்டியுள்ளது. மாகாணசபைத் தேர்தலிலும் தற்போதுள்ளதைப் போன்றதொரு நிலையேநீடிக்கப்போகின்றது. இதேவேளை தமிழ் மக்கள் பேரவை பல்வேறு கோணங்களில் பிளவுபட்டுக்காணப்படுகின்றது. அதில் அங்கம் வகிப்பவர்கள் வெவ்வேறு திசைகளில் நிற்பதைக் காண முடிகின்றது. இதனால் அதன் அரசியல் நோக்கம் ஆரம்பத்திலேயே சிதைந்து போவதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கிவிட்டன.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது இடம்பெறவுள்ள உள்ளூராட்சிமன்றங்களுக்கானதேர்தலில் கூட்டமைப்பின் வெற்றி பிரகாசமாகவே தெரிகின்றது. எதிரணியினர் தமக்குள் ஒற்றுமையைப் பேண முடியாமல் திண்டாடும்போது வெற்றி இலக்கை அவர்களால் அடையவே முடியாது.

உள்ளூராட்சித் தேர்தல் இலங்கை அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்துமா?

இந்துமதி

உள்ளூராட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் பெப்ரவரி 10 ஆம் திகதி இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. மேற்படி திகதியில் தேர்தலைநடத்துவதுதொடர்பாகதேர்தல்கள் ஆணைக்குழு ஆராய்ந்து வருவதாக நம்பகமாகத் தெரிய வந்துள்ளது.

கடந்தகாலங்களில்தேசியஅரசியலுக்குள் உள்வாங்கப்பட்ட பலர் ஆரம்பத்தில்உள்ளூராட்சிமன்றங்களில்அங்கம் வகித்திருந்தார்கள். அரச தலைவராகப்பதவிவகித்தரணசிங்கபிரேமதாசவின் அரசியல் பிரவேசம் கொழும்பு மாநகரசபையிலேயே ஆரம்பித்தது. இவ்வாறு பலரைக் கூற முடியும். இம்முறை உள்ளூராட்சி மன்றத்தேர்தல் பல வகையிலும் முக்கியத்துவம் பெறுகின்றது. தெற்கில் நல்லாட்சி அரசுக்கு மிகப்பெரியதொரு சோதனைக்களமாக இந்தத்தேர்தல்அமைந்துள்ளது. அரச தலைவர் மற்றும் மகிந்த தொடர்பாகத் தினமும் மாறுபட்ட தகவல்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இருவரும் இரகசியமாகச் சந்தித்துப் பேசி வருவதாகவும், விரைவில் ஒன்றாக இணைந்து விடுவார்களெனவும் ஒரு தகவல் தெரிவிக்கின்றது. உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் இருவரும் பலப் பரீட்சையில் ஈடுபடப்போவதாக வேறொரு தகவல் தெரிவிக்கின்றது. இன்னும்சிலதினங்களில்இதன்உண்மைத்தன்மை வெளியாகிவிடும்.

மைத்திரிபால மகிந்தவுடன் இணைவாரானால் அது அவரது ஆதரவாளர்களுக்குச் செய்யும் பச்சைத் துரோகம்

கட்சியைக் காரணம் காட்டி மைத்திரிபாலசிறிசேனமகிந்தவுடன்இணைந்துகொள்வது ஏற்கத் தக்கதல்ல. தம்மை ஆதரித்தவர்களுக்குஅவர்செய்கின்ற மிகப்பெரிய துரோகமாகவே இது கருதப்படும்.

முன்னைய ஆட்சியில் மக்கள் சுதந்திரமாகச்செயற்படமுடியாததொருநிலை காணப்பட்டது. அரசுக்குஎதிராகக்கருத்துக் கூறுவதற்கு அஞ்சுகின்றதொரு நிலையில் அவர்கள் இருந்தனர். அரசுக்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்த ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் போயினர். சிலர் படுகொலையும் செய்யப்பட்டனர். அதிகாரங்கள் யாவும் அரச தலைவர் வசமே இருந்ததால், நீதிக்குப்பொறுப்பான துறைகள் முடங்கிய நிலையில் காணப்பட்டன. அப்போதைய அரச தலைவர்மூன்றாவதுதடவையாகவும் அரச தலைவரைத் தெரிவு செய்ததற்கான தேர்தலில்போட்டியிட்டார். இதற்குத் தேவையான திருத்தங்களை அரசமைப்பில் மேற்கொள்ளவும் அவர் தயங்கவில்லை. ஆனால்2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்ற அரச தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் சாதாரண குடும்பத்திலிருந்து அரசியலுக்கு வந்த மைத்திரிபால சிறிசேன என்கின்ற ஒருசாமானியர் வெற்றிக்கனியைத் தட்டிச் சென்றார். எவருமே இதை எதிர்பார்க்கவில்லை. இலங்கையில் தேர்தல் வரலாற்றில் இதுவொரு அதிசயமாகவே பதிவுசெய்யப்பட்டுள்ளது. சகலவல்லமையும் படைத்த அப்போதைய அரச தலைவர், குறித்த தேர்தலில்தோல்வியுற்றதைப் பலராலும் நம்ப முடியவில்லை. ஆரம்பத்தில் இரண்டு பிரதான வேட்பாளர்களும் சமமான வாய்ப்புக்களையே கொண்டிருந்தனர். ஆனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தேர்தல் முடிவுகள் வெளிவந்ததும்முன்னாள்அரசதலைவரின் தோல்வி உறுதியாகி விட்டது. இந்த மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் தற்போதைய அரச தலைவருக்குச் சார்பாக தமது வாக்குகளை அளித்தனர். இதனால் சிலரின்வெறுப்புக்கும்,கோபத்துக்கும் அவர்கள் ஆளாகினர். ஆட்சி மாற்றமொன்று ஏற்படுமானால், இவர்கள் பாதிப்புக்களைஎதிர்கொள்ளவேண்டிநேரிடும்என்பதைமறுத்தலித்துக்கூற இயலாது.

மகிந்த - மைத்திரி இணைவார்களானால் தமிழ் மக்களுக்குப் பாதிப்பு நிச்சயம்

இதேவேளைமைத்திரிமற்றும்மகிந்தவின் இணைப்புமுயற்சிவெற்றிபெறுமானால் மகிந்த தம்மைப் பலப்படுத்திக்கொள்ளக் கூடிய வாய்ப்புக்களும் அதிகமாக உள்ளன. இதனால் தமிழ் மக்கள் பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடும் என்பதையும் மறுதலித்துக் கூற இயலாது.

வடக்குகிழக்கைப்பொறுத்தவரையில், கூட்டமைப்புக்குச் சவால் விடுகின்ற வகையில்எதிரணியொன்றுஉருவாக்கப்படவில்லை என்றே கூற முடியும். கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற ஈ.பி. ஆர்.எல் எவ், தமிழ்த்தேசிய மக்கள் முன்னனியுடன் கூட்டுவைத்துக் கொண்டது. ஆனால் தற்போதைய நிலையில் அந்தக் கூட்டு உடைந்து போய்விட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் அந்தக்கட்சி கூட்டணி அமைத்துக்கொண்டதாகக் கூறப்படுகின்றது. இது கடலில் மூழ்கும் நிலையில் உள்ள கப்பல் ஒன்றில் ஏறிப் பயணம் செய்ய முயற்சிப்பதற்கு ஒப்பானது.

இதேவேளை இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராகப் பதவி வகித்த வரதராஜப் பெருமாள்கூட்டமைப்பில்இணைந்துகொள்வதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. ஆனால் இதன்உண்மைத்தன்மையை உறுதி செய்துகொள்ளமுடியவில்லை. ஆனால்பெருமாளின் வருகை கூட்டமைப்புக்கு மேலதிக பலத்தை அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

வடக்கு கிழக்கில் கூட்டமைப்புக்கு வெற்றி வாய்ப்பு

தற்போதைய அரசியல் நிலவரங்களைப்பார்க்கும்போதுவடக்குகிழக்கில் கூட்டமைப்பின்வெற்றிஉறுதிசெய்யப்பட்டுள்ளது என்றே கூறவேண்டும். எதிரணியினர் எதைக் கூறினாலும் மக்களிடம்உள்ளசெல்வாக்கைஇழக்காத நிலையிலேயே கூட்டமைப்பு காணப்படுகின்றது.

தெற்கைப்பொறுத்தவரையில்குழப்பநிலையேகாணப்படுகின்றது. தேர்தல் நெருங்கும்போது தான் உண்மையான நிலவரம் தெரிய வரும்.

உள்ளூராட்சித்தேர்தல்முடிவுகள்நாட்டின் பொருளாதாரத்தில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்திவிடாது. ஆனால் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்திவிடுவதற்கானசாத்தியக்கூறுகள் அதிகமாகவே காணப்படுகின்றன.



மைத்திரி மற்றும் மகிந்தவின் இணைப்பு முயற்சி வெற்றி பெறுமானால் மகிந்த தம்மைப் பலப்படுத்திக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்களும் அதிகமாக உள்ளன. இதனால் தமிழ் மக்கள் பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடும் என்பதையும் மறுதலித்துக் கூற இயலாது.



ஆசிரியருக்கான கடிதம்

குடிதண்ணீர் விநியோகம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும்

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வரணி வடக்கு ஜே/339 கிராம அலுவலர் பிரிவுக்கு சுமார் மூன்று மாத காலத்துக்கான வறட்சி கால குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச சபையினரால் பாடசாலைகள், ஆலயங்கள், குடியிருப்புக்களுக்கு ஆங்காங்கே நீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டு குடிதண்ணீர் வழங்கப்பட்டது.

இந்தக் குடிதண்ணீர் விநியோகத்தால் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் பெரிதும் நன்மை அடைந்ததை எவரும் மறுக்க முடியாது. மறக்கவும் முடியாது. பல தரப்பட்டவர்களும் நன்மை அடைந்தும் சேவைக்காகப் பாராட்டும் பெற்ற நிலையில் தற்போது சுமார் இருபது நாள்களாகக் குடிதண்ணீர் விநியோகம் எந்தவித முன்னறிவித்தலும் இன்றிய நிலையில் நிறுத்தப்பட்டதால் அப்ப குதிகளைச் சேர்ந்த மக்கள் மிகவும் மனவேதனை அடைந்துள்ளனர். இந்தக் குடிதண்ணீர் விநியோகம் வறட்சி காலத்துக்கு மட்டுமா? அல்லது தொடர்ந்து வழங்கப்படுமா? என்ற குழப்பநிலையில் சகலரும் இலவு காத்த கிளிகள் போல் குடிதண்ணீர் வரும் என்று காத்திருப்பதை அவதானிக்க முடிகிறது. பொதுமக்கள், பள்ளி மாணவர்கள் போன்ற சகலருக்கும் நன்மை பெறக் கூடிய விதத்தில் தொடர்ந்து குடிதண்ணீர் விநியோகத்தை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக மிகவும் தாழ்மையுடன் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பு,
வரணி.

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்களின் அசைவு மாதிரி - 2016

மாதம்	விலைச் சுட்டெண்	மாத மாற்ற வீதம்	பணவீக்கம்	
			ஆண்டு ரீதியான மாற்றம்	அசையும் சராசரி (12 மாதம்)
ஜனவரி	110.0	0.2%	1.7%	2.1%
பெப்ரவரி	109.3	-0.6%	2.9%	2.1%
மார்ச்	108.6	-0.6%	2.6%	2.2%
ஏப்ரல்	109.5	0.8%	3.4%	2.4%
மே	111.5	1.8%	4.8%	2.7%
ஜூன்	113.2	1.5%	5.5%	3.0%
ஜூலை	113.9	0.6%	5.8%	3.4%
ஓகஸ்ட்	112.1	-1.6%	4.4%	3.7%
செப்ரெம்பர்	111.8	-0.3%	4.2%	3.9%
ஒக்ரோபர்	112.1	0.3%	4.1%	4.0%
நவம்பர்	113.6	1.3%	4.0%	4.0%
டிசெம்பர்	114.7	1.0%	4.5%	4.0%



மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 4 வீதமாக மதிப்பீடு

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் கருத்து

தேசிய கணக்குகள் மதிப்பீடுகளில் நடப் பாண்டின் இரண்டாம் காலாண்டு காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 4 சதவீதமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 18 மாத காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட வறட்சி மற்றும் பெரு மழை காரணமாக விவசாய உற்பத்தித் துறை மறை வளர்ச்சி வீதத்தைக் கொண்டுள்ளது.

இந்தத் தகவலை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, நிலையான (2010) விலையில் கடந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 2,125,848 மில்லியன் ரூபாவாகவும், நடப்பாண்டின் இரண்டாவது காலாண்டில் 2,211,612 மில்லியன் ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

நடப்பாண்டின் இரண்டாம் காலாண்டு காலப்பகுதியில் கைத்தொழில் மற்றும் சேவைகள் துறைகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. அவை முறையே 5.2 வீதம், 4.4 வீதமாகக் காணப்படுகின்றன. மொத்த விவசாய நடவடிக்கைகளை நோக்குமிடத்து, மறை வளர்ச்சி வீதத்தை வெளிப்படுத்தியுள்ளன. அது 2.9 வீதமாக காணப்படுகிறது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது, இதே காலப்பகுதியில் விவசாயத் துறையின் உப பிரிவுகளுக்கிடையில் சேர்க்கப்பட்ட பெறுமதியானது குறிப்பாக, 'நெல் வளர்ச்சி', 'எண்ணெய் சார்ந்த பழங்களின் வளர்ச்சி (தேங்காய் உள்ளடங்கலாக)', 'தானியங்களின் வளர்ச்சி (நெல் நீங்கலாக)', 'காய்கறிகளின் வளர்ச்சி', 'வாசனைத்திரவியங்களின் வளர்ச்சி' என்பன முறையே 32.9 வீதம், 20.2 வீதம், 15.3 வீதம், 5.9 வீதம், 3.8 வீதமாக குறைந்துள்ளன.

அதேவேளை 'தேயிலை வளர்ச்சி' மற்றும் 'இறப்பர் வளர்ச்சி' என்பன கடந்த மூன்றாண்டு காலப்பகுதியில் தொடர்ச்சியான மறை வளர்ச்சி வீதங்களை ஒவ்வோர் காலாண்டுப் பகுதியிலும் கொண்டிருந்தன.

ஆனாலும் நடப்பாண்டின் இரண்டாவது காலண்டு காலப்பகுதியில் நேர் வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளன. அவை முறையே 6.9 வீதம், 10.2 வீதமாக அமைந்துள்ளன. 'விலங்கு உற்பத்தி' மற்றும் 'நன்னீர் மீன்பிடி' என்பனவும் நேர் வளர்ச்சி வீதங்களைப் பதிவிட்டுள்ளன. அவை முறையே 10.9 வீதம் மற்றும் 9.0 வீதம் என்ற வகையில் கணிசமான அதிகரிப்பை வெளிக் காட்டியுள்ளன. (ஒ)

> பொருளாதாரத்தின் முதன்மைக் கூறுகளான விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருள்கள் மானியங்கள் கழிக்கப்பட்ட வரி நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குரிய பங்களிப்பினை 8.2 வீதம், 25.9 வீதம், 56.6 வீதம் மற்றும் 9.4 வீதம் என்ற ரீதியில் வழங்கியுள்ளன.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மேம்படும்

நாணய நிதியத்தின் குழுத் தலைவர் ஜெய்வு லி தெரிவிப்பு

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி எதிர்காலத்தில் மேம்படும் என்ற தகவலை பன்னாட்டு நாணய நிதியத்தின் குழுத் தலைவர் ஜெய்வு லி வெளிப்படுத்தியுள்ளார்.

தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ள முன்னேற்றம் என்பது கலப்புத் தன்மை உடையதாக காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

" பன்னாட்டு நாணய நிதியத்துடன் இலங்கை அரசு கொண்டுள்ள தொடர்பில் பல சவால்கள் காணப்படுகின்ற போதும், கடந்த மூன்று வருட காலப்பகுதியில் இடம்பெற்ற நிதி விஸ்தரிப்புத் தொடர்பான நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் நம்பிக்கையைத் தந்துள்ளது.

வெளிப்படுத்தப்பட்டுள்ள முன்னேற்றம் கலப்புத் தன்மை உடையதாகக் காணப்படுகிறது. கடந்த 2016 ஆம் ஆண்டு மற்றும் நடப்பு வருடத்தில் நாட்டில் ஏற்பட்ட கடும் வறட்சியான காலநிலை மாற்றம் காரணமாக பொருளாதார வளர்ச்சி 4.5 வீதமாக அமைந்துள்ளது.

விவசாய உற்பத்தி சிறந்த முறையில் அமையும் போது பொருளாதாரத்தின் உட்கட்டமைப்புக்கள் சிறந்த வெற்றியைத் தரும். நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக உணவுப்பொருள்களை நாட்டினுள் இறக்குமதி செய்வதற்கு அதிகளாவான நிதி மூலங்கள் செலவிடப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இலங்கையின் பொருளாதாரம் அபிவிருத்தி இலக்கை எட்டும்" - என்றார். (ஒ)

பங்குச்சந்தைத் தகவல்கள்

CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

7/12/2017
www.cse.lk

சுட்டிகள்		இன்று	நேற்று
ASPI	2.04	6,382.95	6,380.91
S&P SL20	4.05	3,712.61	3,708.56
வியாபாரப்புரள்வு		985,952,380	1,204,504,960
உள்நாடு:- கொள்வனவு		465,849,792	357,361,696
விற்பனை		428,310,144	205,099,424
வெளிநாடு:-கொள்வனவு		520,102,560	847,143,230
விற்பனை		557,642,240	999,405,570



கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம்	குறியீடு	இறுதிவிலை	பங்குகள்	புரள்வு (Rs)
ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ்	JKH.N	154.5	3,000,617	463,596,354.40
ரெஸ்ஸ் எனர்ஜி	HPWR.N	21.2	5,732,122	137,512,610.00
ஷெவ்றோன் லூப்பிரிக்கன்	LLUB.N	112.8	678,587	74,828,161.70
சம்பத் வங்கி	SAMP.N	335.5	205,011	68,426,962.30
லங்கெம் டெவெலப்மென்ட்ஸ்	LDEV.N	1.7	5,454,621	57,861,912.80
சொ.ப்ட்லொஜிக் கோல்டிங்ஸ்	SHL.N	12.3	3,811,110	47,638,855.00
ஹெர்மஸ் கோல்டிங்ஸ்	HHL.N	126	287,987	36,286,362.00
இலங்கை கொமர்ஷல் வங்கி	COMB.N	135.9	153,115	20,676,338.90
ரெக்ஸ்பேட் பெர்வீ	TJL.N	35.3	354,107	12,430,918.30
செலான் வங்கி	SEYB.X	55	126,720	7,050,104.80

அறிவித்தல்கள் - பங்குலாபம்

ஹற்றன் நஷனல் வங்கி ரூபா. 1.50 HNB
அக்சஸ் எஞ்யினியறிங் ரூபா. 0.50 AEL
பீப்புள் லீசிங் & பைனான்ஸ் ரூபா. 0.75 PLC

சந்தைக் குறிகாட்டிகள்.	
கம்பனிகள்	296
பரிமாற்றத்தில்	213
விலை உழைப்பு	10.08
புத்தகப்பெறுமதி	1.3
பங்குலாப விளைவு	3.2

துவாரபாலகர்கள்

விஸ்ணு பக்தியின் திருத்தொண்டர்கள்

இரா. நிஷாந்தன்

விஸ்ணு பகவான் மகாலட்சுமி சமேதராய் எழுந்தருளல் கொண்டுள்ள இடம் ஸ்ரீ வைகுண்டம் என அழைக்கப் படுகிறது. 'பரமபதம்' என்கின்ற சிறப்பினையும் அது பெறுகி றது. அங்கு மகாலட்சுமியுடன் நாராயணன் வீற்றிருக்கும் காட்சி அற்புதமானது. இத்தகு சிறப்பான இறையருளின் சுழல் பதுமையுடைய வைகுண்டத்தின் காவலர்களாக, அதன் துவாரபாலகர்களாக ஜெயன், விஜயன் ஆகிய இருவ ரும் விளங்குகின்றனர். பகவான் விஸ்ணு மீது அளவற்ற பக்தி உடையவர்களாக தங்கள் கடமையை ஆற்றி வருகின் றனர்.

'சவுனாகாதி' முனிவர்களின் வருகை

இந்த சந்தர்ப்பத்திலே பிரம்மதேவரின் மானசீக புதல்வர்களாகிய சனதர், சனாதனர், சனந்தனர், சனத்குமா ரர் எனும் திவ்ய நாமகரணமுடைய 'சவுனாகாதி' முனிவர் கள் நால்வரும் அருமறை புகழும் நாராயணனை தரிசனம் கொள்ள வைகுண்ட லோகம் தனைவந்தடைந்தனர். அங்கு காவல் புரிந்த துவாரபாலகர்களைப் பணிந்தனர். பின்பு, "வைகுண்டத்தின் நாயகன், திருமகள் தலைவன் விஸ் ணுவைச் சந்திக்க நாங்கள் விரும்புகிறோம். எங்களை உள்ளே செல்ல அனுமதியுங்கள்" என வேண்டினர். துவார பாலகர்களோ அங்கு வருகை தந்திருப்பது முனிவர்கள் தான் என்பதை அறியாது போயினர். தம் தவ வலிமை கொண்டு அவதானம் கொண்ட போது, அவர்கள் அனைவரும் சிறு குழந்தைகளாக காட்சியளிப்பதைக் கண்டனர். வந் திருப்பவர்களின் நிலையறியாது அவர்களை உள்ளே செல்ல அனுமதி மறுத்துவிட்டனர்.

துவாரபாலகர்கள் கொண்ட சாபம்

இது கண்ட பிரம்மதேவரின் மானசீக புதல் வர்களான 'சவுனாகாதி' முனிவர்கள் கடும் கோபம் அடைந்தனர். துவாரபாலகர்களை விழித்து, "நீங்கள் இருவரும் எம் நிலை அறிந் துகொள்ளாது அவமதித்து விட்டீர்கள். கருணை வடிவாகிய நாராயணனின் வாயிற்காப்பாளராய் இருப்பதற்கு நீங்கள் தகுதியற்றவர்கள். எமை அறிந்துகொள்ளாத ஞான முடைய தாங்கள் இந்தப் புனிதமான வைகுண்டத்தில் துவா ரபாலகராய் இருப்பதற்கு தகுதியற்றவர்கள். ஆக, இப்போதே பூவுலகில் பிறவியெடுப்பீர்க ளாக." என்று சாபம் அளித்தனர்.

விஸ்ணு பகவான் 'சவுனாகாதி' முனிவர்களைப் பணிதல்

இந்தநிலையிலே தங்கள் தவறை உணர்ந்துகொண்ட துவா ரபாலகர்கள் 'சவுனாகாதி' முனிவர்களின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். தாம் மேற்கொண்ட தவறினை மன் னித்து, சாபவிமோசனம் வழங்கியருளுமாறு வேண்டி நின்றனர். ஸ்ரீமன் நாராயணப் பெருமானும் அவ்விடம் வருகை தந்தார். அங்கு தன்னைக் காண்பதற்காக வருகை தந்திருந்த பிரம்ம புத்திரர்களான முனிவர்களை நோக்கி, "எனதன்பு முனிவர்களே, தாங்கள் எனைக் காண்பதற்கு வந்திருந்த போது நான் இவ்விடம் வருகை தந்து உங்களை எதிர் கொண்டு வரவேற்பளிக்காமை குறித்து என்னை மன் னிக்க வேண்டும்." எனக் கூறி அன்புருக வேண்டிநின்றார். துவாரபாலகர்கள் முனிவர்களின் சாபம் பெற்ற தன்மையி னையும் அறிந்து கொண்டார்.

துவாரபாலகர்கள் கண்ட மார்க்கம்

துவாரபாலகர்களை அன்பால் அரவணைத்த விஸ்ணு பக வான், "என் அன்புக்குரியவர்களே, நீங்கள் செய்த காரியம் தவறானது. அதற்காக 'சவுனாகாதி' முனிவர்கள் சாபம் அளித் ததும் சரியானதே. நீங்கள் இருவரும் சாபத்தை ஏற்றுத் தான் ஆக வேண்டும். சாபத்தில் இருந்து விமோசனம் பெறுவதற்கு இரண்டு சந்தர்ப்பங்கள் உள்ளன. ஒன்று, நீங்கள் பூமியில் ஏழு முறை பிறப்பெடுத்து என் பக்தர்களாக இருந்து, பின் பரமபதம் வந்தடைவது. இரண்டாவது, மூன்று பிறவிகள் என் எதிரிகளாக பூமியில் பிறப்பெடுத்து என் கரங்களால் மரணத்தை சுவீகரித்து பரம பதம் வந்தடைவது. எனவே, இவ் இரண்டில் எந்த மார்க்கத்தினை தாம் விரும்புகிறீர் கள்...?" என வேண்டி நின்றார்.

துவாரபாலகர்கள் தாங்கள் விஸ்ணு பகவானது அருள்கடாட் சம் தருகின்ற உய்வினையே அவரிடத்தாய் வேண்ட நினைத்தனர். விஸ்ணு பகவானை விழித்து, "பிரபு...! தங்களைப் பிரிந்து ஏழு பிறவிகள் எம்மால் இருக்க முடியாது. அத்தகு நிலை எமக்கு வேண்டாம். ஆனால் மூன்று பிறவி கள் பெற்று உங்களை எதிர்ப்பவர்களாக விளங்கினாலும், இறுதியில் உங்கள் திருக்கரங்களால் இறக்கும் நல் நிலை யினை பெற்று முக்தி பெற முடியும். விரைவில் உங்களை வந்தடையவும் எம்மால் முடியும். ஆகவே, இரண்டாவது மார்க்கத்தி னையே நாம் தேர்ந்தெடுக்கின் றோம்." என்று கூறினர். அதன்ப டியே நாராயணனும் அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றினார். திருவருளின் சாகரம் பொழிந் தார்.

மூ பிறப்பின் மகத்துவம்

தங்களுடைய முதற் பிறவியை ஜெயனும், விஜயனும் திரோதா யுகத்தில் மேற்கொண்டனர். இரண் யாட்சன், இரண்யகசிபு எனும் நாமக ரணங்களோடு அசுர குலத்தின் வாரிசுகளாக திகழ்ந்தனர்.

அசுர குலத்தில் பிறப்பு நிகழ்ந்த மையால், தீய வழியில் செல்லத் தொடங்கினர். இரண்யாட்சன் ஒரு முறை பூமாதேவியை கவர்ந்து சென்று கடலுக்கடியில் வைத்து விட் டான். அப்போது பூமியைக் காப்பதற்கும், துவாரபால கர்களுக்கு முக்தி அளிப்பதற்கும் பகவான் ஸ்ரீ கிருஸ்ணன் 'வராக' அவதாரம் கொண் டார். இரண்யாட்சனைக் கொன்று அவனுக்கு முக்தி அளித்தார். பூமியை காத்தருளினார்.

அது போலவே இரண்யகசிபு தன் சகோதரன் இறந்த செய்தி அறிந்து கோபம் கொண்டான். தனது புதல்வனான பிரகலாதன் எப்போதும் பகவான் விஸ் ணுவின் திருநாமங்களை உச்சரிப்பது கண்டு கோபமடைந்தான். இந்த சந்தர்ப் பத்திலே நரசிங்க ரூபமாக அங்கு தோற் றம் தந்த பகவான், இரண்யகசிபுவை கொன்று அவனுக்கு முக்தி அளித்தார். தன் பக்தன் பிரகலாதனை காத்தருளினார்.

துவாரபாலகர்களின் இரண்டாவது பிறவி என்பதும் திரோத யுகத்திலேயே அமைவு பெற்றது. இராவணன், கும்பகர்ணன் எனும் நாமகரணங்களோடு அசுர குலத்தின் வீர புருஷர்களாக, அண்ணன் தம்பி பாசம் கொண்டு அவதரித்

> "வைகுண்டத்தின் காவலர் களாக, அதன் துவாரபாலகர்களாக ஜெயன், விஜயன் ஆகிய இருவரும் விளங்குகின்றனர். பகவான் விஸ்ணு மீது அளவற்ற பக்தி உடையவர்க ளாக தங்கள் கடமையை ஆற்றி வருகின்றனர்."

தனர். பிரம்ம தேவரிடம் பெற்ற வரம் கொண்டு பராக்கிரமம் பொருந்தியவர்களாக விளங்கினர். அவர்கள் இருவரையும் கொன்று முக்தியளிப்பதற்கும், தேவர்களுக்கு அவர்களால் ஏற்படும் துன்பங்களைப் போக்குவதற்கும் பகவான் ஸ்ரீ ராம ராக அவதரித்தார். அதன்படி இராவணனையும், கும்பகர்ணனையும் தன் அம்பினால் கொன்று அவர்களுக்கு பரமபத நிலையினை அளித்தார்.

அதன் பின்பு, துவாரபாலகர்கள் தங்களது மூன்றாவது பிற வியை 'துவாபர' யுகத்தில் அமைத்துக்கெண்டனர். சிசுபால னாகவும், கம்சனாகவும் பிறப்பெடுத்தனர். இவர்கள் இருவ ரையும் கொன்று முக்தியளிக்க பகவான் விஸ்ணு கண்ண னாக அவதாரம் செய்தார்.

கம்சன் கண்ணனுக்கு தாய் மாமனாக விளங்கினாலும் தன் மரணத்துக்கு கண்ணனே காரணமாவான் என்பதை அறிந்து கொண்டு, கண்ணன் மீது வெறுப்பினைக் காட்டி வந்தான். இறுதியில் கண்ணனின் திருக்கரங்களால் மடிந் தான். அது போல கண்ணனின் அத்தை மகனாக பிறந்த சிசுபாலன் கண்ணனை எப்போதும் நிந்திப்பதையே வழக் கமாக கொண்டிருந்தான். அதன்பலாபலனாய் இறுதியில் கிருஸ்ணரின் கரத்தில் உள்ள சுதர்சனச் சக்கரத்தின் வேகம் உந்த தலை துண்டிக்கப்பட்டு முக்தியடைந்தான்.

இறைநம்பிக்கையைப் பற்றுதல் செய்வோம்

இவ்வாறு துவாரபாலகர்களின் பிறப்பும் அதன் பின்பான அவர்களின் பரமபத நிலையும் அமைவு பெறுவதை காண லாம். இதனூடே 'இறை' என்பவன் தன் பக்தர்கள் மீது எப் போதுமே மாறாத கருணை உடையவன் என்பதை உணர்ந்துகொள்ள முடிகிறது. தன் பக்தர்களுக்காக தானும் அவதாரம் செய்து அருள்பாலித்த தன்மைகள் எம் மனதில் பக்தியையும், இறையுணர்வையும் ஏற்படுத்துகின்றன. ஆக, பக்தியின் வழி நாம் அனைவரும் இறைநம்பிக்கையை பற்றுதல் செய்வோம்.

சனிப்பெயர்ச்சி ராசிபலன்கள்

இந்த வருடம் டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி சனிப்பெயர்ச்சி நடைபெறுகிறது. விருச்சிக ராசியில் இருந்து தனுசு ராசிக்கு பெயர்ச்சி ஆகிறார் சனீஸ்வர பகவான். அவர் 26.12.2020 வரை தனுசு ராசியில் இருந்து பலன்களைத் தரவுள்ளார். இந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு ராசியின ருக்கும் ஏற்படக்கூடிய பலன்கள் குறித்துப் பார்ப்போம்...

கன்னி

முன் வைத்த காலை பின் வைக்காமல் வெற்றி நடை போடும் கன்னி ராசி அன்பர்களே நீங்கள் யாரையாவது நம்பி விட்டால் வாரி வழங்கி விடுவீர்கள். எடுத்த முடிவில் இருந்து சிறிதும் இறங்கி வர மாட்டீர்கள். எந்த விதமான சிரமங்களையும் சமாளித்து வாழ்வில் வெற்றிக்கனியைப் பறிப்பீர்கள். கொஞ்சம் கர்வம் உடையவர்கள் நீங்கள்.

இதுவரை உங்களது தைரிய வீரிய ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி சுக ஸ்தானத்திற்குச் செல்கிறார். மூன்றாம் பார்வையால் ரண ருண ரோக ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் தொழில் ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் ராசியையும் பார்க்கிறார்.

பலன்கள்:

இந்தச் சனிப் பெயர்ச்சியால் இதுவரை இருந்த கடினமான சூழ்நிலையிலிருந்து விடுபடுவீர்கள். குடும்பத்தில் உற்சாகம் கரை புரளும். புத்திரர்களாலும், பேரப் பிள்ளைகளாலும் மகிழ்ச்சி ஏற்படும். உயர்ந்த பதவிகள் உங்களைத் தேடி வரும். சமுதாயத்தில் உயர்ந்தோரின் நட்பும், ஆதரவும் கிடைக்கும். செய்யும் தொழிலை விரிவுபடுத்தப் பெரிய அளவில் கடன் வாங்குவீர்கள். அதேநேரம் அனைத்து விவரங்களையும் நன்றாகப் புரிந்து கொண்ட பிறகே ஆவணங்களில் கையொப்பமிடவும். மன அமுத்தம் குறைந்து தெளிவாகச் சிந்திக்கும் தாலமிது என்பதால் உங்களுடைய உள்ளம் தெளிவான வழிகளிலேயே இட்டுச் செல்வதற்கு வாய்ப்புகள் அதிகம். வம்பு, வழக்குகளிலிருந்தும் விடுபட்டு புதிய மனிதனாக ஆவீர்கள். ஆன்மிகத்தில் புதிய விஷயங்களை அறிந்து கொள்வீர்கள். தர்ம காரியங்களுக்குச் செலவு செய்வீர்கள். பொருளாதார வளம் சலசலப்பாக இருந்தாலும் புதிய வீடு, வாகனம், ஆடை, ஆபரணங்களை வாங்குவீர்கள்.

உங்கள் சகோதர வழியில் சில அனுகூலங்கள் உண்டாகும். நண்பர்களிடம் மன உறுதியுடன் தெளிவாகப் பேச வேண்டும். உங்களைப் பற்றிப் புறம் பேசும் நபர்களை அடையாளம் கண்டு, அவர்களிடம் இருந்து நாசுக்காக விலகுவதே நல்லது. கையிருப்புப் பொருள்களையும், பணத்தையும் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவும். மேலும் குறுக்கு வழியில் எந்தச் செயலையும் செய்ய நினைக்க வேண்டாம்.

எந்த வேலையை எடுத்தாலும் உறுதியான எண்ணத்துடன் பணியாற்ற வேண்டும். நீங்கள் சார்ந்திருக்கும் துறையில் நன்றாகவே முன்னேறுவீர்கள். சிலருக்கு நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளின் சூழ்ச்சிகளில் சிக்கும் சூழல் ஏற்படலாம். அரச வாயிலாகச் சிறு கஷ்டங்கள் ஏற்பட்டாலும் அவை விரைவில் மறைந்துவிடும். வெளியூர் அல்லது வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும்.

புதிய அனுபவங்களைப் பெறுவீர்கள். உங்கள் மன வலிமை அதிகரிக்கும். உங்கள் செயல்களில் சுறுசுறுப்பு கூடும். உங்களை நீங்களே அறிந்து கொண்டு சமுதாயத்திற்குப் பயன்படுவீர்கள். தெய்வ வழிபாட்டுக்குத் தக்க பலன் கிடைக்கும்.

உங்களின் காரியங்களைப் பொறுமையாகவும், அமைதியாகவும் செய்து முடிப்பதே சிறந்தது.

உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கத் தொடங்கும். உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப் பெறுவதில் தடை ஏற்படாது. ஆனாலும் சக ஊழியர்கள் உங்களிடம் பொறாமை கொள்ளலாம். எடுத்த காரியங்களில், சில சந்தர்ப்பங்களில் கால தாமதம் ஏற்படலாம். உடலில் சோர்வும், மனதில் தெளிவின்மையும் கூட உண்டாகலாம். ஆனால் இவற்றை மீறி சனி மதிப்பான பதவிகளை வழங்குவார். இதனால் உங்களுக்கு உறுதுணையாக இருந்து வந்த மேலதிகாரிகளின் ஆதரவு சற்றுக் குறையக் கூடும். உங்களின் கடமைகளைப் பதற்றப்படாமலும், நிதானத்துடனும் செய்தால் எந்தச் சரிவுக்கும் ஆளாகாமல் தப்பிக்கலாம்.

வியாபாரிகள் நல்ல பொருளாதார வளத்தைக் காண்பீர்கள். கொடுக்கல், வாங்கலில் இருந்த சிரமங்கள் மறையும். கூட்டாளிகளிடம் ஒற்றுமை உண்டாகும். வங்கிக் கடன்கள் சிக்கலின்றிக் கிடைக்கும். உங்கள் முயற்சியில் சுறுசுறுப்பு உண்டாகும். வாணிப வட்டாரத்தில் உங்கள் மதிப்பு, மரியாதை உயரும். புதிய முதலீடுகளில் ஈடுபட்டு இலாபத்தைக் காண்பீர்கள்.

கலைத்துறையினருக்கு: சுமாரான வாய்ப்புகளையே பெறுவீர்கள். ரசிகர்களின் ஆதரவும் எதிர்பார்க்கும் அளவுக்கு இருக்காது. புகழைத் தக்க வைத்துக்கொள்ளச் சீரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். உழைப்பை அதிகப்படுத்திக்கொண்டு, கர்வத்தை விட்டொழித்துத் திறந்த மனதுடன் இயங்கினால் புகழ் பெறலாம். மற்றபடி சக கலைஞர்களுடன் உங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் சில முடிவுக்கு வரும்.

பெண்களுக்கு: குழந்தைகளால் சந்தோஷம் அடைவீர்கள். கணவருடனான ஒற்றுமை நன்றாகவே இருக்கும். உங்களின் புத்திசாலித்தனத்தைக் குடும்பத்தினர் புகழ்வார்கள். புத்தாடை, அணிகலன்களை வாங்கி மகிழ்வீர்கள். விருந்து மற்றும் விழாக்களில் கலந்துகொண்டு உற்காசம் அடைவீர்கள். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். பொருளாதாரம் சிறப்பாக இருப்பதால் சேமிப்பு விஷயங்களில் கவனம் செலுத்துவீர்கள்.

மாணவர்களுக்கு: மாணவமணிகள் கல்வியில் மிகுந்த ஈடுபாடு காட்டுவீர்கள். பெற்றோர்களின் ஆதரவும் தொடர்ந்து நல்லவிதமாக இருக்கும். வெளி விளையாட்டுகளில் ஈடுபட்டு வெற்றி அடைவீர்கள்.

மனித நேயமே இறை நேயம்

மனித நேயம் என்பது மதம், மொழி, இனம், சாதி, நிறம், பால் பாகுபாடு நாடு ஆகியவற்றைக் கடந்து செல்ல வேண்டும்.

ஒருமுறை நபிகள் நாயகம் (ஸல்), தோழர்களோடு உரையாடிக் கொண்டிருந்தார். அந்த வேளையில் உயிரிழந்த ஒரு யூதரின் உடல், அடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்பட்டது. நபிகள் நாயகம் எழுந்து சென்று மரியாதை செய்தபோது, தோழர்கள் நபிகளாரை நோக்கி, "அவர் யூதராயிற்றே, நீங்கள் ஏன் அவருக்காக மரியாதை செய்கிறீர்கள்?" என்று கேட்டனர். அதற்கு நபிகள் நாயகம், "அவர் மனிதராயிற்றே" என்று பதில் அளித்தார்.

யூத மதத்திற்கும், இஸ்லாத்திற்கும் இடையே கருத்து வேறுபாடுகள் உண்டு. யூதர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே அவ்வப்போது மோதல்களும் நிகழ்ந்துள்ளன. இருப்பினும் நபிகள் நாயகம் அவற்றைப் பொருட்படுத்தாது, இறந்துபோன ஒரு யூதருக்கு மரியாதை செய்தார். மனித உறவுகளுக்கும், மனித நேயத்திற்கும், மதங்களும், கொள்கைகளும் தடையாக இருக்க வேண்டாம் என்பதையே இந்தச்சம்பவம் எமக்கு உணர்த்துகிறது. கொள்கை வேறு, மனித நேயம் வேறு என்ற நபிகளாரின் அணுகுமுறை மனித சமூகத்திற்குச் சிறந்த படிப்பினையாகும். அபூதர் என்பவரும், பிலால் என்பவரும் நபிகள் நாயகத்தின் நெருங்கிய தோழர்கள். அவர்களுக்கிடையே சிறிய பிரச்சினை எழுந்தது. அபூதர் மிகவும் சினமுற்று அடிமை இனத்தைச் சேர்ந்த கறுப்புநிற ஆபிரிக்கரான பிலாலை நோக்கி, "கறுப்புத் தாய்க்குப் பிறந்தவனே" என்று கூறினார். மனவேதனை தாங்காமல் பிலால், நபிகளாரிடம் சென்று இதனை முறையிட்டார். நபிகள் நாயகம் அபூதரைக் அழைத்து இது தொடர்பில் விசாரித்தார்.

ஒருவர் ஒரு குறிப்பிட்ட இனத்தில், நிறத்தில், சாதியில் பிறப்பது அவரது கரத்தில் இல்லை. அவரது முயற்சியினாலும் அது விளைந்தது இல்லை. மனிதர்கள் அனைவரும் ஒரே மாதிரியான உடல் அமைப்புகளையும், உணர்வுகளையும், தேவைகளையும் பெற்றிருக்கின்றனர். அப்படியிருக்கையில் பிறப்பின் அடிப்படையில் உயர்வு, தாழ்வு கற்பிப்பது அறியாமை ஆணவத்தின் அடையாளம். எனவேதான் இவற்றை அடியோடு வெறுத்து முன்மாதிரி காட்டினார் நபிகள்.

மொகமட் அமீர்

வரலாற்றில் இன்றைய தினம் 08.12.2017

1941 - 1941ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி அமெரிக்காவின் பேர்ள் துறைமுகம் ஜப்பானால் தாக்கப்பட்டது. மறுநாள் அதாவது டிசெம்பர் 8ஆம் திகதி உரையாற்றிய அமெரிக்க அதிபர் பிராங்ளின் டிசெம்பர் 7ஆம் நாள் 'மோசடி நாளாக' வரலாற்றில் இருக்கும் என்று அறிவித்தார்.

1966 - கிரேக்கக் கப்பல் 'எஸ்எஸ்' மூழ்கியதில் 200 பேர் உயிரிழந்தனர்.

1974 - கிரீஸில் முடியாட்சியை இல்லாமல் செய்வதற்கு ஆதரவாக வாக்களிக்கப்பட்டது.

1991 - சோவியத் யூனியனைக் கலைக்கும் ஒப்பந்தத்தில் ரஷ்யா, பெலாரஸ் மற்றும் உக்ரைன் தலைவர்கள் ஒப்பமிட்டனர்.

1999 இலங்கையில்போர் நிறுத்தம்செய்யமுன்வரவேண்டும் என்று பாப்பரசர் அழைப்பு.

2002 - குவைத் மீது படையெடுத்தமைக்காக மன்னிப்புக் கேட்டார் அதிபர் சதாம்.

2009 ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் 127 பேர் உயிரிழந்தனர்.

2016 இஸ்லாம் நிந்திக்கப்பட்டால் முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் தூக்குவர் என்று நாடாளுமன்றில் எச்சரித்தார் ஹிஸ்புல்லா.

2016 - போரில் குற்றமிழைத்தோரை தண்டிக்க கொழும்பு தவறிவிட்டது என்று ஐ.நா. சாடல்.

SAARC

1985 - சார்க் அமைப்பு உருவாக்கப்பட்டது.

நாளை

09.12.2017

சனிக்கிழமை

கார்த்திகை 23

திதி: ஷஷ்டி மு.ப. 09.32 வரை
நட்சத்திரம்: மகம் பி.இ. 12.05 வரை
சுபநேரம்: 3.18–04.48 வரை
ராகுகாலம்: 09.18–10.48 வரை

ஐயப்பன் விரதம் உணர்த்தும் உண்மை

இந்து மதத்தில் எண்ணிலடங்கா இறை வழிபாடுகள் இருந்தாலும், மண்ணில் மனிதனாகப் பிறந்து, இறைநிலையை அடைந்தவரான ஐயப்பனின் வழிபாடு அனைவரையும் கவரும் ஒன்றாக இருக்கிறது. நேர்மை, ஒழுக்கம் போன்ற பாதையில் செல்ல வலியுறுத்தும் விரதமாக ஐயப்ப வழிபாடு இருப்பதும், பக்தர்கள் பலர் சபரிமலை தரிசனத்தைத் தேர்வு செய்ய ஒரு காரணமாக உள்ளது.

ஆடம்பர வாழ்வு நிலையற்றது என்று உணர்த்தவே ஐயப்ப பக்தர்கள் எளிமையான ஆடையை சீருடைபோல் அணிந்து செல்கிறார்கள்.

தான்தோன்றித்தனமாக ஊரைச் சுற்றிவருபவர்களை, 'ஒரு கால்கட்டு போட்டால் சரியாகிவிடுவான்' என்று சொல்லக் கேட்டிருப்போம். அந்த கால்கட்டுக்கு 'திருமணம் செய்து வைத்தல்' என்பது பொதுவான பொருளாக இருக்கிறது. ஆனால் கால்கட்டு என்பதற்கு 'பாதை மாறாது மனதை ஒரு நிலைப்படுத்தி வாழ்வது' என்பதே சரியான பொருளாகும்.

'ஒரு நல்ல நாள் பாத்து சொல்றேன்'

படத்துக்கு கடும் எதிர்ப்பு

சினிமா

விஜய்சேதுபதியின்நடிப்பில்உருவாகிவரும்'ஒருநல்ல நாள் பாத்து சொல்றேன்' படத்துக்கு கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

படத்தின் முன்னோட்டக் காணொலி அண்மையில் வெளியானது. இந்தக் காணொலியில் இராமன் நல்லவனா, இராவணன் நல்லவனா என்ற விவாதத்தை ஏற்படுத்துகிறார் விஜய் சேதுபதி. சீதையைக் கடத்திச் சென்றாலும் அவளது கற்பைக் களங்கம் செய்யாமல் இருந்த இராவணன் நல்லவன் என்ற விதமாக சித்தி ரிக்கப்படுகிறது. இதற்கு மதம்சார் அமைப்புக்கள் தமது கண்டனத்தைத் தெரிவித்தன.

பாலை வைச்சுப் பால் கோவா பண்ணலாம்

ஆனா ரசத்தை வைச்சு ரசகுல்லா பண்ண முடியுமா?

'எம்மிடம் ஏதுமில்லை' என்று நினைப்பது ஞானம்.

'எம்மைத்தவிர ஏதுமில்லை' என நினைப்பது ஆணவம்.

ஞானம், பணிந்து பணிந்து வெற்றிமேல் வெற்றியாகப்பெறுகிறது.

ஆணவம், நிமிர்ந்து நின்று அடி வாங்குகிறது.

வெளியில் கணவன்

வீட்டில் கணவன்

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

மேடம்: உங்களிடம் உதவி பெற்றவர்கள் நன்றி மறப்பர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி படிப்படியாக நிறைவேறும். பணவரவை விடச் செலவு அதிகரிக்கும்.

இடபம்: செயல்களில் மாற்றம் உருவாகும். சமூகத்தில் அந்தஸ்து பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். பணவரவு கிடைக்கும். புத்திரர்கள்

மிதுனம்: நீண்டநாள் இடையூறு விலகி நன்மை கிடைக்கும். தொழில், வியாபாத்தில் இலாபம் சுமாராக இருக்கும். தேவை அறிந்து செலவு செய்வது நல்லது.

கடகம்: தன்மான உணர்வு அதிகரிக்கும். உறவினருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகி, புதிய வாய்ப்பு ஏற்படும். பணவரவு கிடைக்கும்.

சிங்கம்: சுற்றத்தினரிடம் கவனமுடன் பேசவும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் பணிபுரிவது அவசியம். சேமிப்புப் பணம் திடீர் செலவுக்குப் பயன்படும்.

கன்னி: இஷ்ட தெய்வ அருளால் சிரமங்கள் நீங்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். வரவு செலவு திருப்தி கரமாகும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

துலாம்: மனதில் புத்துணர்வு அதிகரிக்கும். புதிய திட்டங்களை செயற்படுத்துவீர்கள். தொழில் வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உண்டாகும்.

விருச்சிகம்: பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும். தொழில் வியாபாரத்தில் இருந்த குளறுபடி சரியாகும். பணத்தட்டுப்பாடு இருந்தாலும் குடும்பத் தேவை நிறைவேறும்.

தனுசு: திட்டமிட்ட பணிகளில் சிறு மாற்றம் செய்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க அதிக நேரம் பணிபுரிவீர்கள். எதிர்பார்த்த பணவரவு ஓரளவு கிடைக்கும்.

மகரம்: உயர்ந்த செயல்களால் புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி எளிதாக நிறைவேறும். அபரிமிதமான பணவரவு கிடைக்கும்.

கும்பம்: பயன் அறிந்து பேசுவதால் நற்பலன் பெறுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க, புதிய செயல் திட்டம் வடிப்பீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும்.

மீனம்: வெளிவட்டாரத் தொடர்பு தொந்தரவு தரலாம். மௌனம் கடைப்பிடிப்பது நல்லது. சேமிப்புப் பணம் முக்கியச் செலவுகளுக்குப் பயன்படும்.



வாழுகின்ற வார்த்தைகள் வீழுகின்ற வார்த்தைகள்

மருத்துவர் ஒரு பெண்ணுக்கு சில மருந்துகளைப் பரிந்துரைத்து விட்டு,
"நீங்கள் இதை விடாமல் தொடர்ந்து சாப்பிட வேண்டும் " என்கிறார்..
"எவ்வளவு காலம் டாக்டர், நான் சாகும் வரை இதெல்லாம் சாப்பிடணுமா? என்று கேட்கிறார் அந்தப் பெண்.
டாக்டர் கூறுகிறார், "நீங்கள் வாழும் வரை" என்று..
"சாகும் வரை", "வாழும் வரை" என்ற இருவாக்கியங்களும் ஒரு பொருளைத்தான் குறிக்கின்றன.
ஆனால் "சாகும் வரை" என்பதில் அதிருப்தி, அச்சம் தரும் ஓர் எதிர்மறை எண்ணம் எழுகிறது. ஆனால் வாழும் வரை என்ற சொற்களில் ஆறுதல் தரும் நேர்மறை எண்ணம் ஏற்படுகிறது.
சொற்களில என்ன இருக்கிறது, அது புரிந்து கொள்வதில் தானே இருக்கிறது, என்று வாதாடலாம். ஆனால்....
சில வார்த்தைகள் ரணப்படுத்தும்...
சில வார்த்தைகள் குணப்படுத்தும்...
அடுத்தவரை ஊக்குவிக்கும் வார்த்தைகளைப் பேசலாம்.
அடுத்தவரை சோர்ந்துபோகச் செய்யும் வார்த்தைகளைத் தவிர்க்கலாம்.
வார்த்தைகள் தமக்குரித்தான வலுவை மிகையாகக் கொண்டுள்ளன.
உடலுக்கு இன்சுலின் எவ்வளவு முக்கியமோ, மனதுக்கு இன்சொல்லும் அவ்வளவு முக்கியம்.

சுடோக்கு

எண் விளையாட்டு

	6	5		1				
1						4	6	
	8			6				1
		3	9					6
	1		2	3	8		9	
5					6	8		
7				4			3	
		1						
				2		6	4	

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

நேற்றைய விடை

6	2	3	1	9	7	8	5	4
8	9	5	2	4	6	3	1	7
1	7	4	3	8	5	6	2	9
3	5	9	6	2	4	7	8	1
2	8	7	9	5	1	4	3	6
4	6	1	7	3	8	5	9	2
7	4	2	5	1	3	9	6	8
5	1	6	8	7	9	2	4	3
9	3	8	4	6	2	1	7	5

சுமைதாங்கி சாய்ந்தால்...

ஒரு தாய் தன் குழந்தையைக் கருவிலே சுமக்கத் தொடங்கிய நாள் முதல் அவளின் நிறை பாசத்தையும் அதாவது அந்தப் பிள்ளையையும் தன் மனைவியையும் பத்து மாதம் அல்ல தன் ஆயுள் முழுக்க சுமக்க ஆரம்பிக்கிறார்கள் தந்தையர்கள். இது வரை ஒரு வாலிபனாக உல்லாசமாக வலம் வந்த ஆண் மகனுக்கு தந்தை என்ற பதவி கிடைத்தால் பொறுப்புகள் அதிகரிக்கின்றன. முதலில் தன் மனைவியை ஒரு தாயாகக் கருதி பராமரிக்கின்றான். அவள் வயிற்றில் வளரும் குழந்தை உருப்பெற்றது முதல் அது வளர்வதற்கு வேண்டிய உணவு வகைகளையும் ,மருந்து மாத்திரைகளையும் மனைவிக்கு அன்புடன் அளித்து பராமரிக்கின்றான். குழந்தை பிறந்தது முதல் தன் ஆயுள் வரை அந்தக் குழந்தைக்காகவும் அதன் தாய்க்காகவும் அல்லும் பகலும் உழைக்கிறார்கள். தாய் வீட்டிலே இருந்து பிள்ளைகளின் பசியாற்றிப் பராமறிக்கிறாள் என்றால், பிள்ளைகளின் ,உணவு மற்றும் நோய் நொடி, கல்வி, திருமணம் என்று சகலதுக்கும் உழைப்பவர்கள் தந்தையர்கள். தாய் பிள்ளைகள் மேல் அன்பைப் பொழிகிறாள், பேசக் கற்றுக் கொடுக்கிறாள், அவர்கள் பேசும் மழலை மொழியில் தன்னை மறக்கிறாள் ,ஆனால் பிள்ளைகள் மேல் அன்பு இருந்தும் அதனை வெளிப்படுத்த நேரமின்றி மாடாய் அவர்கள் நலனுக்காய் உழைப்பவர் தந்தையே. பிள்ளைகள் காலையில் விழிப்பதற்கு முன் தொழிலுக்குப்புறப்பட்டுச் சென்று உடல் வருத்தி உழைத்து அவர்கள் தூங்கிய பின் தொழில் முடிந்து வீட்டுக்கு வரும் தந்தையால் எப்படி தன் பிள்ளைகளுடன் கொஞ்சி விளையாட முடியும்.

எந்த வொரு தந்தையும் தன் பிள்ளை கெட்டுப் போகவோ ,தப்பான வழி சென்றிடவோ வழி காட்டமாட்டார்கள். ஒவ்வொரு பெண் குழந்தையினதும் முதல் காவலன் அவளது அப்பாதான் என்பார்கள். அதே போன்று ஆண் பிள்ளைகளின் முதல் நண்பனும் அப்பாவே. குழந்தைப் பருவம் முதல் வளர்ந்து உயர் பள்ளிப்படிப்பு படிக்கும் வரை எமக்காக மழை, வெயில் எனப்பாராது தன் உடல் வருத்தி வியர்வை சிந்தி உழைத்து ஓடாய்த் தேய்பவர் தந்தையே . தனக்கு மகனோ மகளோ பிறக்க மருத்துவமனை வாசலில் தவமிருப்பதும், மழையானாலும் வெயிலானாலும் தாம் நனைந்தாலும். எம்மை நனைய விடாமல் பாடசாலைக்கும் வீட்டுக்குமாக கால் வலிக்க சைக்கிளில் அழைத்துச் செல்பவர் தந்தையே. தன் மகளுக்கோ மகனுக்கோ நல்ல துணையைத் தேர்ந்தெடுத்து புகுந்த வீட்டு வாசல் வரை வந்து வழியனுப்பி கண்களில் நீர் சிந்தாமல் மனதால் நொந்தமுவர். இன்றைய காலகட்டத்தில் அரச தொழில் புரியும் அப்பாக்களை விட கூலி வேலை செய்து குடும்பத்தைக் கொண்டு நடத்தும் அப்பாக்களின் வீதமே அதிகமாகும். ஒரு அப்பாவின் உழைப்பு அவர் சாகும் வரை நீடிப்பதால் தான் ஒரு அன்னையால் தன் பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்ய முடிகிறது. தாயின் சேவை குடும்பத்தில் வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனால் தந்தையின் சேவை சில பிள்ளைகளுக்கு இறுதி வரை தெரியாமலே போய் விடுவதும் உண்டு. உப்பு ஒழித்தால் தான் உப்பின் அருமை தெரியும், அப்பன் மாண்டால் தான் அப்பன் அருமை தெரியும் என்பது பொன் மொழி .

எனவே, தாயன்பை நாம் புரிந்து கொள்வது போல ,அன்பைத் தன் பிள்ளைகள் மேல் பொழிய நேரமற்று, அவர்கள் நலனுக்காய் உழைத்து மாயும் தந்தையர்களின் மாசற்ற மறைமுக அன்பையும் சேவையையும் உணர்ந்து அவர்களுக்கு சேவை செய்வோம்மாயின் நாட்டில் முதியோர் இல்லங்கள் அழிந்தொழியும் என்பது உறுதி .

மாறியது நெஞ்சம்

நல்லூர் என்ற கிராமத்தில் சுதந்தரம் என்பவன் வசித்து வந்தான். அவனுக்குத் திருமணமாகி குழந்தைகளும் உள்ளார். சுந்தரத்தின் மனைவியின் உறவினர் பலர் வெளிநாட்டில் இருந்து அவர்கள் குடும்பத்துக்கு பண உதவிகள் செய்வதால் சுந்தரம் உழைப்பதில் நாட்டமற்று சோம்பேறியாக இருந்தான். வேளாவேளைக்கு உண்பதும் வெட்டியாகப் பொழுது போக்குவதுமே அவனது வழக்கமாகிப் போய்விட்டது. அத்துடன் அடுத்தவர்களிடம் தேவையற்ற விதமாக முரண்படுவதும் காவல் நிலையங்களுக்கு அடிக்கடிச் செல்லுவதும் அவனது பொழுதுபோக்குகளாக அமைந்தன.

அவனது மனைவியும் ஒரு அப்பாவி. இவன் நடத்தைகள் எதைப்பற்றியும் அவள் எதுவும் கேட்பது கிடையாது. எவருக்கும் எந்தவொரு சிறிய உதவி கூடச் செய்யும் மனப்பான்மையும் அவனுக்கில்லை. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என அவன் வாழ்ந்து வந்தான்.

அதே ஊரில் சந்திரன் என்பவனும் தன் குடும்பத்தோடு வாழ்ந்து வந்தான். அவன் ஒரு ஏழை. அவனுக்கு உதவுவதற்கு உறவுகளும் இல்லை. அவனது மனைவியும் நல்ல பொறுமைசாலி. இருவரும் வறுமையிலும் செம்மையாகக் குடும்பம் நடத்தி வந்தனர். சுந்தரத்தின் நடவடிக்கைகள் சந்திரனுக்குப் பிடிக்காததால் அவன் சுந்தரத்திடம் இருந்து சற்று விலகியே இருந்தான்.

ஒருநாள் தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருந்த சந்திரனின் ஆடு கால்தவறி அங்கிருந்த கிணற்றுள் வீழ்ந்து விட்டது. அது மழை காலமாதலால் கிணற்றில் நீர் நிறைந்து காணப்பட்டது. இதனால் தனது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முடியாத நிலையிலிருந்த ஆடு ஈனமான குரலில் கத்தியது. ஆட்டின் கதறல் கிணற்றுப் பக்கமாக வந்துகொண்டிருந்த சுந்தரத்தின் காதில் விழுந்தது. கிணற்றை எட்டிப்பார்த்த சுந்தரம் அங்கே நீரில் போராடுவது சந்திரனின் ஆடு என்பதை இனம் கண்டு கொண்டான். தன்னை மதிக்காத சந்திரனின் ஆடு சாகட்டும் என நினைத்தவாறு அவன் தனது வீட்டை நோக்கிச் சென்றான். அவன் தனது வீட்டை நெருங்கியபோது அங்கே பலர் கூடி நிற்பதைக் கண்டான். ஓட்டமும் நடையுமாக அங்கு சென்றவன் தனது மூன்று வயதான பாலகனின் தலையை மனைவி துவட்டிக் கொண்டிருப்பதைக் கண்டான். தனது கணவனைக் கண்டதும் அவள் பெருங்குரலெடுத்து அழத்தொடங்கினாள். அப்போது அவன் நடந்ததை விசாரிக்க தங்கள் மகன் பாதையோரத்துக் கிணற்றுள் தவறி விழுந்துவிட்டதாகவும் தற்செயலாக அந்தப் பக்கம் வந்த சந்திரன் கிணற்றுள் பாய்ந்து அவனைக் காப்பாற்றித் தந்ததாகவும் அவள் கூறினாள்.

இதனைக் கேட்டதும் தோடத்துக் கிணற்றுக்குள் உயிருக்காகப் போராடும் சந்திரனின் ஆட்டின் ஞாபகம் சுந்தரத்தின் உச்சந் தலையில் உறைத்தது. உடனே அவன் அங்கிருந்து எவருக்கும்கூறாது தோட்டக் கிணற்றை நோக்கி ஓடத் தொடங்கினான். அவன் ஓடுவதன் காரணம் புரியாத பலர் அவன் பின்னே ஓடினார்கள். சிறிது நேரத்தில் சுந்தரமும் பலரும் சேர்ந்து சந்திரனின் ஆட்டைக் கிணற்றிலிருந்து உயிருடன் மீட்டனர்.

பழையதை மறக்காத மன்னன்

அந்தச் சிறுவன் மாலை நேரங்களில் விளையாட்டு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருப்பான். கால்பந்தாட்டம் என்றால் அவனுக்கு கொள்ளைப் பிரியம். அவனுடைய புத்தகப்பை அந்த மைதானத்தில் ஒரு மூலையில் தின்பண்டங்கள் விற்றுக் கொண்டிருந்த மூதாட்டி ஒருத்தியின் பாதுகாப்பில் இருக்கும். இது தினசரி வழக்கம். காலம் உருண்டது. பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னாலும் அதே கிழவி அதே மரத்தடியில் உட்காந்து தின்பண்டம் விற்றுக்கொண்டிருந்தார். படைவீரர்கள் ஏராளமானோர் திடீரென அந்த இடத்தில் குழுமினர். கிழவி பயந்து விட்டாள். மன்னர் அங்கு வருகிறார் என்ற செய்தி அவள் காதில் விழுந்தது. வந்த மன்னர் "பாட்டி சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிறுவனின் புத்தகப் பையைத் தினமும் பத்திரமாக நீ வைத்திருக்க அந்த சிறுவன் தெம்போடு இதோ இந்த மைதானத்தில் விளையாடுவானே அவனை உங்களுக்கு நினைவிருக்கிறதா? என்று கேட்டார் மன்னர். கிழவி புரியாமல் விழித்தாள். "அந்தச் சிறுவன் நான்தான். என் இளமைக்கால நினைவுகள் என் மனதிலிருந்து இன்னும் மறைந்து போகவில்லை. உங்களிடம் என் நன்றியைத் தெரிவிக்கவே இங்கு வந்தேன்" என்றார் மன்னர்.

மூதாட்டியின் கண்ணில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. பழமையை மறக்காத அந்த மன்னர் வேறு யாருமல்ல. பிரான்ஸ் நாட்டின் மாவீரன் நெப்போலியன்தான்.

ஆறுமுக நாவலர்

- ஆறுமுக நாவலர் 1822ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18ஆம் நாள் பிறந்தார்.
- இவர் யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூரிலே கந்தப் பிள்ளை சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார்.
- இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் ஆறுமுகம் என்பதாகும்.
- இவர் சிறுவயதிலேயே கல்வி, கேள்வி, ஒழுக்கங்களில் சிறந்து விளங்கினார்.
- நாவலர் சைவ சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்.
- இவர் சமயப்பணி, கல்விப்பணியோடு சமூகப்பணியையும் ஆற்றினார்.
- இவரின் தன்னலமற்ற பணிகளைப் பாராட்டி இந்தியாவிலுள்ள திருவாவடு துறை ஆதீனம் "நாவலர்' எனும் பட்டத்தை வழங்கி மதிப்புறுத்தியது.
- இவர் பல நூல்களை எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்டார். *உ+ம் -சைவ வினாவிடை, பாலர்பாடம், இலக்கணச்சுருக்கம்.*
- இவர் 1879ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் இறைவனடி சேர்ந்தார்.

இரு படங்களுக்கும் இடையே 7 வேறுபாடுகள் உள்ளன; கண்டு பிடியுங்கள்



கொழுப்பகற்றி

வெங்காயம் கொண்டுள்ள பயன்கள் ஏராளம். அவை குறித்து நோக்குதல் சிறப்பு.

சிறுநீரை அடக்கிவைப்பதால் அதில் நுண்ணுயிரிகளின் உற்பத்தி அதிகமாகி, நோய் உண்டாகும் வாய்ப்பு அதிகரிக்கும். இந்தப் பழக்கத்தை உடையோருக்கு சிறுநீர்த்தாரைத் தொற்று ஏற்படும். இவர்கள், வெங்காயத்தை உணவில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். வெங்காயம் கழிவுப் பொருள்களைக் கரைத்து, வெளியே தள்ளிவிடும்.

முருங்கைக்காயைவிட அதிக பாலுணர்வு தரக்கூடியது வெங்காயம். வெங்காயம் குருதியில் கொழுப்புச் சேர்வதை இயல்பாகவே கரைத்து, உடலெங்கும் குருதியை கொழுப்பு இல்லாமல் இருக்க உதவி செய்கிறது.

(24ஆம் பக்கம் பார்க்க....)

வெங்காயம்

தேவை

1) களஞ்சியக்காப்பாளர் தேவை
கணினி அறிவு அவசியம்
2) மில் வேலைக்கு (அரைக்கும் ஆலைக்கு அனுபவம் உள்ள வேலையாள்தேவை.

தொடர்புகளுக்கு : 075 9789223

கட்டடம் வாடகைக்கு உண்டு

பிறவுண் வீதி, தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகில் வாகனத்தரிப்பிட வசதியுடன் கூடிய இரண்டு மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு.

அரச, தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொலைபேசி இல :
076 6218416, 077 826 3516

விற்பனைக்கு

யாழ் நல்லூர் கோயிலுக்கு அண்மையில் கோயில் வீதியில் 60 பேச்சஸ் காணியும், யாழ் மணல்தரைலேனில் 30 பேச்சஸ் காணித்துண்டும், யாழ் கந்தர் மடம் பலாலி வீதியில் 60 பேச்சஸ் காணியும், யாழ் வைத்தியசாலை வீதியில் CTB பஸ் தரிப்பிடத்திற்கு அண்மையில் 15 அடி அகலம் 200 அடி நீளம் கொண்ட இரண்டுகடைகளும், 15 அடி அகலம் கொண்ட ஒரு கடையும், யாழ் வேம்படி சந்திக்கு அருகில் 1ம் குறுக்கு தெருவில் 50 பேச்சஸ் காணியும் 120 பேச்சஸ் காணித்துண்டும் யாழ் நல்லூர் சிவன் கோயிலுக்கு அண்மையில் பருத்தித்துறை வீதியில் 30 பேச்சஸ் காணியும், யாழ் வைத்தியசாலை வீதியில் வைத்திய சாலைக்கு முன்பாக காந்தி வீதியில் 44 பேச்சஸ் காணித்துண்டும், யாழ் வைத்தியசாலை வீதியில் 60 பேச்சஸ் காணியும் (சிக்னலுக்கு அருகில்) யாழ் சீனிவாசன் வீதியில் 100 பேச்சஸ் காணித்துண்டும் 140 பேச்சஸ் காணித்துண்டும் யாழ் பலாலி வீதியில் விநாயகர் வீதிக்கு அண்மையில் 30 பேச்சஸ் காணித்துண்டும், யாழ் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் 60 பேச்சஸ் காணியும் 100 பேச்சஸ் காணியும் யாழ் திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் இரண்டு பரப்புடன் கூடிய வீடும் யாழ் உரும்பிராய் சந்திக்கு அண்மையில் இரண்டரை பரப்புடன் கூடிய வீடும் யாழ் மின்சார நிலைய வீதியில் பஸ்தரிப்பிடத்திற்கு பின்பக்கமாக பத்து அடி அகலம் நூறு அடி நீளம் கொண்ட கடையும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :-
கனகசபை தர்மலிங்கம் 189, 191, 193
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் 077 723 2535

கண்ணீர் அஞ்சலி

கீரிமலை கமநல சேவைகள் நிலையத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
திருமதி பிறேமகாந் சுதர்ஜினி அவர்களின் அன்புத்தாயார்.

திருமதி நாகமுத்து சிவயோகம்

அவர்கள் 07.12.2017 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், உத்தியோகத்தர்கள் மற்றும் கீரிமலை கமநல சேவை நிலைய சமூகம்.

மரண அறிவித்தல்

முத்துத்தம்பி ஆனந்தராஜா



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குழி, பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி ஆனந்தராஜா (துரை) 06.12.2017 புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி
(ஆ.சுந்தரீஸ்வரி)
021 222 1064
பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குழி.

ஆத்ம சாந்திப்பிரார்த்தனை அழைப்பு

27. 11 .2017 சோமவாரத்தில் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் பாசமிகு தந்தையார்

"வேதாக மோத்தம ஆச்சார்ய சாரதா"

சிவஸ்ரீ நாகலிங்க குருக்கள் யோகீஸ்வரக்குருக்கள்

அவர்களின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் மதியபோசனமும் (கிரஹயக்ஞம்) நாளை சனிக்கிழமை (09.12.2017) மு.ப 10.00 மணிக்கு நல்லூர் சிவன் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

அனைத்து அந்தணப்பெருமக்கள் அன்பு உள்ளங்கெண்ட அனைத்து தீவகமக்கள், யாழ்ப்பாணம், அத்தியடி, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, வவுனியா, கூமாங்குளம் வாழ் மக்கள் மற்றும் ஆலயங்களின் நிர்வாகத்தினர், தர்மகர்த்தாக்கள், அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் இது வரை அழைப்பிதழ்கள் கிடைக்கப்பெறாதவர்களும் தயவு செய்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று மேற்படி நிகழ்வில் பங்குகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
433, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
077 652 5405, 077 722 2551

மரண அறிவித்தல்

திருமதி செல்லம்மா இராசதுரை

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா இராசதுரை நேற்று (07.12.2017) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தையல் முத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசதுரையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசையா, குமாரசாமி, யோகம்மா, சுப்பிரமணியம், பாலசிங்கம், தெய்வகலா மற்றும் பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் மங்களேஸ்வரி, சற்குனேஸ்வரி, இராசநாயகம், சற்குனேஸ்வரன், நஞ்சனேஸ்வரி, மஞ்சுளா ஆகியோரின் தாயாரும் பாலசுந்தரம், சிறிதரன், தேவிகா, விமலரூபா, துரைரத்தினம், தயாளரூபன் ஆகியோரின் மாமியும் ரஜனிகாந், கமல்காந், மயூரன், சங்கீதா, குருபரன், கார்த்தீபன், அருணன், விதுசன், ஆரணி, பவித்திரா, சங்கவி, ஹரிஸ்ராஜ், அனுஸ்ராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டனிஷா, ஆதன், றித்தீஸ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2017) வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி (பால் பண்ணை) இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
தலங்காவில் பிள்ளையார் கோவிலடி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
0212215743

மரண அறிவித்தல்

தம்பிப்பிள்ளை சிவராசா

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் 76/4, கலட்டிப்பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சிவராசா நேற்று (07.12.2017) வியாழக் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு தம்பிப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற அழகரத்தினம் - தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சிவசோதியின் அன்புக் கணவரும் சிவநிதி (கனடா), சிவரூபன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாபரனின் (கனடா) மாமனும் விஜயலட்சுமி கதிரவேலு, புனிதகுமாரி நவரத்தினம், சிவசண்முகராசா (மங்கை சில்க், சுன்னாகம்), Lion சற்குணராசா (சீமாட்டி), வசந்தகுமாரி குகனேசன் ஆகியோரின் சகோதரரும் அருள்நாதன், சிவராசா, காலஞ்சென்ற முருகதாஸ் சிவமணி, மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும் அபிநியா, அபிராமி, சிவச்சரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

76/4, கலட்டிப்பிள்ளையார் கோவிலடி,
சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
0217210121

வெங்காயம்...

(23ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உடல் வெப்பத்தை குறைக்கவல்லது வெங்காயம். பழைய சாதத்தில் மோர் விட்டு, நான்கு சின்ன வெங்காயத்தை நறுக்கி அதனோடு கலந்து சாப்பிடலாம். உடலின் வெப்பம் தணியும்.

நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். குருதி ஓட்டத்தைச் சீராக்கும்.

யூரிக் அமிலம் அதிகமாக சிறுநீர்ப் பையில் சேர்ந்தால் கற்கள் தோன்றும். வெங்காயத்தை அடிக்கடி சாப்பிட்டால் அந்தக் கற்கள் கரைந்துவிடும்.

புற்றுநோயைத் தடுக்கும் மருந்துப்பொருள் வெங்காயத்தில் இருப்பதாக அண்மைய ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புகைபிடித்தல், காற்று மாசுபடுதல், மன இறுக்கம் போன்றவற்றால் ஏற்படும் கல இறப்புகள், கலச் சிதைவுகளை இது சரி செய்து விடுகிறது. வயிற்றுப்புண், வெள்ளைப்படுதல், கண் நோய் போன்ற பாதிப்பிலிருந்து விடுபட, தினமும் உணவில் சின்ன வெங்காயம் சேர்ப்பது அவசியம்.

வெங்காயத்தை பச்சையாக உண்ணுவதன் மூலமே அதிலுள்ள சத்துக்களை முழுமையாகப் பெற முடியும். நான்கு அல்லது ஐந்து வெங்காயத்தைத் தோலை உரித்து அதோடு சிறிது வெல்லத்தைச் சேர்த்து அரைத்துச் சாப்பிட பித்தம் குறையும். பித்த ஏப்பம் மறையும்.

கணையத்துக்கு உள்ளே இருக்கும் செதிலில் பசை அல்லது அழுக்கு இருப்பின் இன்சுலின் சுரக்காது. இதனை இயல்பான நிலைக்கு மாற்றி சர்க்கரையின் அளவைக் கட்டுக்குள் வைக்க சின்ன வெங்காயம் உதவுகிறது.

கல்லீரலில் பித்தத் திரவம் அதிகமாக சுரந்தால், காமாலை வரும். இந்தப் பித்தத் திரவத்தை இயல்பானநிலையில்சுரக்க வைப்பது சின்ன வெங்காயம். அடிக்கடி புகை பிடிப்பவர்கள் வெங்காயச் சாற்றை நாள் ஒன்றுக்குஅரைஅவுன்ஸ் வீதம்மூன்றுவேளை சாப்பிட்டு வர நுரையீரல் சுத்தமாகும்.

மரண அறிவித்தல்



சிற்றம்பலம் வடிவேலு

உடுவில் தெற்கு புதுமடம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் வடிவேலு நேற்று (07.12.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், அன்னலட்சுமி. கணேசு, தங்கத்துரை மற்றும் சுபதேவி ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஞானேஸ்வரி (ஆசிரியர்), காலஞ்சென்ற சர்வேந்திரா மற்றும் சத்திஜேந்திரா. கயேந்திரா. இந்துஜா காலஞ்சென்றவர்களான சோதிமலர், புஸ்பமலர் மற்றும் நந்தறூபன் . றங்கநாதன் (மெக்கானிக்). ஜமுதினி. உதயராஜன் ஆகியோரின் சிறிய தந்தையும் கமலாதேவியின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2017) வெள்ளிக்கிழமை பி.ப .2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

30 ஆவது வருட கல்விச் சேவையில்
யாழ் நகரின் No 1 கல்வி நிறுவனம்

புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்

தரம் 1 முதல் O/L வரை

புதிய கல்வியாண்டு - 2018
சிறப்பான ஆரம்பம்
09.12.2017
சனிக்கிழமை மாலை 4.00 மணி

தமிழ் மொழிமூல வகுப்புக்கள்
ஆங்கில மொழிமூல வகுப்புக்கள்

தொடர்புகளுக்கு : 077 4598 440

தரம் 4 மாணவர்களின்
பெற்றோர்களே...
(2018 புலமைப்பரிசில் பரீட்சை)

திருத்தற் சேவையுடன் மாதம் ஒரு பரீட்சை

உங்கள் பிள்ளைகளின்
புள்ளியீட்டும் திறனை மேலும் அதிகரிக்க
விரும்புகின்றீர்களா?
ஒளிஅரசி சஞ்சிகை மாதாந்தம் நடத்தும்

பரீட்சையுடன் உங்கள்
பிள்ளைகளையும் இணைத்துக்கொள்ளுங்கள்

மாதம் ஒருமுறை
சிங்கள மொழிபெயர்ப்பு
வினாத்தாள் ஒளிஅரசி
சஞ்சிகையில் வெளிவரும்

இதனை உங்கள் பிள்ளைகள் மூலம் சுயமாக செய்து (நேரம் கணித்து) சஞ்சிகையில் உள்ள கொழும்பு முகவரிக்கு ஒவ்வொரு மாதமும் 25 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பினால் 10 நாட்களுக்குள் எமது விசேட ஆசிரியர் குழுவால் திருத்தப்பட்டு உங்கள் வீட்டுக்கு விடைகளுடன் அனுப்பப்படும்.

120 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளும்
மாணவர்களின் பெயர் விபரங்களை
ஒளிஅரசி சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டு
பாராட்டி வாழ்த்தப்படும்.

விடுயோக முகாமையாளர், ஒளிஅரசி
யாழ்ப்பாணம் - 071 862 8351 / 071 862 8369,
கிழக்கு - 071 872 4057, தலைமை அலுவலகம் - 011 432 4444

மரண அறிவித்தல்

திருமதி சரஸ்வதி செல்லையா

பிறப்பு 15.10.2017 இறப்பு 07.12.2017

கொற்றாவத்தை, கட்டைப்புளியடியைப் பிறப்பிடமாகவும் கொற்றாவத்தை சரஸ்வதி அகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி செல்லையா நேற்று (07.12.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கதிர்காமு - கண்டு தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அம்மா, மகாலிங்கம், முத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரராஜசிங்கம் (Rtd. ISA Instructor - NAITA), நேசமலர், மல்லிகாதேவி, சகுந்தலா (கனடா), ஜெயந்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் சின்னம்மா, தங்கம்மா, கந்தையா, சின்னாச்சிப்பிள்ளை, தங்கம் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற நமசிவாயம், செல்லக்கதிரமலை மற்றும் பாலசுப்ரமணியம் (கனடா), ரகுநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் கல்பனா, பகீரதி, சிந்துஜா, தமிழினி, அகிலன் (யாழ். பல்கலைக்கழகம்), அன்பழகன், பரணீதரன் (பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை), அன்பரசி, கலையரசி, விநோதா, கங்கா, திலக், மேகலா, தினேஸ், தசரத், சாரங்கன், சாருகேசி, ரிஷிகேசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சகாப்தன், கானவர்ஷினி, ஆத்மிகன், சாருகேசினி, அபிலாஸ், கீர்த்திகன், பவதாரணி, அட்சயா, அகிம்சன், சதுர்சிகா, சனுஜன், ப்ரித்திகா, இனியன், இனியா, டினுஜா, மதுசிகன், டிலக்சிகா, பிரவஸ்தி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2017) வெள்ளிக் கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
077 967 2224
குடும்பத்தினர்.

தமிழரசுக்...

ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியே பொறுப்பு என்று ரெலோ அமைப்பின் செயலர் ந. சிறிகாந்தா குற்றஞ்சாட்டியிருந்தார். தமது கட்சியின் நிலைப்பாட்டை விளக்கி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மாவை சேனாதிராசா மேற் கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.

"இது துரதிர்ஷ்டமானது என்றாலும் இனத்தின் ஒற்றுமை கருதி மேலும் விட்டுக் கொடுப்புகளை செய்வோம். உள்ளூராட்சித் தேர்தலில் ஒன்று பட்டு வெற்றிபெற முயற்சிக்கின்றோம்." என்றும் அவர் அந்த அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

"இலங்கை தமிழரசுக் கட்சி திட்டவட்டமாக வெற் றிபெறக் கூடிய சபைகளை ரெலோ, புளொட் அமைப்புக்கள் தமக்கு கோரின. அவற்றை விட்டுக் கொடுத்து ஒற்றுமையை ஏற்படுத்த நாம் நேற்றுமுன்தினம் கூடி ஆராயத் திட்ட மிட் டிருந்தோம்.

ரெலோ இயக்கத்தினர் வவுனியாவில் அவசர அவசரமாகக் கூடி தமிழரசுக் கட்சியுடன் தேர்த லில் ஒன்றுபட்டு போட்டியிட முடியாது என்று கூறினர். அந்தச் செய்தியை ஊடகங்களும் அவசரமாகப் பரப்பினர். இந்தத் தீர்மானத்தால் நாம் மிகுந்த கவலையடைகின்றோம்.

தமிழரசுக் கட்சித் தலைவர்களைத் தோற்கடிக்க வேண்டும் என்ற கட்சிகள் இப்போது தமிழரசுக் கட்சியைத் தோற்கடிக்க வேண்டும் என்று கூறு கின்றன. தமிழரசுக் கட்சியுடன் பேசி முடிவெ டுக்க சந்தர்ப்பம் இருந்தும் அதைப் புறந்தள்ளி தமிழரசுக் கட்சியைத் தேற்கடிக்க முயற்சிக்கும் கட்சிகளுடன் இணைய முயற்சித்துப் பேசுவது பொருத்தமற்றதும், தவறான பின்விளைவுக ளையும் ஏற்படுத்தக் கூடியதும். அதுவே குழப்ப நிலையை ஏற்படுத்தியது.

தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் மக்களிடம் இந்த நிலமை தொடர்பாக விளக்கமளிக்கின்றனர். தவறுதலான அணுகுமுறைகளைக் கைவிட்டு தமிழரசுக் கட்சியுடன் இணைந்து வெற்றிபெறு வோம் என அழைக்கின்றோம்." என்று அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ற-5)

அரசியல்...

அறிக்கையிடுவர் என்று தெரிவிக்கப்படுகின் றது.

அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட் டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் மூவர் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற் கொண்டிருந்தனர். அவர்களின் வழக்கு வவு னியாவில் இருந்து அநுராதபுரம் நீதிமன்றத் துக்கு மாற்றப்பட்டதைக் கண்டித்தே அவர்கள் இந்தத் தொடர் போராட்டத்தை நடத்தியிருந்த னர். அநுராதபுரம் சிறைக்குச் சென்ற ஐ.நா. சிறப்புக் குழு அவர்களைச் சந்தித்தது.

அரசியல் கைதிகளுடன் தனித்தனியாகக் கலந் துரையாடியது. கைது செய்யப்பட்டமைக்கான காரணம், தடுத்து வைக்கப்பட்டுள்ள காலம், சிறை மாற்றப்பட்டமை, வழக்கு நீண்டகாலம் இழுபடுவதற்கான காரணம் எனப் பல விடயங் களைக் கேட்டறிந்தது.

அவதானித்த விடயங்கள் தொடர்பாக எதிர்வ ரும் 15ஆம் திகதி சிறப்பு அறிக்கை ஒன்றை இலங்கை அரசிடம் இந்தக் குழு ஒப்படைக்க வுள்ளது. அதன் பிரதி ஐ.நாவுக்கும் அனுப்பப்ப டவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி)

ஆசனப்...

அவர் தெரிவித்ததாவது:

சமரசப் பயணம்

ரெலோவின் தலைவர் நேற்று முன்தினம் என் னோடு இரண்டு மணி நேரம் பேசினார். அதில் பல இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன. பிரச்சி னைகளைச் சுமுகமாகத் தீர்க்க முயல்கின் றோம். அனைவருடன் கலந்தாலோசித்து பேச் சுக்களில் இணக்கத்தை ஏற்படுத்திச் சேர்ந்தே பயணிப்போம் என்று நம்புகின்றேன். ரெலோ வுடன் ஏற்பட்டுள்ள முரண்பாட்டை தீர்த்த பின் னர் புளொட்டுடன் பேசி சமரச முயற்சி மேற் கொளோம். சமரசமாகச் செல்வோம்.

கொள்கைக்கே வாக்கு

தமிழ் மக்கள் சின்னத்தைப் பார்த்து வாக்களிப் பவர்கள் அல்ல. கொள்கைக்காக வாக்களிப்ப வர்கள். தமிழர் விடுதலை கூட்டணி பழமை யான கட்சி. அதன் சின்னமான உதய சூரியன் முக்கியமான சின்னம். அது மக்கள் மத்தியில் பிரபலமானது.

உதயசூரியன் சின்னத்தை கூட்டமைப்பினர் பயன்படுத்தக் கூடாது என்று ஆனந்தசங்கரி நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்த போது, கூட்ட மைப்பின் சார்பில் நான் நீதிமன்றில் வாதிட் டேன். 2004ஆம் ஆண்டு தேர்தலில் கூட்ட மைப்பினர் உதய சூரியனில் செயற்பட தமிழர் விடுதலைக் கூட்டணி அனுமதிக்கவில்லை. கூட்டமைப்பு வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டது. மக்கள் உதய சூரி யனைப் புறக்கணித்தார்கள்.

மக்கள் மத்தியில் பிரபலமான சின்னமாக இருந்த உதயசூரியன் சின்னம் புறக்கணிக் கப்பட்டது. மக்கள் சின்னத்துக்காக வாக்களிப் பவர்கள் அல்ல. கொள்கைக்காக வாக்களிப்ப வர்கள். யார் கொள்கையுடன் பயணிக்கின்றார் களோ அவர்களுக்கே வாக்களிப்பார்கள்.

மன்னிப்பு

தமிழ் மக்களுக்காக கூட்டமைப்பினர் புனிதப் பயணத்தை மேற்கொண்டு உள்ளோம். அவ் வாறான நாம் கேவலமாக ஆசனப் பங்கீட்டுக் காக பிரிந்து செல்லும் நிலைக்கு வந்தது துர தர்ஷ்டமானது. அதற்காக நான் மக்களிடம் மன்னிப்புக் கோருகிறேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழ் அரசுக் கட்சியைத் தவிர பங்காளிகளாக உள்ளவர்கள் ஆயுதக் குழுக்களாக இருந்து வந்தவர்கள். ஆனால் தமிழ் அரசுக் கட்சி அவ்வாறு இருந்து வந்ததில்லை. அதற்காக நாங்கள் பங்காளிக் கட்சிகளைப் புறக்கணிக்க மாட்டோம். அவர்க ளுடன் சேர்ந்து பயணிக்க நாம் எப்போதும் தயாராகவே இருக்கின்றோம். ஆனாலும் கூட் டமைப்பில் இருந்து வெளியேறப் போகின்றேன் என்று நிற்பவர்களை நாம் தடுக்க முடியாது.

தேர்தலுக்கான கூட்டணி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடு களை புதிய கூட்டணி விமர்சிக்கின்றது. புதிய கூட்டணி தேர்தலுக்காக கூடிய கூட்டணி. அந் தக் கூட்டணி சொல்வதெல்லாம் தேர்தலுக்கா கச் சொல்வது என்பது மக்களுக்கே புரியும் என் றார். (ற-5,101,37)

திருமலையில்...

வதற்கான கட்டுப்பணத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி நேற்றுச் செலுத்தியது.

ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் சந்திரகுமார் தலைமையிலான அமைப் பினர் கிளிநொச்சியின் மூன்று சபைகளிலும் சுயேச்சையாகப் போட்டியிட நேற்றுக் கட்டுப்ப ணம் செலுத்தினர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நான்கு சபைகளி லும் போட்டியிடுவதற்கு ஈ.பி.டி.பி. நேற்றுக் கட்டுப்பணம் செலுத்தியது. (ற-5,8)

ரெலோவின்...

செயலர் வீ. ஆனந்தசங்கரியை ரெலோ சந்தித் தது. சிறிரெலோ அமைப்பு தம்முடன் நீண்டகா லம் இருக்கின்றனர். அவர்கள் இந்தக் கூட்டணி யில் இருப்பார்கள் என்று அந்தச் சந்திப்பில் கூறப்பட்டதால் ரெலோ அதிருப்தியடைந்தது.

புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த் தனை நேற்றுமுன்தினம் மாலை ரெலோ சந் தித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறுவதற்கு சித்தார்த்தன் பச் சைக் கொடி காட்டவில்லை. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸுடன் பேசுவதற்கு ரெலோ நேற்றுத் திட்டமிட்டாலும் அது சாத்தியப்பட வில்லை.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலை வர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு நடத்தியிருந்தார். அதில் ரெலோ அமைப்பைக் கடுமையாக விமர் சித்தார்.

'கொள்கை ரீதியான வெளியேற்றங்கள் என் றால் ஏற்க முடியும். அதனை விடுத்து எங்க ளுக்கு எதிரான கொள்கைதான் சரியானது என்று இறுதிவரை நியாயப்படுத்திக் கொண்டி ருந்தவர்கள் ரெலோ அமைப்பினர். இலங் கைத் தமிழ் அரசுக் கட்சியிலும் பார்க்க அதிக மாக அதனை நியாயப்படுத்தியவர்கள் ரெலோ அமைப்பினர். தமது ஆசனப் பங்கீட்டுப் பிரச் சினைக்காக வெளியேறி வருபவர்களுடன் பேசுவதில் அர்த்தமில்லை." என்று அவர் கூறி னார். ரெலோ எடுத்த முயற்சிகள் அனைத்தும் பிசுபிசுத்துப் போயுள்ள நிலையில் அந்த அமைப்புக்கு இரு தெரிவுகள் மட்டுமே முன் னுள்ளன. (ற-5,101)

முதலாவது...

வலி. மேற்குப் பிரதேச சபையில் போட்டியிடுவ தற்கு இந்தக் குழு கட்டுப்பணம் செலுத்தியது என்று தேர்தல்கள் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுயேச்சைக் குழுக்கள் பெரும் எண்ணிக்கை யில் களமிறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின் றது. (ற-5)

கிளிநொச்சியில்...

இந்தக் கொலையைச் செய்தனர் என்ற குற்றச் சாட்டில் கிளிநொச்சியைச் சேர்ந்த ஜெகதீஸ்வ ரன் கரிகரன், தங்கராஜா இராஜேந்திரன் அல் லது ராசா ஆகிய இருவரும் மாங்குளம் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் இருவருக்கும் எதிராகக் கிளிநொச்சி நீதிவான் மன்றில் சுருக்கமுறையற்ற விசார ணைகள் இடம்பெற்றன. அதன் பின்னர் சந் தேகநபர்கள் இருவரும் பிணையில் விடுவிக் கப்பட்டனர்.

வேலுப்பிள்ளை சிவரூபனைக் கொலை செய் தனர் என்ற குற்றச்சாட்டில் எதிரிகள் இரு வருக்கு எதிராகவும் தண்டனைச் சட்டக் கோவை 296ஆம் பிரிவின் கீழ் சட்டமா அதிபர் திணைக் களத்தால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் 2011ஆம் ஆண்டு பெப்ரெவரி மாதம் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக் கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைகள் இடம்பெற்று வந்தன. இரண் டாம் எதிரி மீதான குற்றச்சாட்டை வழக்குத் தொடுனரால் நிருபிக்கமுடியவில்லை. அத னால் இரண்டாம் எதிரியை மேல் நீதிமன்றம் விடுவித்தது.

"முதலாம் எதிரி மீதான குற்றம் கண்கண்ட சாட் சிகளின் அடிப்படையில் நிரூபிக்கப்படாவிடினும் சந்தர்ப்ப சூழல் சாட்சியங்களால் நிரூபிக்கப்பட் டது. அதனால் கொலை செய்யும் உள்நோக் கோடு வேலுப்பிள்ளை சசிரூபனை கொலை செய்தார் என இனங்கண்டு முதலாம் எதிரி யைக் குற்றவாளியாக நீதிமன்று அறிவிக்கி றது" என்று நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செ ழியன் அறிவித்தார்.

கொலைக் குற்றத்துக்காக நாட்டின் அரச தலை வரால் தீர்மானிக்கப்படும் திகதியில் அவரால் குறிப்பிடப்படும் இடத்தில் குற்றவாளியின் உயிர் பிரியும் வரை தூக்கிலிடுமாறு நீதிபதி தீர்ப்பளித்தார். இந்த வழக்கை அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந் நெறிப்படுத்தினார். (உ-8)

தமிழ்த்...

வலைக்குள் சுரேஸ் பிரேமச்சந்திரன் சிக்கிக் கொண்டுள்ளார். இந்த சதிவலைக்குள் அவரை விழ வைத்ததில், சிக்க வைத்ததில் உலக வல் லரசுகளுக்கும் பங்கு உண்டு. சுரேஸ் பிரேமசந் திரன் ஏமாற்றிவிட்டார்."- என்றும் அவர் குறிப் பிட்டார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி நேற் றுப் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தியது அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது-

தமிழ்தேசிய மக்கள் முன்னணியும், ஈ.பி.ஆர். எல்.எவ் அமைப்பும் இணைந்து உள்ளூராட்சித் தேர்தலை சந்திப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. கடந்த மாதம் 16ஆம் திகதி சுரேஸ் இந்தியா செல்ல இருந்தார். அப்போது தேர்தல் திணைக் களத்துடன் தொடர்பு கொண்டு, பொதுச் சின் னம் பெறுவது தொடர்பாகப் பேசும்படி கேட்டி ருந்தார். நாங்கள் தேர்தல் திணைக்களத்துடன் பேசியிருந்தோம். புதிய கூட்டணிகளை நவம்பர் மாதம் 27ஆம் திகதிக்கு முன்னதாக பதிவு செய் யவேண்டும் என்று தேர்தல் திணைக்களத்தால் எமக்கு கூறப்பட்டது. சுரேஸ் பிரேமச்சந்திரனை தொடர்பு கொண்டு பதிவுக்கான ஆவணங்க ளைக் கேட்டிருந்தேன். நாடாளுமன்ற உறுப்பி னர் சிவசக்தி ஆனந்தனை தொடர்பு கொண்டு ஆவணங்களை பெறச் சொன்னார். பின்னர் அவர்களுடைய தொடர்புகள் கிடைக்கவே யில்லை. சுரேஸ் நாடு திரும்பிய பின்னர் தமிழ் மக்கள் பேரவை உறுப்பினர்கள் சிலருடன் தொடர்பு கொண்டு தமிழர் விடுதலை கூட்டணி யுடன் தேர்தலை சந்திக்கலாம். அதற்கு எங்க ளின் ஒப்புதலைப் பெற்றுத் தாருங்கள் என்று கேட்டிருக்கிறார். இந்த விடயம் எமக்கு பேரவை யால் கூறப்பட்டது. கடந்த 19ஆம் திகதி இரவு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அவசரமாகக் கூடியது. அது தமிழர் விடுதலை கூட்டணியுடன் இணைவதில்லை என்று ஏகமனதாகத் தீர்மா னித்தது.

19ஆம் திகதி இரவு 11.05 மணிக்கு சுரேஸ் பிரே மச்சந்திரனுக்கு நான் ஒரு குறுஞ்செய்தியை அலைபேசி வழியாக அனுப்பினேன். அதில் 12ஆம் திகதி நடைபெற்ற தமிழ் மக்கள் பேரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டிருந்த முடிவுகளுக்கு தமிழர் விடுதலை கூட்டணியுடன் இணையும் முடிவு மாறானது என்பதைக் கூறியிருந் தேன். அதற்கு 20ஆம் திகதி காலையில் பதில் குறுஞ் செய்தி வந்தது. அதில் பதிவு செய்யும் நடவடிக் கைகளைத் தொடருங்கள். எங்கள் கட்சிக்குள் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் உள்ளவர்கள் அழுத்தங்களை கொடுக்கிறார்கள். நான் கட் சிக்குள் பேசித் தீர்மானிக்கிறேன் என்றார். அதற்குப் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியிட மிருந்து எந்தத் தொடர்பும் இல்லை.

கடந்த 28ஆம் திகதி எம்மோடு அவசரமாக பேசவேண்டும் என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் தமிழ் மக்கள் பேரவை உறுப்பினர்கள் ஊடாகக் கேட்டிருந்தார். 28ஆம் திகதி மாலை சந்தித்துப் பேசினோம். தமிழர் விடுதலைக் கூட்டணி 13ஆம் திருத்தச்சட்டத்தை தீர்வாக ஏற்கவேண் டும் என்று கூறுகிறது. போர் காலத்தில் ஈ.பி.டி.பி அமைப்புடன் இணைந்து அரசு நடத்திய இறு திப் போரை நியாயப்படுத்தியது. சுயநிர்ணய உரிமையை நிராகரிக்கிறது. ஒற்றையாட்சியை வலியுறுத்துகிறது என்ற விடயங்கள் சுட்டிக் காட் டப்பட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைவது பொருத்தமற்றது என்று எம்மால் உறுதியாகக் கூறப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். சின்னத்தில் போட்டியிடுவது அல்லது தமிழ்க் காங்கிரஸ் சின்னத்தில் போட் டியிடுவது என்பதுதான் இருந்த தெரிவு. 29ஆம் திகதி மீண்டும் கொழும்பு சென்று தேர் தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவுடன் பேசினோம். பொதுச் சின்னம் கொடுக்க முடி யாது என்று பதில் வழங்கப்பட்டது. இருக்கும் சின்னத்தில் போட்டியிட தடைவிதிக்கவில்லை. அவ்வாறான சூழலில் தேர்தலுக்காக மட்டும் ஈருருளிச் சின்னத்தில் உடன்பாட்டின் அடிப்ப டையில் போட்டியிடலாம் என்று கூறினோம். அதுவும் பின்னர் நிராகரிக்கப்பட்டது.

நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிர்ப் பது தேர்தலுக்காகவோ, அவர்களை விமர்சிக் கவேண்டும் என்பதற்காகவோ அல்ல. அவர் கள் கொள்கையில் இருந்து விலகிச் செயற்படு கின்றார்கள் என்பதற்காகவேயாகும். நாங்கள் அவ்வாறு கொள்கையில் உடன்பாடில்லாத ஒரு தரப்புடன் கூட்டு வைத்துக் கொண்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பற்றி பேச எங்களுக் குத் தகுதியில்லை. சுரேஸ் பிரேமச்சந்தீரன் மீது நாங்கள் நம்பிக்கை வைத்திருந்தோம். அவர் எங்களுடன் கொள்கைரீதியாக உடன்பட்டிருந் தார். இன்று அவர்கள் சேர்ந்திருக்கும் இடம் அதற்கு எதிரானதாகும்.

சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி. ஆர்.எல்.எவ். கட்சி பொய்யான வாக்குறுதியை வழங்கி எம்மை ஏமாற்றி விட்டது. அது எமக்குக் கவலையளிக்கிறது. தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் உதயசூரியன் சின்னத்தைப் பெற்றுக் கொண்டு புதிய அணியை உருவாக்குவோம். ஆனந்தசங்கரியோ அல்லது கூட்டணியின் உறுப்பினர்களோ எமது அணிக்குள் வரமாட் டார்கள். அவர்களின் தலையீடுகள் எமக்கு இருக்கமாட்டாது. என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனான பேச்சுக்களில் ஈ.பி.ஆர். எல்.எவ். வாக்குறுதி வழங்கியது. புதிய கூட்டணி யின் நேற்றைய (நேற்றுமுன்தினம்) நிகழ் வைப் பார்த்த போது ஆனந்தசங்கரி, சுரேஸின் அருகாமையில் அமர்ந்திருந்தார். மேலும் பல புதுமுகங்களும் இருந்தார்கள். ஈ.பி.ஆர்.எல். எவ். எங்களை ஏமாற்றி விட்டது.- என்றார்.

(ற-5,101)

கூட்டமைப்பு...

வரவு செலவுத் திட்டம் மீதான மூன்றாவது வாசிப்பு நாளை நடைபெறவுள்ளன நிலையில் கூட்டமைப்பின் தலைமை இந்த அறிவுறுத் தலை வழங்கியுள்ளது என்று தெரியவருகின் றது.

வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் என்பதே இந்த அறி வுறுத்தலுக்குக் காரணம் என்று அறியமு டிந்தது.

அதேவேளை, தமிழ்க் கூட்டமைப்பின் பங்கா ளிக் கட்சியாகவிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப். தற் போது புதிய தேர்தல் கூட்டணி அமைத்துள் ளது. அந்தக் கட்சியின் செயலரும், நாடாளு மன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. மூன்றாவது வாசிப்பிலும் அவர் கலந்து கொள்ள மாட்டார் என்று அந்தக் கட்சியின் தகவல்கள் தெரிவித்தன. (ற-5,31)

சம்பந்தனுடன்...

வம் அடைக்கலநாதனுடன் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் பேச்சு நடத்தியி ருந்தார். ரெலோ அமைப்பின் செயலர் ந. சிறி காந்தாவுடன் அலைபேசியில் இரா. சம்பந்தன் பேசியிருந்தார். அதில் இரு தரப்பினரும் நேரில் சந்தித்துப் பேசுவது என்று முடிவானது.

இன்று மாலை 6 மணிக்கு இந்தச் சந்திப்பு கொழும்பில் நடக்கவுள்ளது.

(ற-5)

இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், டிசெ. 8

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் சோபநாத் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி ஏ.எல். விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

லா லிகா தொடரில் நாளை மறுதினம் நடைபெறவுள்ள ஆட்டத்தில் பார்சிலோனாவும், வில்லாரியலும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இந்த ஆட்டத்துக்காக நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது பார்சிலோனா அணி. (ம)

வென்றது கரைச்சி

யாழ்ப்பாணம், டிசெ. 8

கிளிநொச்சி மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தால் நடத்தப்பட்ட மாவட்டச் செயலர் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் கரைச்சிப் பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.

கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாக அணியை எதிர்த்து கரைச்சி பிரதேச செயலக அணி மோதிய ஆட்டத்தில் கரைச்சி பிரதேச செயலக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

வென்றது நாவலர்

யாழ்ப்பாணம், டிசெ. 8

நவாலி சென். றொக்ஸ் விளையாட்டுக் கழகமும், இந்து இளைஞர் மன்றமும் இணைந்து மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நாவலர் அணி வெற்றிபெற்றது.

நவாலி சென். றொக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் தாவடிகாளி அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இந்த ஆட்டத்தில் சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதியது. இந்த ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தலா 7 புள்ளிகளைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம-23)

கலைமதி, கொலின்ஸ் அணிகள் முன்னேறின

யாழ்ப்பாணம், டிசெ. 8

நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், கலைமதி ஏ, கொலின்ஸ் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

கலைமதி - மைக்கல்

நியூட்டன் விளையாட்டுக் கழக மைதானத்திலேயே தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் நவிலில் கலைமதி விளையாட்டுக் கழக 'ஏ' அணியும் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆரம்பம் முதல் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய கலைமதி 'ஏ' அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது.

கொலின்ஸ் - இளைஞர்

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சைநடத்தின. 1:0என்றுகொலின்ஸின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் இரண்டு அணியினரும் பலத்த போராட்டத்தை வெளிப்படுத்தியபோதிலும் கோல் கணக்கில் மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது கொலின்ஸ். (ம-108)

கூடைப்பந்தாட்ட அணித்தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ. 8

கிரீடாசக்தி ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்கான இரண்டாம்கட்ட அணித் தெரிவு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இன்று பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இடம்பெறவுள்ளது. (ம-23)

குறுந்தூர ஓட்டத்தில் ஜாம்பவானாகத் திகழ்ந்த ஜமைக்க வீரர் உசைன் போல்ட்டுக்கு, ஜமைக்காவில் அவரது உருவத்தை ஒத்த முழுஅளவு வெண்கலச் சிலை வைக்கப்பட்டுள்ளது. (ம)

நியூட்டனின் தொடரில் நேற்றுக் குழப்பநிலை

யாழ்ப்பாணம், டிசெ. 8

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுக் குழப்பநிலை ஏற்பட்டது. இதையடுத்து சுமார் ஒரு மணிநேரம் மைதானத்தில் பதற்றம் நிலவியது.

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து வல்வை ஆதிசக்தி அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்களல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடிக் கொண்டிருந்தனர். கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியாட்டத்திலும் இரு அணிகளும் சம பலத்துடன் மோதியதால் பல நிமிடங்கள் இரு அணிகளாலும் கோல் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை. ஆனால் ஆட்டம் நிறைவடைய 8 நிமிடங்கள் இருக்கும் போது வதிரி டயமன்ஸ் அணி வீரர் லக்கீசன் தனது அணிக்கான ஒரு கோலைப் பதிவுசெய்ய அதுவே ஆட்டத்தின் இறுதி கோலாகவும் அமைந்தது.

ஆட்ட நேர முடிவில் வதிரி டயமன்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

அதன் பின்னர் ஆதிசக்தி அணியினர் மேலதிக நேரம் வழங்கவில்லை என நடுவரிடம் முறையிட்டனர். தொடரை ஒழுங்குபடுத்திய குழுவினர் ஆட்டம் நிறைவடைந்து விட்டது மைதானத்தை விட்டு வெளியேறுமாறு கூறினர். இதனால் ஆதிசக்தி அணியினருக்கும் ஏற்பாட்டாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை கைகலப்பாக மாறியதாகச் சொல்லப்படுகிறது.

அதன்பின்னர் பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (ம-422)

மீண்டும் ஸ்ரோக்ஸ்

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடருக்கான இங்கிலாந்து அணியில் பென் ஸ்ரோக்ஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரவு நேர களியாட்ட விடுதியொன்றில் நபரொருவருடன் கைகலப்பில் ஈடுபட்ட குற்றத்துக்காக ஸ்ரோக்ஸ் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி அவர் தற்போது நடைபெற்றுவரும் ஆஷஸ் தொடரில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் ஒருநாள் தொடரில் ஸ்ரோக்ஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து அணி விவரம் - மோர்கன் (தலைவர்), ஜேசன் றோய், பரிஸ்ரௌவ், அலெக்ஸ் கேல்ஸ், ஜோ ரூட், பில்லிங்ஸ், பட்லர், ஸ்ரோக்ஸ், மொயின் அலி, ரசிட், வில்லே, பிளங்கெட், கரான், மார்க் வுட், ஜேக் போல். (ம)

நியூசிலாந்துக்கு எதிரான மே.தீவுகள் அணி அறிவிப்பு

நியூசிலாந்துக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் தலா மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள், ரி-20 தொடர்கள் நடைபெறவுள்ளன.

ஒருநாள் தொடரின் முதல் மூன்று ஆட்டங்களும் முறையே டிசெம்பர் 20, டிசெம்பர் 23, டிசெம்பர் 26 ஆகிய திகதிகளிலும், ரி-20 தொடரின் மூன்று ஆட்டங்களும் முறையே டிசெம்பர் 29, ஜனவரி 1, ஜனவரி 3 ஆகிய திகதிகளிலும் நடைபெறவுள்ளன. இந்த

ஆட்டங்களுக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியே நேற்றுமுன் தினம் அறிவிக்கப்பட்டது.

ஒருநாள் ஆட்டங்களுக்கான அணி விவரம்

ஜேசன் கோல்டர் (அணித்தலைவர்), ஜேசன் மொகமட், சுனில் அம்பிறிஸ், றொன்ஸ்போர்ட் பீட்டன், கபிரியேல், கிறிஸ் கெய்ல், கைல் ஹோப், ஷைஹோப் (இலக்குக் காப்பாளர்), ஜோசப், எவின் லூயிஸ், நிகிட்டியா மில்லர், நேர்ஸ், பவல், சாமுவேல்ஸ், வில்லியம்ஸ்.

ரி-20 ஆட்டங்களுக்கான அணி விவரம்- கார்லஸ் பிரீத்வைட் (அணித்தலைவர்), சாமுவேல் பத்ரி, றொன்ஸ்போர்ட் பீட்டன், எம்ரிட், அன்றே பிளெட்சர், கிறிஸ் கெய்ல், ஜேசன் மொகமட், சுனில் நரைன், பொலார்ட், பவல், மார்லன் சாமுவேல்ஸ், ஜெரோம் ரெய்லர், சட்விக் வோல்டன், கெஸ்ரிக் வில்லியம்ஸ். (ம)

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு புதுடெல்லியில் ஆட்டம் இல்லை

காற்று மாசுபாடு காரணமாக அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு டெல்லியில், பன்னாட்டு ஆட்டங்களை நடத்தும் வாய்ப்பில்லை என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்திய - இலங்கை அணிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் முடிவுக்கு வந்த டெஸ்ட் ஆட்டம் டெல்லியில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் காற்றுமாசு பிரச்சினை பெரியளவில் பேசப்பட்டது. இது தொடர்பில் பன்னாட்டு கிரிக்கெட் சபையிடமும் முறையிடப்பட்டுள்ள நிலையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வட்டாரத்தில் இருந்து இவ்வாறு தகவல் வந்துள்ளது.

அதேநேரம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் சாதாரண அட்டவணையே '2020ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் டெல்லியில் இனி டெஸ்ட் ஆட்டங்கள் என்றவாறாக அமைந்துள்ளது என்றும் சில கருத்துக்கள் உள்ளன. (ம)

டெல்லியில் காற்று மாசு

ஐ.சி.சியிடம் முறைப்பாடு

டெல்லியில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்தில், காற்று மாசுபாட்டால் தமது வீரர்கள் அவதியடைந்தனர் என்று பன்னாட்டு கிரிக்கெட் சபையிடம் முறை யிட்டுள்ளது இலங்கை கிரிக்கெட் சபை.

சமநிலையுடன் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் முடிவுக்கு வந்தது. இந்த ஆட்டத்தில் காற்று மாசுபாடு மிகப்பெரிய பிரச்சினையாக இருந்தது. இரண்டாம் நாள் ஆட்டத்தின் போது இலங்கை வீரர்கள் நால்வருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டது. முகமூடி அணிந்தே இலங்கை வீரர்கள் களத்தடுப்பில் ஈடுபட்டனர். இந்த நிலையில் காற்றுமாசுபாடு தொடர்பான பன்னாட்டு கிரிக்கெட் சபையிடம் இலங்கை கிரிக்கெட் சபை முறையிட்டுள்ளது.

"டெல்லியில் காற்று மாசுபாடு இருந்த போது விளையாட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. காற்று மாசுபாடால் 4 வீரர்களுக்கு வாந்தி ஏற்பட்டது. இதுபோன்ற சூழலில் எங்களால் விளையாட முடியவில்லை. இதை நாங்களும் பன்னாட்டு கிரிக்கெட் சபையிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளோம். பன்னாட்டு கிரிக்கெட் சபையும் தேவையான நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தது. ஆனாலும் பன்னாட்டு கிரிக்கெட் சபையின் நடவடிக்கை என்பது நிச்சயமற்றதே" என ஜயசேகர மேலும் தெரிவித்தார். (ம)

திருமணம் தற்போதில்லை அனுஸ்கா தரப்பு மறுப்பு

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் கோக்லியும், பிரபல நடிகை அனுஸ்கா சர்மாவும் எதிர்வரும் 11ஆம் திகதி இத்தாலியின் மிலன் நகரில் திருமணம் செய்யவுள்ளனர் என்று தகவல்கள் வெளிவந்த நிலையில் அவற்றை அனுஸ்கா தரப்பு மறுத்துள்ளது.

தென்னாபிரிக்கத் தொடருக்கு முன்னதாக கோக்லி தனக்கு ஓய்வு வேண்டும் என்று கேட்டிருந்தார். இதையடுத்து அவர் இலங்கைக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் இருந்து விடுவிக்கப்பட்டார். இதனால் கோக்லியின் ஓய்வான இந்தக் காலப்பகுதியில் அனுஸ்காவுக்கும், கோக்லிக்கும் திருமணம் நடைபெறவுள்ளது என்று தகவல்கள் வெளிவந்தன. அவற்றை அனுஸ்கா தரப்பு மறுத்துள்ளது. (ம)



ஏமாற்றம்!

"இலங்கைக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெற முடியாமல் போனமை ஏமாற்றமே" என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

இந்த ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணிக்கு 410 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

நான்காம் நாள் நிறைவில் இலங்கை அணி 3 இலக்குகளை இழந்து வெறும் 31 ஓட்டங்களையே பெற்றிருந்தது. ஆனால் நேற்று முன்தின இறுதிநாளில் இலங்கை அணி சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆட்டத்தைச் சமன்செய்தது. இந்திய அணி வெற்றிபெறும் என்ற எதிர்பார்ப்புக்கள் பெரியளவில் இருந்தன. அது நிறைவேறாமல் போனதை அடுத்து தனது அதிருப்தியைத் தெரிவித்தார் கோக்லி.

'நான்காம் நாள் ஆட்டத்தின்போது இலங்கையின் 3 இலக்குகளை வீழ்த்தினோம். இதனால் இறுதி நாளில் வெற்றியைப் பெறுவோம் என்று அதிகளவில் நம்பியிருந்தேன். அது சாத்தியப்படாமல் போனது ஏமாற்றமே. இறுதி நாளில் இலங்கை வீரர்கள் நன்றாக விளையாடினர். தன்னம்பிக்கையும், கட்டுக்கோப்பும் அவர்கள் ஆட்டத்தில் தெரிந்தது" என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

பிடியெடுப்பைத் தவறவிட்டதால் வெற்றியையும் தவறவிட்டோம்

புஜாரா சொல்கிறார்

"இலங்கைக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில், பிடியெடுப்பைத் தவறவிட்டதாலேயே வெற்றியையும் தவற விட்டோம்" என்று தெரிவித்தார் இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் புஜாரா.

ஆட்டத்தின் பின்பாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே புஜாரா இவ்வாறு தெரிவித்தார்.

"எங்களது களத்தடுப்பு சரியாக அமையவில்லை. பல பிடியெடுப்புக்களைத் தவறவிட்டோம். மோசமான களத்தடுப்பால் இந்த டெஸ்டில் வெற்றியை இழந்தோம். இதை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். களத்தடுப்பில் நாம் இன்னும் முன்னேற்றமடைய கடுமையாக பயிற்சி பெறவேண்டும். ஒவ்வொரு பிடியெடுப்பும் இன்றியமையாதது" என புஜாரா மேலும் தெரிவித்தார். (ம)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்
அருமைப்பிள்ளை தம்பிப்பிள்ளை
(இளவாலை வடக்கு,இளவாலை)

மலர்வு
19.09.1936

உதிர்வு
08.11.2017

மனதில் நீங்காத நினைவுகள்
அன்பின் இருப்பிடமாய் என்றும்
உங்கள் புன்சிரிப்பும் பணியின் பணிவாய்
பாசத்தின் கருணை உள்ளம் வைத்து
கபடம் இல்லாத வார்த்தைகளும்
நீங்கள் வாழ்ந்து காட்டிய வாழ்வும்
என் எண்ணங்களில் நீங்காத
நிலையான தெய்வமாக உள்ளீர்.

எமது குடும்பத்தலைவி நோயுற்று இருந்த போதும், இறைவனடி சேர்ந்த போதும் வந்து உதவி புரிந்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

இளவாலை வடக்கு,இளவாலை. குடும்பத்தினர்

யாழ் நகரில் வேலைவாய்ப்பு

தொழில் தேடும்யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு (Graphic Disining),(Sociac Media marketing) கற்கைநெறியுடன்கூடியபயிற்சி நிறை வடைந்த பின்னர் யாழ்ப்பாணத்தில் உடனடிவேலைவாய்ப்பு.
தொடர்புகளுக்கு : 077 758 5969

NEC
விடுமுறையில் புதிய பிரிவுகள் ஆரம்பம்.
1) பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
2) மணிக்கூட்டு வீதி, யாழ். நகர்.
A/L 2018, A/L 2019
வர்த்தகப்பிரிவு
பொருளியல் : NB.கஜீதரன்
வணிகக்கல்வி : S.K. பாலசபேஷ்
கணக்கீடு: திரு.Balakajen
ஆரம்பம்:09.12.2017 சனி-8.00 மணி
A/L 2018, 2019 பிரிவுகளுக்கான கலை,வர்த்தக,தொழில்நுட்ப பிரிவுகள்.
ஆரம்பம்:09.12.2017 சனி-8.00 மணி

ACCOUNTING
MR. BALAKAJEN
B.Com (Jaf) H.N.Dip - in - Acc (ATI)
Dip - in - Edu (OUSL), M. Com (ACC)
A/L 2018, A/L 2019 Day Class
புதிய பிரிவுகள் பின்வரும் கல்வி நிறுவனங்களில் ஆரம்பமாகின்றது.
KBK ACCOUNTING CENTRE (கொழும்புத்துறை) -Sat & Sun 2 - 7 pm
KBK ACCOUNTING CENTRE (கந்தர்மடம்) -Tue & Fri 3 - 7 pm
NEC யாழ்ப்பாணம் - Sat & Sun 8 - 1pm
NEC ஆனைப்பந்தி - Sat &Sun 6 - 8 am
BPI குருநகர் - Mon & Thu 4 - 7 pm
*ஆறாம் தேர்ச்சியில் இருந்து கற்பிக்கப்படும் *தனிப்பாட அனுமதி வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 076 565 5956

45 ஆவது வருடத்தை நோக்கி.....
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ். T.P. : 077 662 9137
புதிய கல்வியாண்டு 2018
தரம் 6 - O/L வரை
தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்
மாணவர்கள் நலன்கருதியும்
தூரதேச மாணவர்கள் நலன்கருதியும்
கல்வியாண்டு 2018
தரம் 6 - O/L வரை
பிரிவு 1 சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம் : 09.12.2017 (8மணி - 2 மணிவரை)
(நாள் வகுப்பு - 11.00 மணி)
★ பாடசாலை விடுமுறை நாள்களில் 8 மணி - 2 மணிவரை நடைபெறும்.
★ யாழில் முதன்முதல் ஆரம்பமாகி பல கல்விமான்களை உருவாக்கிய பெருமை சார் நிறுவனம்
★ தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழாமினால் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் இயங்கும் நிறுவனம்.

BARATHY சித்தன்கேணி
தரம் 6 முதல் 11 வரை
புதிய வகுப்புகள் ஆரம்பம்
நாளை (09.12.2017) சனிக்கிழமை
தரம் 6, 7, 8 - 8.00 A.M. தரம் 9, 10, 11 - 7.00A.M.
உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளுங்கள்
எமது தனித்துவமும் அதிதிறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்

விஞ்ஞானம்	கணிதம்
திரு. தேவா	திரு. சிவரூபன்
திரு. பத்மநாதன்	திரு. சிவா
தமிழ்	ஆங்கிலம்
திரு. குகபரன்	திரு. சந்திரமௌளி
திரு. கஜீதரன்	திரு. கம்சிகன்
குடியுரிமை	வரலாறு
திரு. பாபுதரன்	திரு. சுதன்
திரு. சிவா	திரு. நிஜகரன்
சமயம்	சுகாதாரம்
திரு. பாபுதரன்	திரு. பார்த்தீபன்
வணிகமும் கணக்கீடும்	புவியியல்
திரு.திருக்குமரன்	திரு.சர்வேஸ்வரன்
விவசாயம்	L.C.T.
திரு. சஜீவன்	திரு. தேவதர்ஷன்

• மேற்குறிப்பிட்ட பிரபல ஆசிரியர்கள் இப் பிரதேசத்தில் வேறு எந்த கல்வி நிறுவனத்திலும் கற்பிக்கமாட்டார்கள்.
• மாணவர் தொகை வரையறுக்கப்பட்டுள்ளது. அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.

அடிலெய்ட் டெஸ்ட்டின் போது மிகவும் பதற்றமடைந்திருந்தேன்

சொல்கிறார் சிமித்

அடிலெய்ட் டெஸ்ட் ஆட்டத்தின் போது மிகவும் பதற்றமடைந்தேன் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் சிமித். இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்ற போதிலும் நான்காம் நாள் நிறைவில் இங்கிலாந்தும் தான் வெற்றிபெறுவதற்கு உரிய சாதகமான விடயங்களைத் தோற்றுவித்திருந்தது. இதையடுத்தே சிமித் இவ்வாறு தெரிவித்தார்.

"அடிலெய்ட் டெஸ்ட் ஆட்டத்தில் முதல் இரண்டரை நாளகள் ஆதிக்கம் செலுத்தினோம். இங்கிலாந்து மீண்டும் வெற்றி வாய்ப்புப் பாதைக்குள் நுழைய முடிந்தது. எனவே நான் உண்மையிலேயே பதற்றமடைந்தேன். அவர்கள் நன்றாக விளையாடினார்கள் என்றே நான் கருதுகிறேன். குறிப்பாக ஜோ ரூட், டேவிட் மலன் இருவரும் அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ரூட் ஒரு அபாயகரமான வீரர். அவர் நிலைத்திருந்தால் எங்களுக்கு நிறைய கஷ்டங்களைக் கொடுத்திருப்பார். அதிர்ஷ்டவசமாக அவரை வீழ்த்தினோம். ஆட்டத்தின் நான்காம் நாள் இரவு மிகவும் பதற்றமடைந்தேன்" என்று சிமித் மேலும் தெரிவித்தார்.

(ம)

மரண அறிவித்தல்கள்

கணபதிப்பிள்ளை ஜெயநாதன் (நாதன்)

கொக்காவில் வீதி, துணுக்காயைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப் பிள்ளைஜெயநாதன்(நாதன்)நேற்று(07.12.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு கணபதிப் பிள்ளை மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காந்திமதியின் (மதி) அன்புக் கணவரும் நிவேதன் (மாணவன் - மு / மல்லாவி மத்திய கல்லூரி), வினோஜா (மாணவி - மல்லாவி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் பாக்கியநாதன் காலஞ்சென்ற அருணகிரிநாதன் (குகன்) மற்றும் யமுனாதேவி காலஞ்சென்ற யோகநாதன் (ஈசன்) மற்றும் பத்மநாதன் (ஆசிரிய யாழ். புனித சாள்ஸ் ம. வி), காலஞ்சென்ற கணநாதன், வள்ளிநாயகி ஆகியோரின் அன்புச்சகோதனும் சரஸ்வதி, கருணாவதி, மகேஸ்வரி, சிவமதி, சிவகுரு, முனீஸ்வரன், உமாசுதன், உமாசங்கர், உமாகாந்தன், உமாகரன் ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2017) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 4.00 மணிக்கு ஆலங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 5343656 தகவல்: குடும்பத்தினர்.

திருமதி
யோகாம்பிகை இராமலிங்கம்

புங்குடுதீவு, 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகாம்பிகை இராமலிங்கம் கடந்த 05.12.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகாத்தைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - இராசம்மாதம்பதிகளின் மூத்த மருமகளும், இராமலிங்கத்தின் (முன்னாள் சிங்கர் கம்பனி விற்பனை முகவர், ஊர்காவற்றுறை) பாசமிகு மனைவியும், சுரேஸ்கரனின் (சுவிஸ்) அன்புத்தாயும், மானஷாவின் (சுவிஸ்) அன்பு மாமியும், மிதுர்ஷா (சுவிஸ்), மிதுஷன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற புவனேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரிரியை), கமலாம்பிகை (ஓய்வுபெற்ற ஆசிரியை - கனடா), பாக்கியலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை - திருகோணமலை), Dr.பேரின்பநாதன், இராஜராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவநாதன், உருத்திரமூர்த்தி, தற்பராதேவி (லண்டன்), யோகநாதன் (சுவிஸ்), லோகேஸ்வரி (நோர்வே), மகேஸ்வரி ஆகியோரின் அண்ணியும், துரைசிங்கம் (ஓய்வுபெற்ற கல்விப்பணிப்பாளர்), காலஞ்சென்றவர்களான கணேசன், சித்திரவேலு மற்றும் நவமணி, தங்கராசா ஆகியோரின் மைத்துனியும், கனகரூபவதி, தனலட்சுமி, காலஞ்சென்ற சிவஞானலிங்கம் மற்றும் பிறேமாவதி (சுவிஸ்), வைரவநாதன் (நோர்வே), காலஞ்சென்ற இன்பலிங்கம் ஆகியோரின் சகலியும், திருமதி கலைச்செல்வி விக்கினேஸ்வரன் (ஆசிரியை - யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை) இன் சிறிய தாயாரும், விஜிதா, வினோதன், வித்தியா, விந்தியா, விதுர்ஷன் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 12.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக நாரந்தனை வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.
இராமலிங்கம் (கணவர்) - 077 605 4082,
சுரேஸ் (மகன்) - 004176 386 3974
தகவல் குடும்பத்தினர்

வகுப்புக்கள்
மத்தியரசு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தரம் III க்குரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக் கான வகுப்புக்கள்
2017.12.09 சனி மு.ப. 9 மணிக்கு.
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிகள் பிரிவு யாழ்.போதனா வைத்தியசாலை முன்
T. P: 021 222 3382

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 8 சிரேஷ்ட தேசியமட்ட ஹொக்கித் தொடர் கொழும்பு டொறிங்ரன் ஹொக்கி விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரில் கலந்துகொள்ள வுள்ள யாழ்ப்பாண மாவட்ட அணியின் வீரர்களை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்துக்கு நாளை மாலை 4 மணியளவில் வருகை தருமாறு யாழ்ப்பாண மாவட்ட ஹொக்கிச் சங்கச் செயலாளர் க.கஜேந்திரன் தெரிவித்தார்.

(ம-422)

வாடகைக்கு
புதுக்குடியிருப்பு கோம்பாவில் விக்னேஸ்வரா மைதானத்திற்கு அருகாமையில் 5 அறைகளுடன் 2 குளியலறைகளுடன் வட்ட வேலியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு :- 077 539 8889
071 474 5344

விற்பனைக்குண்டு
நல்ல நிலையில் உள்ள இரும்பு பெட்டி ஒன்று விற்பனைக்கு உண்டு.
(தம்ரோ உபகரணம்)
தொடர்புகளுக்கு :- 077 646 3566
இல 63/2 கணேசபுரம் கிளிநொச்சி

சிறு நீரகம் தேவை
O+ குருதி வகையைச் சேர்ந்த 45 வயதுடைய ஆண் ஒருவருக்கு அதே வகையைச் சேர்ந்த (45 வயதுக்கு உட்பட்ட) ஒருவரின் சிறு நீரகம் தேவை.
T.P:- 077 869 5971, 077 713 1806

போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
SLPS Open / Ltd
பிரதி ஞாயிறு
9.30 - 2.30
தேசிய ஆசிரியர் தெரிவு
பிரதி ஞாயிறு
2.00 - 5.00
பிரத்தியேக பொது உளச்சார்பு
பிரதி சனி, ஞாயிறு
3.00 - 4.30
076 688 3394
D.M.I
வெலிங்ரன் சந்தி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.